பொன்னி

10.8.52 4 அண

503



சிறந்த புதிய வெளியீடுகள்!

★

நினைவுச் சின்னம்	இளமைப்பித்தன்	1—0—0
கடல் முத்து	எஸ். ஆறுமுகம்	1—0—0
உலக அரங்கில்	டி. கே. சீனிவாசன்	1—0—0
தபாலாபீஸ் விநோதங்கள்	க. சண்முகசுந்தரம்	0—8—0
இலக்கியச் சந்தையில்	மு. அண்ணாமலை	0—8—0
கம்பன் கெடுத்த காவியம்	,,	0—4—0
வீடும் விளக்கும்	சுகி	0—8—0
தாஜ்மஹால்	நா. பாண்டுரங்கன்	0—8—0
கொடி முல்லை	வாணிதாசன்	0–12—0
வருங்காலத் தமிழகம்	கா. அப்பாத்துரை	0–12—0
இந்திய மொழிச் சிக்கல்	,,	2—8—0
ஏழையின் அரசியல்	எஸ். சதாசிவம்	0—8—0
இரத்தவெள்ளம்	நிலவழகன்	0–10—0
காதலா, கடமையா?	பாரதிதாசன்	1—4—0
இரு கதைகள்	நாரா நாச்சியப்பன்	0—4—0

விவரங்கட்கு:

பொன்னி லிமிடெட்

த. பெ. எண். 1165 :: சென்னை–21

பரிசுபெற்ற தலைப்பு

25—7—52 இதழ் தலைப்புப் போட்டியில் பரிசுபெற்ற தலைப்பு :

"விரைவேன் ! குழவியைக் காணவா? கொழுநனைப் பேணவா?"

பரிசு பெற்றவர் : மா. சந்திர சேகரன், சின்னமனூர்.

★

பாராட்டுக்குரிய தலைப்புகள்

1. பெண்ணே சுமப்பவள்— பெற்றுக் காப்பவள் !

—நா. சீனிவாசன், அலவாக்கோட்டை.

2. உழைப்பிற்கரசி— உலர்ந்த சருகு !

—எம். எஸ். இராமசாமி, சென்னை-14.

3. கடமையை உணர்ந்தாள் ; நடையில் விரைந்தாள் !

—கே. வி. வி. சாமி, பாளையம்பட்டி.

4. கூடையைச் சுமக்கின்றாளா? தன் குறைகளைச் சுமக்கின்றாளா ?

—பண். வெ. இராசவேல், பண்ணுருட்டி.

5. எரு ஏந்தி எழில் ஏந்துவாள்.

—ப. கிருட்டினசாமி, மேட்டுப்பாளையம்.

6. கூடைதான் குடையோ? எளிய ஆடைதான் அணியோ ?

—மாரி. இராம. சந்திரன், சின்னமனூர்.

பொன்னி

பொருளடக்கம்

மலர் 6	ஆகஸ்டு, 10, 1952	இதழ் 12

திருவள்ளுவர் ஆண்டு 1983
ஆடித் திங்கள் 26-ம் நாள்.

பரிசுபெற்ற தலைப்பு ...	1
பத்துரூபாய் பரிசு ! ...	2
தமிழைக் காப்போம்...... ...	3
வெறுங்கலாட்டா ...	7
இனிதே ! இனிதே ! ...	11
காதலின் முடிவு ...	14
ஒற்றைரோஜா (தொடர்கதை) ...	17
ஆஸ்கார் ஒயில்டு ...	28
தம்பி (சிறுவர் தொடர்கதை) ...	35
துறவு ...	39
மனச்சாட்சி ...	47
நினைவுச் சுழல் ...	51
காதல் ...	55
குடும்பம் ...	57
பொழுதுபோக்கு ...	61
வளரும் இலக்கியம்	

★

பொன்னி சந்தா விவரம் ; உள்நாடு, இலங்கை ஆண்டு ஒன்றுக்கு ரூ. 6—0—0; ஆறுமாதம் ரூ. 3—0—0. வெளிநாடு ஆண்டு ஒன்றுக்கு ரூ. 6-12-0; ஆறுமாதம் ரூ. 3-6-0. இலங்கைக்கு வி.பி.பி. உண்டு.

சிறந்த புதிய வெளியீடுகள்!

★

நினைவுச் சின்னம்	இளமைப்பித்தன்	1—0—0
கடல் முத்து	எஸ். ஆறுமுகம்	1—0—0
உலக அரங்கில்	டி. கே. சீனிவாசன்	1—0—0
தபாலாபீஸ் விநோதங்கள்	க. சண்முகசுந்தரம்	0—8—0
இலக்கியச் சந்தையில்	மு. அண்ணாமலை	0—8—0
கம்பன் கெடுத்த காவியம்	,,	0—4—0
வீடும் விளக்கும்	சுகி	0—8—0
தாஜ்மஹால்	நா. பாண்டுரங்கன்	0—8—0
கொடி முல்லை	வாணிதாசன்	0-12—0
வருங்காலத் தமிழகம்	கா. அப்பாத்துரை	0-12—0
இந்திய மொழிச் சிக்கல்	,,	2—8—0
ஏழையின் அரசியல்	எஸ். சதாசிவம்	0—8—0
இரத்தவெள்ளம்	நிலவழகன்	0-10—0
காதலா, கடமையா?	பாரதிதாசன்	1—4—0
இரு கதைகள்	நாரா நாச்சியப்பன்	0—4—0

விவரங்கட்கு:

பொன்னி லிமிடெட்

த. பெ. எண். 1165 :: சென்னை-21

"என்? நான் செத்துக்கொண்டிருக்கிறேனா?" என்று கேட்டேன்.

"இவைகள் தாம் சாவு வருவதற்கு நிலையான சாதனங்கள்"

"இவ்வாறு தூங்குபவர்கள்..."

"ஆம். அவர்கள் சாவார்கள்"

என் கண்கள் திறந்தன. நீர் கண்ணில் சுரந்தது. "அவரே சிறையில் இவ்வாறு படுத்துறங்கும்பொழுது நானும் அவரைப்போலப் படுத்துத் தூங்கக்கூடாதா?" என்றேன்.

மறுபடியும் எனக்கு அனுமதி கிடைத்தது; இராசதானி நகருக்குச் சென்று சிறையில் அவரைப் பார்த்தேன். என் கணவனையொத்த கைதிகளின் தற்கால நிலைமையைப் பற்றி அவரிடம் வினவினேன்.

"நாங்கள் நாளுக்கு ஒரு தடவை தான் சாப்பிடுகிறோம்" என்றார்.

"அவர்கள் சாப்பிடும் ரொட்டி எப்படியிருக்கும்?" என்று கேட்டேன். அவர் ரொட்டியின் ஒரு நுனியை எடுத்து என்கையில் கொடுத்தார். அதை என்னுடன் கூடக்கொண்டு வந்தேன். அதிலே கடலை இருந்தது; கோதுமை இருந்தது; இன்னும் பல விததானியங்களும் சரக்குகளும் இருந்தன. நான் வீட்டுக்குத் திரும்பிவந்தேன். மேற்சொன்ன சரக்குகள் யாவற்றையும் சேர்த்து ஒரு ரொட்டி செய்துகொண்டேன். ஒருவேளை மட்டும் சாப்பிட்டேன். பிறகு தண்ணீர். இவ்வாறு பல மாதங்கள் கழிந்தன.

இடைவிடாமல் விசாரணை நடந்தது. எனது அறையில் உட்கார்ந்து அவரைப்பற்றி யோசித்துக்கொண்டிருந்தேன். வெளியிலிருந்து அழுகைச் சப்தம் என் காதில் விழுந்தது. என் நெற்றியில் வியர்வை முத்துக்கள் துளிர்த்திருந்தன. என் உணர்ச்சியை அடக்கிக்கொண்டு நான் வெளியே வந்தேன். என் கணவருடைய பெயரை எனது நாத்தி திரும்பவும் சொல்லி "மரணதண்டனை! மரண தண்டனை!" என்று உரத்துச் சொன்னாள்.

மீண்டும் நான் இராசதானிக்குச் சென்றேன். கடைசியாக அவரை அதே சிறையில் கண்டேன். அந்தச் சிறையிலேதான் இளைஞர்கள் தங்கள் உயிர்களை இழக்கின்றனர்; அங்கேதான், மெல்லிய மிருதுவான மலர்களையொத்த உயிர்கள் வாட்டமடைந்து அழிகின்றன.

எனது நாயகனைச் சந்தித்தேன்.

"சில சொற்கள் கலந்துகொள்வோம்" என எனது உள்ளம் கூவிற்று.

ஆனால்...அதற்கு ஏற்ற சக்தி எங்கள் இருவருக்கும் இல்லை என்று எனது உதடுகள் கூறிக்கொண்டிருந்தன. ஆமாம். அவருடைய உதடுகள் அசைந்தன. அவருடைய மெல்லிய குரல் வெளிவந்தது.

பைத்தியக்கார ஆஸ்பத்திரியிலிருந்து டெலிபோனில் பேசுபவர்: நண்பருடன் பேசுவதற்குப் போனை எடுத்தால் கனெக்ஷனே வரமாட்டேனென்கிறது. எவ்வளவு நேரம் காத்திருப்பது? நான் யாரென்று உங்களுக்குத் தெரியுமா?

ஆப்பரேட்டர்: உங்களைத் தெரியாது சார்; ஆனால் நீங்கள் எந்த இடத்திலிருந்து பேசுகிறீர்கள் என்று மட்டும் தெரியும்!

"கண்மணியே, உலகம் சாசுவதம் அல்ல. இங்குவந்தவன் திரும்பவும் போய்த்தீரவேண்டும். எவரும், மற்றவர் துணையை நாடமுடியாது. எனது தேசத்துக்காக எனது உயிரை விடுகிறேன் என்பதைத் தெரிந்துகொண்டு உன்னைப் பாக்கியவதி என்று எண்ணிக்கொள்" என்றார் அவர்.

என்னுடைய காதுகள் இம்மொழிகளைக் கேட்டன; ஆனால் கண்களிலிருந்து நீர் வெள்ளமாய்ப் பெருகிக் கன்னங்களில் வழிந்தது. திரும்பத் திரும்ப நீரின் ஓட்டத்தைத் தடுத்து எனது துணைவரை—அவர் முகத்தைக் கடைசியாகக் காண முயன்றேன். ஆனால் அதுகூடப் பலிக்காமல் போய்விட்டது.

பத்து நாட்களுக்குப் பின் அவருடைய உடலைக் கொளுத்துவதற்கு வேண்டிய சாமான்கள் தயாராய் இருந்தன.

"இதுதான் அவருடைய ஆத்மாவுக்குக் கடைசிச் சடங்கு" என்று அவர்கள் சொல்லிக்கொண்டிருந்தார்கள்.

"அப்படியானால் அவருடன் கலந்துகொள்ள இதுதான் எனக்கு ஏற்ற தருணம்" என்று எனக்குள்ளாகவே சொல்லிக்கொண்டேன். ஆனால் அவர் உடல் கிடைக்கவில்லை என்று கூறிவிட்டு. அவர்கள் திரும்பி வந்துவிட்டார்கள்.

பிறகு என்ன நடந்தது என்று என்னால் சொல்லமுடியாது. சென்ற பதினைந்து நாட்களாக நான் பட்டினி கிடந்து பிரார்த்தனை செய்துகொண்டிருக்கிறேன். என்னுடைய மனோரதம் பூர்த்தியாகும் நாள் நெருங்கி விட்டது........"

இதைச் சொல்லிவிட்டு, அந்த உத்தமி மௌனமாய் இருந்தாள். இந்தத் துன்பமயமான வரலாற்றை அவள் சொல்லிவரும்பொழுது எனக்கு மயிர்க்கூச்செறிந்தது. என் கண்களினின்றும் நீர் பெருகிற்று. எனது இதயத்தில் வலி தோன்றிற்று. பின்னர் அந்த உத்தமி ஒரு பருக்கை அன்னம் கூட சாப்பிடவில்லை. நீர் ஒரு துளியாவ குடிக்கவில்லை. இவ்வாறு பதினெ டாம் நாள் முடிந்தது. அதே இடத் தில், அதே நிலையில் உட்கார்ந்து தன் கணவனைப்பற்றிச் சிந்தித்துப் பிரார்த்தித்துக் கொண்டிருந்தாள்.

கடைசியில் அவளது 'அந்த நாள்' வந்தது. வானம் களங்கமற்று விளங்கிற்று. சூரியன் திகழும் ஒளியுடன் வெளிவந்து கொண்டிருந்தான். மக்கள் தங்கள் தொழிலில் அமர்ந்துநின்றனர்.

அவள் தன் இடத்தைவிட்டுப் பெயர்ந்துநின்றாள். தானே தூயதண்ணீர் கொண்டுவந்தாள், நீராடினாள். சுத்தமான உடை தரித்துக்கொண்டாள். பழைய இடத்தில் போய்ப் படுத்துக் கொண்டாள்.

"எனது ஆருயிர் அன்பரே, என்னை நீண்ட நாட்களாகச் சோதித்துவிட்டீர்கள்; இன்றைக்கு நான் உங்களை விடப்போவதில்லை, உங்களைப் பிரிந்து இனிக் கணமும் என்னால் தனியே இருக்க முடியாது......" என்றாள். இதைச் சொன்னதும், அவளுடைய கடைசி மூச்சு — அவளது தூய காதலின் முடிவான உயிர்க்காற்று — உடலிலிருந்து வெளியேறியது!

— எஸ். ஆறுமுகம் —

...முதல் பாகம்...

ரெஸாக்...

முதல் அத்தியாயம்

முதற் காதல்

சென்னைக் கார்ப்பரேஷன் ஸ்டேடியத்தில் நடைபெற்ற நட்சத்திரக்கிரிக்கட்விழாவைப்பற்றியபுகைப்படங்கள் பத்திரிகைகளில் வெளியாகியிருந்தன. நடிக, நடிகையரின் முகங்கள் புன்னகை வெள்ளத்தில் மிதந்திருந்தன. அது அவர்களின் பண்பு-பாணி-சூழ்நிலை. இப்படிப்பட்ட கண்கொள்ளாக் காட்சியைக் கண்ணோட்டமிட்டவாறு சுழல்நாற்காலியில் சுழன்றுகொண்டிருந்தான் ராஜேந்திரன். தன்னையே இமைக்காமல் பார்ப்பதுபோல உதட்டோரத்திலும், கண்விளிம்பிலும் புன்னகையை உதிர்த்துவிட்டு, அழகுச் சிலைகளாகக் கைகளில் ஏந்திய மட்டையுடன் காட்சிதந்த அந்தப் பாவைகளைப்பற்றிய தனித்தனி எண்ணங்கள் அவன் உள்ளத்தில்எழுந்துபரவின. அது தனி உலகம். சிந்தனை ஏடு புரண்டது. இமைப்பினில் நினைவுலகத்துக்கு வந்தான்; அவன் பெருமூச்சுவிட்டான். நட்சத்திரப் பெண்கள் அங்கு இல்லை. அந்தப் பத்திரிகை, ஸ்டூலில் தஞ்சமடைந்திருந்தது.

அப்போதுதான் பூத்து நின்ற சூரியகாந்தி காலைக் கதிரவனுக்கு அஞ்சலி செய்தது; ஆரத்தி எடுத்தது.

தாழ்ந்து கிடந்த விழிகளை ஏந்தி நிறுத்தினான் ஒளிவிழியில் ஒளிக்கதிர்க[ள்] பட்டுத் தெறித்தன, அழகு[க்] கென விடப்பட்டிருந்த ஜ[ன்]னல்களின் பூந்திரை[யை] ஊடுருவிக்கொண்டு. ராஜே[ந்]திரனின் உள்மனம் அடித்துக்கொண்டது.

டங்-டிங்...!

சுவர்க்கடிகாரம் காலம் காட்டியது.

மணி எட்டு.

'ட்ரிங்....ட்ரிங்....ட்ரிங்!'

டெலிபோன் மணி ஒலித்தது. திரும்பினன்; ரிசீவரைக் கையிலெடுத்தான்.

"ஹலோ!"

"ஹலோ...மிஸ்டர் ராஜேந்திரன் தானே.......ஓ........என் வாழ்த்துக்கள்...."

"பூங்குழலியா...."

"ஆமாம்; நீங்கள் தேறிவிட்டீர்கள்...."

"நீங்கள்...."

"நானும்தான்"

"நாம் தேறிவிட்டோமென்று சொல்லுங்கள்...."

"ஆ....மா...,ம்; நா....ம்...."

"பூங்குழலி...."

"மன்னியுங்கள். அதற்குள் ஏதோ நினைவு வந்தது. சரி, உங்களை இன்று எங்கே

சந்திக்கலாம்? வீட்டிற்கு வரட்டுமா? பீச்சிற்குப் போகலாமா? ஏன், மினர்வாவுக்குப் போகலாமே........ 'ஸாம்ஸன் அண்ட் டிலேலா' ஆடுகிறது.... காதல் படம்...."

"படத்திற்கே போகலாம். என் வீட்டுக் கதவுகள் தங்கள் வரவிற்குக் காத்துக் கிடக்கின்றன...."

"மகிழ்ச்சி"

"ஓ. கே!"

ராஜேந்திரன் ரிசீவரை 'ரெஸ்டில்' வைத்தான். ரிசல்ட் பார்க்கப் பத்திரிகை வாங்கிவர அனுப்பியிருந்த வேலைக்காரப் பையன் அப்பொழுதுதான் கையில் பத்திரிகையுடன் ஓடிவந்தான். தேறிவிட்ட செய்தி அறிந்திருந்தும் அவன் மனம் பதட்டம் கண்டது. பத்திரிகையை மேஜைமீது பரப்பிப் பரீட்சை எண்ணை மூன்றுபகுதிகளிலும்கண் குளிரக் கண்டபோதுதான், அவனுக்கு முழு அமைதி பூத்தது நெஞ்சத்திலே. தன்னை மறந்த நிலையில்நின்றான் அவன். அந்நிலைக்குக் கால எல்லை ஒரு கணம், ஒரு விநாடி ஒரு நிமிஷம் என்பதல்ல. ஆனந்தமும் அமைதியும் பின்னிப் பிணையும்போது உருவாகும் இன்பத்தவிப்பு அது. களிப்பு என்றாலே மனம் மீட்டப்பட்ட வீணையாகிவிடுகிறது! மீட்டப்பட்ட வீணை என்றால் அதன் இன்பமே அலாதிதான்!

கண்முன் சுழன்ற உலகம் ஒருநிலை கொண்டது. ராஜேந்திரனுக்குத் தன் நினைவு பிறந்தது.

பி. ஏ. என்ற இரண்டு எழுத்துக்களைச் சம்பாதித்துக்கொண்டதில் ராஜேந்திரனுக்குண்டான மகிழ்ச்சி கொஞ்சநஞ்சமில்லை. நேற்று இருந்த அவன் மனநிலைக்கும், தற்போதைய அவனது உள்ளப்பாங்கிற்குமிடையே காணப்பட்ட மாற்றத்தை நினைத்துப் பார்க்கையில் அவனுக்குக் கடக்கமுடியாத பெரும் அகழியைக் கடந்துவிட்டதுபோன்ற இன்ப நிறைவு ஏற்பட்டது.

எதிரே நிறுத்தி வைக்கப்பட்டிருந்த பீரோவில் அணிவகுத்து



அடுக்கி வைக்கப்பட்டிருந்தன புத்தகங்கள்; பொழுது போக்குச் சாதனமாக அல்ல-ராஜேந்திரனது பட்டத்திற்குரிய அறிவுக்குவியல் அழகுத்திரளாகக் காட்சி தந்தது. ஆங்கிலம், தமிழ், சரித்திரம், பொருளாதாரம், அரசியல்....! பி. ஏ!–அவனிடமிருந்து பெருமூச்சுத் தொடர் புறப்பட்டது.

இன்று வரும் பரீட்சை முடிவுபற்றி நேற்று ராஜேந்திரனுக்கு என்னென்ன எண்ணங்கள் நெஞ்சில் சுற்றிச் சுழன்றன? 'பாஸ் ஆகிவிடுமல்லவா?' என்று அடிக்கொருமுறை தன்னையே கேள்வி கேட்டுக்கொண்டு மனம்புழுங்கினான். நிச்சயம் பரீட்சை வெற்றிதான் என்னும் துணிவு கடைசிப் பரீட்சை எழுதி முடித்த அன்றே ஏற்பட்டது. என்றாலும், இனம் விளங்காத திகில் அவனையுமறியாமல் பற்றிப் படர்ந்திருந்தது. அவன் சிந்தித்தான். அதே மின்

வீச்சில் ‘பரீட்சை தேறிவிடும்’ என்று ஓர் உள்ளுணர்வு இதயத்தின் ஓர் முடுக்கிலிருந்து அமைதி சொல்லிற்று.

ராஜேந்திரன் பி. ஏ: தேறி ...ட்டான்!

ஒரே ஓட்டமாக ...டித் தன் அண்ண...ரிடம் செய்தியை வெளியிடத் துடித்தது அவன் உள்ளம். தன்னை ஒரு பட்டதாரியாக ஆக்கிவிடும் எண்ணத்தில் தன் தமையன் எடுத்துக் கொண்ட முயற்சிகளை அடுக்கடுக்காக எண்ணிப் பார்த்தான்; தனக்காக எத்தனையோ இன்னல்களை அனுபவித்துத் தன் உயிரைக் கொடுத்துத் தன்னை ஆளாக்கி, தன் வளர்ச்சியில் பெருமை காணத் தவிக்கும் சகோதரனுக்கு ராஜேந்திரன் மிகவும் கடமைப்பட்டிருக்கிறான். தந்தையின் மறைவுக்குப் பிறகு, அவ்விடத்தில் நின்று குடும்பத்தைக் காக்கும் பொறுப்பு மூத்தவன் ஆனந்தனின் தலையில்தான் விழுந்தது. அவனுக்கு அரசாங்கத்தில் நல்ல பதவி. சகோதரர்கள் இருவரும் ஒருவரையொருவர் நேசித்தனர்; அன்பு பாராட்டினர்; பாசத்தில் ஐக்கியப்பட்டனர். நேசம் வளர்ந்தது; அன்பு பெருகிற்று; பாசம் முழுமை பெற்றது.

‘அண்ணாவிடம் நான் தேறிவிட்டதைப் பற்றிச் சொன்னால் அவர் எவ்வளவு பெருமைப்பட்டுப்போவார்!’ என்று மனதிற்குள் எண்ணிப்பார்த்த ராஜேந்திர

னுக்கு ஆனந்தம் கரைகாட்டியது. ஆனந்தத்தில் ஒருவன் இளைஞன் ஆகிறான். ராஜேந்திரன் கணத்தில் இளைஞனுள் இளைஞனாக மாறிவிட்டான்—மாற்றப்பட்டான்.

ராஜேந்திரன் உள்கட்டிற்குள் நுழைந்தபொழுது, மங்களம் அவனுக்கு எதிர்ப்பட்டு வந்தாள். ஆனந்தனைக் காண விழிகளை உருளவிட்டான். அவன் இல்லை. அவள் இருந்தாள்.

"அண்ணி, நான் தேறிவிட்டேன்."

"நீ பாசானதைப் பேப்பரிலே பார்த்துவிட்டுத் தானே உன்னிடம் என் வாழ்த்தைத் தெரிவிக்க ஓடிவந்தேன்."

"ரொம்ப சந்தோஷம், அண்ணி. ஆமாம்; அண்ணா எங்கே?"

"அவர் ஆபீஸ் அலுவலாகக் காலையில் திருச்சிக்குப் புறப்பட்டுப் போனார். இந்நேரம் பேப்பரில் உன் ரிசல்ட்டைப் பார்த்திருப்பார்."

"அப்படியென்றால் என் வெற்றியைக் கண்டு அண்ணா ஆனந்தக் கூத்தாடியிருப்பார் என்று சொல்லுங்கள், அண்ணி. ஆகா........!" என்றான் ராஜேந்திரன் பொங்கும் பூரிப்புடன், பூரிக்கும் மனத்துடன்.

"ஸார், தந்தி"

அவன் திரும்பினான். ஏந்தி நின்ற சில தந்திகளைக் கையெழுத்துச் செய்து வாங்கிப் பிரித்தான். அவன் எதிர்பார்த்தது சரிதான். நண்பர்கள் அவனது தேர்வுக்குத் தங்கள் மகிழ்வைத் தெரிவித்திருக்கிறார்கள். அவர்களுக்கெல்லாம் பதிலுக்கு அவன் நன்றி தெரிவித்துக்கொள்ள வேண்டும். இது நண்பர்களிடையே அன்புப் பாலமிடும் சம்பிரதாயம்—தொன்றுதொட்டு நிலவி வரும் பழக்க வழக்கங்களின் விளைவு.

"ராஜா, தந்தியில்........"

"ரிசல்ட் பார்த்துத் தங்கள் வாழ்த்துக்களைச் சொல்லியிருக்கிறார்கள் உடன் படித்த தோழர்கள்."

"அப்படியா? சந்தோஷம். ராஜா, பதினொன்றுக்கெல்லாம் நீ சாப்பிடுவதற்குத் தயாராக இருக்கவேண்டும். தெரிந்ததா?...." என்று சிரித்த முகத்துடன் கூறிய அவள் பின் சென்றாள்.

*
* *

இலையின்முன் அமர்ந்த ராஜேந்திரன், பரிமாறியிருந்த கறிவகைகளைக் கண்டதும், உதட்டில் விரல் பதித்து அதிசயித்துப் போனான்.

"இது என்ன டின்னரா? என்னென்ன ஐட்டங்களோ இருக்கின்றனவே?"

"ராஜா, பரீட்சையில் நீ தேர்ந்துவிடுவாய் என்று எனக்கு உறுதியான நம்பிக்கை. அதனல்தான் முன் கூட்டியே சாப்பாட்டில் இன்றைக்குக் கொஞ்சம் அதிகக் கவனம் செலுத்தினேன். உன் வெற்றிக்கு இந்தச் சாப்பாடு எந்தமட்டு? ஊரிலிருந்து உன் அண்ணு வந்ததும் அவர் பங்குக்கு இன்னெரு விருந்தும் காத்திருக்கிறது...." என்று சொல்லிவிட்டுச் சிரித்தாள் மங்களம்.

"நன்ருகச் சொன்னீர்கள், அண்ணி. இதையெல்லாம் எப்படிச் சாப்பிட்டு முடிப்பதென்று நான் விழிக்கிறேன். அதற்குள் மற்ருெரு விருந்திற்கு நான் தயாராக இருக்கவேண்டுமென்று எச்சரிக்கை தருகிறீர்களே. நல்ல அண்ணி போங்கள்..." என்ருன் ராஜேந்திரன். அவன் குரலில் 'தமாஷ்' எடுப்பாக அமைந்திருந்தது.

"பேச்சிருக்கட்டும், சாப்பிடு" என்று அவள் பணித்தாள் அன்புமேவிய குரலில்.

உண்டு முடிந்தது; 'ஹாயா'கக் களைப்புத் தீரச் சோபாவில் சாய்ந்திருந்தான் ராஜேந்திரன். அருகிலிருந்த நாற்காலியை இழுத்துப் போட்டுக்கொண்டு உட்கார்ந்தாள் மங்களம். அவள் ஒரு முறை அவனைத் தீவிரமாகப் பார்த்தாள். அவன் முகத்தில் கேள்விக்குறி யொன்று கொக்கிபோட்டிருந்தது. அவள் கேள்வி கேட்க முன்னுரை துவங்கிஞள்.

"ராஜா, பி. ஏ. யும் படிச்சுப் பாசாகிவிட்டது. உன்வரை எங்களுக்கு இன்னும் ஒரே ஒரு கவலை மிஞ்சியிருக்கிறது. உன் கல்யாணம் பற்றித்தான் சொல்கிறேன். உன் அண்ணுவும் பல தடவை என்னிடம் கேட்டுவிட்டார். தை பிறந்ததும் முடித்துவிட்டால்ரொம்பவும் நல்லது. நீ என்ன நினைக்கிருய்?...."

'கல்யாணம்' என்ற சொல்லைக் கேட்டதும், ராஜேந்திரனுக்குப் புதிய உணர்ச்சி, புதிய உள்ளம், புதிய நினைவு அவன் உள்ளத்தைப்பற்றிக் கொண்டது. முகத்தில் உள்ளம் பிரதிபலித்திருந்தது. புதிய உணர்ச்சி! புதிய உள்ளம்! புதிய நினைவு!

படிக்க எடுத்த 'மாப்பஸான்' நாவலை அப்படியே மூடிவைத்தான் அவன்.

அவள் அவன் மாற்றத்தைக் கவனிக்கத் தவறவில்லை.

"அண்ணி, கல்யாணத்திற்கு இப்போதென்ன அவசரம்? மெதுவாகப் பார்த்துக் கொள்ளலாம். படித்து முடித்த சூட்டோடு சூடாக வேலை ஒன்றையும் தேடிக் கொண்டாகவேண்டும். நானும் 'நாலுரெண்டு' சம்பாதித்தால்தான் அண்ணுவுக்கும் கைக்குதவியாக இருக்கும். குடும்பத்திற்கும் நல்

லது........அண்ணாவும் என் பேரிலிருக்கும் பாசத்தால் தான் இப்படிச் சதா என் திருமணத்தைப் பற்றிப் பேசுகிறார். காலம் வரட்டும்; காத்திருக்கிறேன், அண்ணி....”

இன்ன பதில் கூற வேண்டுமென்ற சிந்தனை கூட அவனுக்கு இல்லை; பதில் கூறிவிட்டான்.

மைத்துனன் பேச்சைக் கண்டு மங்களம் ஆச்சரியப் பட்டாள்; தொட்டும் தொடாமலும் அவன் உள்ளம் ஒலி பரப்பிய வார்த்தைகளைக் கேட்டுத் திடுக்கிட்டாள்; பதில் சொல்கையில் அவன் முகம் கணத்தில் மாறிவிட்ட போக்கைக் கண்டு வேதனை அடைந்தாள். அவன் பதில் மங்களத்தை அப்படிச் செய்துவிட்டது. ஆனல், பட்டென்று ஒரே வார்த்தையில் நேர்வழியாக, அதுவும் அவள் ஆசையுடன் கனவு கண்டவண்ணம் அவன் பதில் சொல்லியிருந்தால், மங்களம் எவ்வளவோ களிப்படைந்திருப்பாள்!

‘இன்னெரு நாள் கேட்டுக் கொள்ளலாம்’ என்ற நினைவுக்குறிப்புடன் அவள் சென்றாள்.

ஆனல்........

அதே சமயம், ராஜேந்திரனின் மனதில் வீசிய சூறாவளியை யார் அறிவார்கள்? சூறாவளி—ஆம்! மங்களம் எப்படி அறிவாள்?

* * *

இருக்கையைவிட்டு எழுந்த அவன் கைகளைப் பிசைந்தவாறே, தலைக்குமேலே பார்வையைத் திசை திருப்பினன். சுவரில் மாட்டியிருந்தது அந்தப் புகைப்படம். ஹைஸ்கூலில் வாசிக்கையில் அது எடுக்கப்பட்டது. ஆசிரியர்களும் பையன்களுமாகக் காணப்பட்ட கும்பலில் அழகு நிலாப்போலக் காட்சியளித்தது அந்தப் பெண் உருவம். அதரங்கள் முறுவலிக்க வீற்றிருந்த அச்சிறுமியின் அழகிய தோற்றத்தைத் திறந்த விழி மூடாது பார்த்து நின்றான் அவன், அழகை ரசனைப் பொருளாக்கி ரசிக்கும் கலைப்பண்பு பூண்டவனைப் போல.

‘கல்யாணம்’ என்று மங்களம் ஆரம்பித்த வார்த்தைகள் ராஜேந்திரனின் இதய அடிவாரத்தில் சுரங்கம் வைக்கப்பட்டிருந்த ஆசையை, கனவை, நினைவை வெளிக்கிளப்பி விட்டன.

சிறுமி மல்லிகா ஆடவந்த பொற்பாவை போல அவன் மனக்கண்முன் ஆடினாள்.

அப்பொழுது ராஜேந்திரன் மூன்றாம் பாரத்தில்

படித்தான். அந்த ஆண்டு புதிதாக ஒரு பெண்ணும் சேர்ந்தாள். அரைப்பரீட்சை முடிந்து மார்க்குகள் வாசிக்கப்பட்டன. அதில் அந்தப் பெண் மல்லிகாதான் முதல். ராஜேந்திரன் மலைத்துப் போனுன். தனக்கு முதல் மார்க்குக் கிடைக்குமென்று கொண்டிருந்த ஆசையில் மண்ணைத் தூவிவிட்டாளே அவள் என்ற குறை அவனைப் பெரிதும் வதைத்தது. அன்று மாலை பள்ளி விட்டதும், அவனுக்குத் தேறுதல் கூறிநின்ருள் மல்லிகா. அவனுக்குச் சொல்லில் வர்க்க முடியாத அன்பு பெருக்கெடுத்தது மல்லிகாவின் மீது. பூமனத்தைப் போற்றியது பிஞ்சுமனம். புது நட்புறவில் இருவரும் நெருங்கிப் பழகினர்கள். இளம் உள்ளங்கள் இரண்டும் ஒரு மனதாய்ப் பின்னிப் படர்ந்தன, அன்பு—பாசம் என்ற கொழுகொம்பின் துணையால்.

அடுத்த பரீட்சையில் ராஜேந்திரனுக்குத்தான் முதல் 'ராங்க்.' வேண்டுமென்று மல்லிகாவே விட்டுக்கொடுத்த ரகசியத்தை அவன் பிறகுதான் தெரிந்து கொண்டான்.

அடுத்த ஆண்டு விடுமுறை முடிந்து பள்ளிக்கூடம் போனதும், மல்லிகா வேறு ஜில்லாவுக்குப் போய்விட்ட சேதி ராஜேந்திரனுக்கு எட்டியது; செயலிழந்தான். கண்ணீருங் கம்பலையுமாக அன்றைப் பொழுதை நழுவவிட்டான். திரும்பவும் மல்லிகாவைச் சந்திக்க அவனுக்கு வாய்ப்புக் கிடைக்கவில்லை. அவள் பிரிவில் பெரும் சூன்யம் தன்னுள் இடைவெளிவிட்டிருப்பதை அவன் அடிக்கடி உணரலானுன்.

காலம் நிற்குமா, என்ன?

மல்லிகாவை அவன் நினைக்கும்போதெல்லாம் எங்கோ படித்த 'ஒருமணி நேரத்து உன்னத அழகி' என்ற வரிகள் நெஞ்சில் சிந்தும். ஒருகால், மல்லிகாவும்கூட ராஜேந்திரனுக்கு ஒரு மணி நேரத்து உன்னத அழகியாக அழகுகாட்டி நிற்பதுடன் இருந்துவிடுவாளோ....! அவன் நெஞ்சுருகினன்.

சில மாதங்களே அவனுக்கு மல்லிகாவின் நட்புக் கிடைத்தது. அவையெல்லாம் சுவர்க்க நாட்களாயிற்றே! அத்தகைய கனவுலக நாட்கள் எப்போதும் அமையக்கூடாதா? அவை மீண்டும் திரும்பக்கூடாதா?

மல்லிகா பிரிந்துவிட்டாள். பிரிவின் துயர் மிகப் பொல்

> புத்திசாலிகள் காரணங்களால் குறிப்புணர்கின்றனர்; சாதாரணமானவர்களுக்கு அனுபவம் ஆதாரம்; முட்டாள்கள் தேவைக்கு அடக்கம்; அனைத்திற்கும் கீழானவர்கட்கு இயற்கையே துணை!
>
> —சிசெரோ

லாதது. ஆனாலும், பழைய பாசத்தின் தொடர்பை வளப் படுத்தும் உரம்போலும் பிரிவு! இப்பொழுதெல்லாம் ராஜேந்திரனின் இதயம் முழுவதிலும் மல்லிகா அல்லவா ஆட்சி நடத்துகிறாள்! இதை மல்லிகா அறியச் சந்தர்ப்பம் கைகொடுத்து உதவினால்........? அவளைப்பற்றி எதையும் தீர்ப்புக்கூற இயலவில்லை அவனால்.

சற்றுமுன், அண்ணி கல்யாணப் பேச்சை எடுத்ததும், அவனுக்கு எடுத்த எடுப்பில் மல்லிகாதான் நினைவின் நடு நாயகமாக முன்தோன்றினாள். அடைந்தால் அவளைத்தான் அடையவேண்டும் என்ற வைராக்கியம் நெஞ்சில் வலுப்பெற்றது. ஆனால் இந்த எண்ணத்தை எப்படிச் சொல்வது? மல்லிகா எங்கிருக்கிறாளோ........?

'மீண்டும் மல்லிகாவைக் காணும் பாக்கியம் பெற்றால்...' என்று யோசித்துப் பார்த்த ராஜேந்திரனுக்கு மகிழ்ச்சிமீறிக் கண்களில் கண்ணீர் முத்துக்கோர்த்தது. மல்லிகாவின்மீது அவனுக்கு இருந்த 'முதற் காதல்' அது! அது அவனுடைய உள்ளத்தின் உள்ளமாக, உயிரின் உயிராக, துடிப்பின் துடிப்பாகப் பின்னப்பட்டிருந்தது அவனது உள்ளத்தில், உயிரில், துடிப்பிலெல்லாம்!

'மின்னலிடைக் கன்னல்மொழி
இன்னும் சொன்னால்
விரிவுலகில் ஒருத்தி நீ அழகின் உச்சி'

ராஜேந்திரன் இதழ் பிரித்துச் சொல்லடுக்கைப்பிரித்து விட்டான் அவனுக்கு மனம் தாங்காப் பெருமை; மயக்கம்!

அவன் உள்ளம், துடிப்பை மீட்டுக்கொண்டு இயங்க ஆரம்பித்தது.

மணிக்கட்டில் சட்டையை நீக்கிவிட்டுக் கைக்கடிகாரத்தைப் பார்த்தான். மணி மூன்று!

"வணக்கம்"

திரும்பினான், சுருங்கிக் கொடுத்த விழிகளில் விழிப்பைத் திணித்தவனாய். கண் வட்டங்களில் பனி பெய்திருந்த நீர் மணிகளைக் கைக்குட்டையால் லாவகமாகத் துடைத்துக்கொண்டான்.

"வணக்கம், பூங்குழலி...."

"என்னை மன்னிப்பீர்களா?"

"முதலில் நீங்கள் அமருங்கள்."

"மன்னிப்பு...."

"காரணம்...."

"காரணத்துக்குரிய காரியம் இருந்துதானே தீரும். உங்கள் தனி அறையில் போட்டிருக்கும் எச்சரிக்கையை மீறிவிட்டேன்"

"ஓஹோ, உத்தரவின்றி உள்ளே வந்ததற்காகவா?.... நான் என்னவோ ஏதோவென்று பயந்துபோனேன். உள்ளே வந்துவிட்டாலே உத்தரவு கிடைத்து

விட்டதாகப் பொருள் தானே....!"

"சட்டம் என்றால் சட்டம் தான்"

"நீங்கள் 'லா' படிக்கப் போகிறீர்களா?"

"நீங்கள் படித்தால்........ நானும் படிப்பேன்."

"என்ன?"

"ஆம்; நாம் படிக்கலாம்!"

சிறிது நேரம் இருதரப்பிலும் மௌனம் குடிகொண்டிருந்தது. ஒருவரை ஒருவர் அப்போது தான் பார்ப்பவர்கள்போல அப்படிப் பார்த்துக் கொண்டார்கள்.

"நம் சினிமாத்திட்டம்"

"பூங்குழலி, ஒரு நிமிஷம் காத்திருங்கள்; இதோ வந்துவிடுகிறேன்."



உடுக்கும் அறைக்கதவு மூடித்திறந்தது.

புன்னகையும் புது நிலவுமாகத் தோன்றினான் ராஜேந்திரன் 'டீக்'கான உடை அலங்காரத்தில். நிறுத்திவைக்கப்பட்டிருந்த நிலைக்கண்ணாடியில் தன் உருவம் கண்டான் அவன். நூல் இழையில் பிரிவு காட்டி நின்ற பூங்குழலியின் முகம் அவன் கண்களில் பிரதிபலித்தது. இதழ்களில் பனிச்சிரிப்பு; கண்களில் குறும்புச்சிரிப்பு. மாலை உடையில் அவள் தேவகன்னிகைபோலிருந்தாள்.

"புறப்படலாமல்லவா?"

எதையோ மறந்து வைத்துவிட்டுத் தேடுபவன்மாதிரி பூங்குழலியின் கண்களிலே ராஜேந்திரன் எதையோ தேடினான். அன்பா? தோழமையா? காதலா?

அவள் கண்கள் மூறியுண்டு விம்மின!

ராஜேந்திரனும் பூங்குழலியும் ஏறிச்சென்ற 'மாரிஸ் மைனர்' போன திக்கையே இமை சுருங்காமல் பார்த்துக் கொண்டிருந்தாள் மங்களம். நாளை நடக்கவிருக்கும் ஏதோ ஒன்றை உருவாக்கிக் கனவு காணும் தீர்க்கதரிசியைப் போலிருந்த அவளுடைய உள்ளத்தினின்றும் பெருமூச்சு வெடித்துப் புறப்பட்டுக்கொண்டிருந்தது அப்பொழுது!

[தொடரும்]

மு. அண்ணுமலே

ஆஸ்கார் ஒயில்டு

விபரீத வழக்கு

வழக்கோ புதியது. வழக்கிடுபவரோ ஓர் எழுத்தாளர். எதிரியோ ஒரு பெருமகன். விஷயமோ மிகக் கேவலம்.

வழக்குத் தொடங்கிய நாளில் அற மன்றத்துக்கு எதிரில் அளவிட இயலாத கூட்டம்—பத்திரிகை எழுத்தாளர், நிருபர்கள், பெண்கள் இப்படி எத்தனே எத்தனேயோ வகையான கும்பல்கள். ஆஸ்காரின் பகைவர் சிறு சிறு கூட்டமாக நின்று நகையாடிக்கொண்டிருந்தனர். ஆஸ்கார் ஒயில்டின் ரசிகர்கள் கூட்டமாகிய இளேஞர் பட்டாளமும் நிறைந்து நின்றது.

வழக்கைப்பற்றி எழுதுமுன்பு வழக்கில் தொடர்புகொண்ட சிலரைப்பற்றி முக்கியமாகச் சில எழுதித்தான் செல்லவேண்டும்.

*
* *

1891-ம் ஆண்டு—ஒரு நாள் மாலே.

ஆஸ்கார் ஒயில்டு தன் அறையில் அமர்ந்து ஏதோ ஒரு புத்தகத்தைப் புரட்டிக்கொண்டிருந்தார். அப்பொழுது இருவர் உள்ளே நுழைந்தனர். ஒருவர் லியோனல் ஜான்ஸன் (*Lionel Johnson*) என்னும் கவிஞராவார். அவர் அடிக்கடி ஆஸ்காரைப் பார்க்க வருவதுண்டு. அன்று தன்னேடு கூட ஆல்பிரட் டுக்ளாஸ் (*Alfred Douglas*) என்னும் ஆக்ஸ்போர்டு மாக்டலன் கல்லூரி மாணவனேயும் அழைத்து வந்திருந்தார். பின்னல் அந்த இளேஞன் இங்கிலாந்தின் பெருமகனுக (*Lord*) உயர்வு பெறுகிருன்.

ஆஸ்கார் ஒயில்டு அந்த இளேஞனே ஒருமுறை ஏற இறங்கப் பார்த்தார். யார் என்று அறிய விரும்புவதுபோல் இருந்தது அப்பார்வை. இளேஞன் மிகக் கவர்ச்சிகரமாக விளங்கினுன். லியோனல் ஜான்ஸன் அறிமுகப் படுத்திவைத்தார்.

"ஆல்பிரட் டுக்ளாஸ்......க்யூன்ஸ் பரி பெருமகனின் மைந்தன்..."

"ஒகோ, அப்படியா?" என்ருர் ஆஸ்கார். அவர் முகத்தில் மகிழ்ச்சிக் கோடுகள் படர்ந்தன.

அந்த இளேஞனின் தோற்றம் அவரிடம் ஒருதனிக் கவர்ச்சியை ஏற்படுத்தியது. கவர்ச்சியின் வேகத்திற்குக் கலேஞன் அடிமைப் பட்டான். சிறிது நேரம் மூவரும் தேனீர் அருந்திவிட்டுப் பேசிக்கொண்டிருந்தனர். இளேஞன் விடைபெற்றுக்கொள்ள எழுந்தபோது ஆஸ்கார் அவனே மேல் மாடிக்கு அழைத்துச்சென்று தன் மனேவியிடம் அறிமுகப்படுத்திவைத்தார்.

ஆஸ்கார் ஒயில்டுக்கும் ஆல்பிரட் டுக்ளாசுக்கும் இடையே ஏற்பட்ட முதற் சந்திப்பு இதுதான். போரிஸ் பிரேசல் (*Boris Brasol*) என்பாரது மொழியிலே சொன்னல் 'ஆஸ்கார் ஒயில்டு' என்ற சோக நாடகத்துக்கு முதல் அங்கமும் அதுதான்.

அந்த இளேஞனுக்கு இருபது ஆண்டு நிறைந்துகொண்டிருந்தது. ஆஸ்காருக்கு முப்பத்தாறு ஆண்டுகள் நடந்து முடிந்தன. இருவரிடையேயும் உண்டான சந்திப்புத் தொடர்ந்து நடந்தது. அடிக்கடி

இளைஞன் அவரைப் பார்க்கவந்தான். அவர் அவனது வரவை மிக விரும்பினார். அவன் வரவைப் பல சமயங்களில் எதிர்பார்த்துக் கிடந்தார். அடிக்கடி அவனுக்கு வருமாறு கடிதங்கள் எழுதுவார். வராவிட்டால் தந்தி அடிப்பார். வந்தபொழுது அவனைப் பெரிய விடுதிகளுக்கும் கடற்கரைக்கும் கூட்டிக்கொண்டு செல்வார். கேட்காதபொழுதே பணம் கொடுப்பார். அவன் படிக்கும் கல்லூரிக்குச் சென்று அவனது அறையில் தங்குவார். தம் எழுத்துக்களை மிக விரும்பி ஈடுபடும் இளைஞர்களிடையே தாம் ஒரு அருமைச் சரக்காக இருப்பதுதான் நல்லது என்பதை அவர் உணரவில்லை. ஆல்பிரட் டுக்ளாசுக்கும் ஆஸ்கார் ஒயில்டுக்கும் இடையே வளர்ந்த அன்பு, அதைப் பார்க்கும் பிறருக்கு அருவருப்பாகவும், ஆபாசமாகவும் காட்சியளிக்கத் தொடங்கிற்று. உண்மையில் தூய்மை நிலவியிருப்பினும் வெளிக்காட்சி பழிக்கு இலக்காகி-நின்றது.

ஆஸ்கார் ஒயில்டுக்கு அந்த இளைஞன்பால் ஏற்பட்ட அளவு கடந்த பற்றுக்குப் பல காரணங்கள் கற்பிக்க இடமுண்டு. சிலர், பெருங் குடும்பத்தைச் சேர்ந்த பிள்ளை என்பதற்காக ஆஸ்கார் அவனோடு பழகத் தொடங்கினர் என்றும் அதனால் அவர் பெருமை பெறுவதாக நினைத்திருக்கலாம் என்றும் எண்ணிப் பார்க்கின்றனர். ஆல்பிரட் டுக்ளாஸ் இளைஞனாக இருக்கும்போது கவிதைகள் எழுதவேண்டும் என்று பெரும் விருப்புடன் இருந்தான். நல்ல கவிதைகளும் எழுதினான். ஆக்ஸ்போர்டு கல்லூரியாரால் வெளியிடப்பட்ட கல்லூரி இதழில் 'இலையுதிர் காலம்' (*Autumn days*) என்ற அவனுடைய கவிதை வெளிவந்தது. அவ்வாறு கவிதையில் ஊறிய அவன் உள்ளம் ஓர் எழுத்தாளனை நாடிச் செல்வது இயல்பே. ஓர் எழுத்தாளனோடு பழகுவதை அவன் மேலும் பெருமைப்படத்தக்க தொன்றாகக் கருதியிருக்கக் கூடும். பல சமயங்களில் தான் எழுதும் கவிதைகளை ஆஸ்கார் ஒயில்டுக்கு அனுப்பி, 'எப்படியிருக்கிறது? படித்துப் பார்த்துச் சொல்லுங்கள்' என்று எழுதுவான். அவரும் படித்து அவரது ரசனையை எழுதுவார். ஆனால் அது விமரிசன பாவனையில் இருந்தது என்று கூறுவதற்கில்லை. ஆனால் அது பக்தி ததும்பிய ரசனையாகவே இருந்தது.

* * *

ஆல்பிரட் டுக்ளாசின் தந்தையார் க்யூன்ஸ்பரி பெருமகனவர். தன் தாயாருக்கும் தந்தையாருக்கும் இடையே ஏற்பட்ட மனத்தாங்கல் காரணமாகத் தாய், தந்தையைவிட்டு விலகி வாழ்ந்தாள். தாயுடனே ஆல்பிரட் டுக்ளாசும் வாழத்தொடங்கினான். தன் மகன் தாயின் கண் காணிப்பிலே வாழ்வதைக் கண்டு வெறுத்த க்யூன்ஸ்பரி பெருமகனார் எப்போதும் தாய்க்கும் மகனுக்கும் தொல்லை கொடுப்பதையே தன் வேலையாகக்கொண்டார். தன் மகன் ஆஸ்கார் ஒயில்டோடு கூடிக்கொண்டு சுற்றுவதை நினைக்க நினைக்க மேலும் அவருக்கு வயிறு பற்றி எரிந்தது. மகனுக்கு எத்தனையோ கடிதங்கள் எழுதிக் கூடா நட்பை விட்டுவிடுமாறு 'உபதேசம்' செய்தார்; மிரட்டினார். நேரே கண்டு கண்டித்தார்; வற்புறுத்தினார். ஒன்றுக்கும் பையன் அசையவில்லை. தந்தையின் சொல்லை மீறியே நடந்தான். எப்படியாவது ஆஸ்கார் ஒயில்டைவிட்டுத் தன் மகனைப் பிரிக்கவேண்டும் என்று அவர் பாடுபட்டார். அதனால் ஆஸ்கார் ஒயில்டும் அவரது வன்கண்மையான பகைமைக்கு ஆளாக வேண்டிய தாயிற்று.

ஒருநாள் ஆஸ்கார் வாழ்ந்த அறைக்குச் சென்று அங்கிருந்த பணியாளிடம் ஒரு துண்டுக் காகிதத்தை விட்டெறிந்துவிட்டுக் க்யூன்ஸ்பரி பெருமகன் திரும்பினார். அத்துண்டுத்

தாளில் 'ஆஸ்கார் ஒயில்டு—ஒரு விபரீதப் புணர்ச்சிக்காரன்' என்று எழுதப்பட்டிருந்தது. ஆஸ்கார் வீட்டுக்குத் திரும்பி வந்தபோது அந்தத் தாளை வேலைக்காரன் கொடுத்தான். தன்னைக் க்யூன்ஸ்பரி இப்படி அவமானம் செய்வதையும், தொடர்ந்து தொல்லைகொடுத்துக் கொண்டிருப்பதையும் அவரால் சகித்துக்கொள்ள முடியவில்லை. 'இந்த மனிதனின் தொந்தரவு பெரிதாகி விட்டதே' என்று வாய்விட்டு முணுமுணுத்துக்கொண்டார் ஆஸ்கார். அந்தத் தாளைக் கொண்டு அறமன்றத்தில் க்யூன்ஸ்பரி பெருமகனை எதிர்த்து மானநஷ்ட வழக்குத் தொடுத்தார். முதலில் அவர் வழக்குத் தொடுக்கத்தான் வேண்டுமென்று தீவிரமாக இல்லை. ஆனால் சூழ்நிலையும், உணர்ச்சியும், பிறர் யோசனைகளும் அவரை அறமன்றத்துக்கு இழுத்துச் சென்றுவிட்டன. அவ்வழக்கு நடைபெற்றால் தன் பெயர்தான் சந்திக்குவரும், தானே அவமானத்திற்குள்ளாக வேண்டியிருக்கும் என்று அவர் உணராமலில்லை. நிலைமை பத்தினி, தன்னைக் கற்பழித்தவன்மேல் வழக்குத் தொடுத்ததைப்போலத்தான் ஆகும் என்று ஆஸ்காருக்குத் தெரியும். இருந்தாலும் வழக்குத்தொடுக்கப் பட்டது.

இந்த வாய்ப்பைத்தான் க்யூன்ஸ்பரி பெருமகன் எதிர்பார்த்துக்கொண்டிருந்தார். நேருக்கு நேரான எதிரியாகிவிட்டார் ஆஸ்கார். லார்டு க்யூன்ஸ்பரி தன் முழு வன்மையையும் கொண்டு தன் எதிரியை அழித்துவிட முனைந்தார்.

> இன்றைய உலகத்திலே இரண்டு வகையான பேர்கள்தாம் சுகமாக வாழ முடியும்—ஏமாற்றுவித்தை தெரிந்தவனும், துறவியுந்தான்!
>
> —காண்டேகர்

எப்படியாவது இந்தப் பயலைச் சந்திக்கு இழுத்துவந்து அவமானப்படுத்த வேண்டும் என்பதே அவரது முழு நோக்கம். வெறியோடு தன் செயல்களைத் தொடங்கினார். கர்ஸான் (Curson) என்னும் பெயர்பெற்ற வழக்கறிஞரைத் தனக்கு ஏற்பாடு செய்துகொண்டார். வழக்குக்கு வேண்டிய சான்றுகள், கடிதங்கள் முதலியவற்றைக் கள்ளத்தனமான வழிகளில் சேர்த்தார். ஆஸ்கார் ஒயில்டு வழக்கைத் தொடுத்தாரே ஒழிய, அது வெற்றிபெறுவதற்குரிய வழிகளைக் கையாளவில்லை. அவருடைய கலையுள்ளத்திற்கு அவை பெரும் தொலைப்பாக இருந்தன. நல்ல வழக்கறிஞர் ஒருவரை அவர் ஏற்படுத்திக்கொள்ளவில்லை. ஏற்படுத்திக்கொண்டவரிடமும் வழக்குக்கு வேண்டிய உண்மைகளைக் கூறவில்லை. ஒன்றுவிடாமல் ஒழிவு மறைவில்லாமல் தன் வழக்கறிஞரிடம் சொல்லவேண்டிய வாய்ப்புக்களிலும் சொல்லாமல், எத்தனையோ ஆயிரம் விதமான புளுகுகளைப் புளுக வேண்டியதாயிற்று. அந்த வழக்கு அவருக்கே மோசமானதாகவும் வெட்கமானதாகவும் இருந்ததால், தன் சொந்த வழக்கறிஞரிடமே தாறுமாறாக உளறி வைத்தார்.

வழக்குத்தொடங்கிற்று. வாழ்வின் அழிவுகாலமும் தொடங்கிற்று.

க்யூன்ஸ்பரி பெருமகன் விசாரிக்கப்பட்டார் 'தன் மகன் ஆஸ்கார் ஒயில்டோடு சேர்ந்துகொண்டு சுற்றுகிறான். அத்துடன் நில்லாது, பாவ வழிகளிலும் ஈடுபடுகிறான். அவனைப் பாவப் படுகுழியினின்று மீட்டுக் காக்கவே கருதினேன். மகனைக் காக்கின்ற ஒரே நோக்கத்தால்தான், நான் அவ்வாறு ஆஸ்கார் ஒயில்டைப் பற்றி எழுத நேர்ந்தது' என்று க்யூன்ஸ்பரி பெருமகன் எடுத்துரைத்தார்.

உண்மையில் அவருக்குப் பிள்ளையைக் கரையேற்றவேண்டுமென்றோ, பிள்ளைக்கு நன்மைபுரியவேண்டுமென்றோ உள்ளூற விருப்பமில்லை.

வெளிக்குப் போலியான சொற்க ளால் அலங்கரித்துக் கொண்டாரே தவிர வேறென்றில்லை. தன் சொல் கேளாத பிள்ளையையும் மனைவியை யும் எவ்வாறெல்லாம் அலைக்கழிக்க முடியுமோ அவ்வாறெல்லாம் அலைக்கழிக்க நினைத்தார். அந்த நோக் கத்தில் வெறியோடு நின்ற விலங் குக்கு இடையே வந்த ஆஸ்கார் பலி யாக வேண்டியிருந்தது. ஒரு தகப் பன் தன் மகனைக் காக்க நினைக்கிறான் என்ற விஷயத்தில் எவரும் ஐயப் பார்வையைச் செலுத்தவில்லை.

க்யூன்ஸ்பரி பெருமகனாரின் வழக்கறிஞர் கர்ஸான், ஆஸ்கார் ஒயில்டைக் குறுக்கு விசாரணை செய் யத் தொடங்கினார். அவர் கையில் ஒரு கடிதம் இருந்தது. அது ஆஸ் கார் ஒயில்டால் ஆல்பிரட் டுக்ளா சுக்குஎழுதப்பட்டது.

"இந்தக் கடிதத்தை நீர்தானே எழுதினீர்?" என்று கேட்டார் கர்ஸான்.

"ஆமாம்"

"யாருக்கு?"

"க்யூன்ஸ்பரி பெருமகனின் மைந் தனுக்குத் தானே" என்றார் கர்ஸான்.

"ஆமாம்" என்றார் ஒயில்டு.

கடிதம் வாசிக்கப்பட்டது.

"என் அருமை எனக்குரிய இளவலே,

உன் கவிதை மிக இனிது; அது மிக அருமையானது. உன் ரோசாபோன்ற மெல்லிய உதடு கள் வெறிதேங்கிய முத்தத்தைப் பொழியவல்லன. அவை இசை கலந்த கவிதை மழையைப் பொழியமட்டும் சளைத்தவைகளா என்ன?

நீ கவிதைக்கும் உணர்ச்சிக்கும் இடையே உலவி வருகிறாய்.

கிரேக்கர்கள் காலத்தில் அப் போலோ யாரை வெறியோடு காதலித்தானோ அந்த ஹயாஸிந்த் நீதான்.

எதற்காக நீ லண்டனில் தனி யாக இருக்கிறாய்? நீ எப்பொழுது சாலிஸ்புரிக்குச் செல்லப்போகி றாய்? அங்கே போய் உன் பொழுதை வீணாக்க நினைக் கிறாயா? நீ எப்பொழுது விரும்பி னாலும் இங்கே வரலாம். நீ இல் லாததே இவ்விடத்திற்கு ஒரு குறையாக இருக்கிறது.

வேண்டுமானால் சாலிஸ்பரிக்கு முதலில் செல். என்றும் உன் பால் இறவாத அன்புடைய,

ஆஸ்கார்"

ஆஸ்கார் ஒயில்டின் பார்வைக்காக ஆல்பிரட் டுக்ளாஸ் தான் எழுதிய கவிதை ஒன்றை அனுப்பியிருந் தான். அதற்கு மறுமொழிக் கடிதம் தான் மேலே கண்டதாகும். இந்தக் கடிதமும், இதுபோன்ற சில கடிதங் களும் க்யூன்ஸ்பரி பெருமகனுக்கு எப்படியோ கிடைத்துவிட்டன.

இந்தக் கடிதத்தைக்கொண்டு மேலும் வழக்கறிஞர் தம் குறுக்கு விசாரணையைத் தொடர்ந்தார்.

"உங்கள் வயதைக் காட்டிலும் மிகக் குறைந்த வயதுடைய ஒரு பையன்—அவனை என்னருமை... எனக்குரிய...என்றெல்லாம் அழைக் கிறீர்கள்......அப்படி அழைப்பது நன்றாகத் தோன்றுகிறதா?" என்று கேட்டார் கர்ஸான்.

"நான் அவனை உள்ளன்போடு நேசிக்கிறேன். என்னால் அதற்கு அவ்வளவுதான் கூறமுடிகிறது" என்றார் ஆஸ்கார்.

"அது அன்பா? பக்தியா"

"நான் அவனை மிக விரும்பு கிறேன்; அவ்வளவுதான். அந்தக் கடிதம் ஒரு அழகான கலை மலர்ச்சி; அதை வைத்துக்கொண்டு தப்பர்த் தங்கள் செய்யாதீர்கள். அது ஒரு கவிதை. சாதாரணக் கடிதம் அன்று" என்றார் ஒயில்டு. மேலும் ஆஸ்கர் ஒயில்டுபேசத் தொடங்கினார்:

"நீங்கள் என் கடிதத்தை வைத்துக் கொண்டு குறுக்குவிசாரணை செய் வதை நினைத்தால் விழுந்து விழுந்து சிரிக்கத்தோன்றுகிறது. ஷேக்ஸ்பிய ரின் பாடல்களில் சிலவற்றை எடுத்

துக்கொண்டோ, அல்லது கிங் லியர் (*King Lear*) என்ற நாடகத்தை வைத்துக்கொண்டோ விசாரணை செய்வதுபோல இருக்கிறது...என்னுடைய கடிதத்தைத் தூய கலைக் கண்களோடு அணுகவேண்டும்"

"மிஸ்டர் ஒயில்டு, கலைக்கும் அப்பாற்பட்டதல்லவா நம் வழக்கு?" என்று சிரிப்போடு கேட்டார் கர்ஸான்.

"கலைக்கு அப்பால் நின்று ஒரு சொல்கூட என்னால் பேசமுடியாது" என்று அடித்து விடைகூறினார் ஒயில்டு.

"சரி, இப்படி வைத்துக்கொள்வோம். கலைப்பயிற்சி இல்லாதவன் ஒருவன் இந்தக் கடிதத்தை எழுதியிருந்தால் நீங்கள் என்ன நினைப்பீர்கள்?"

"நான் என்ன நினைக்கவேண்டியிருக்கிறது! கலையுணர்ச்சி இல்லாதவன் இப்படியொரு கடிதத்தையே எழுத முடியாதே!"

"என்ன அப்படிச் சொல்கிறீர்கள்?"

"கலைஞனாக இல்லாத எவனாலும் இதுபோன்ற கடிதத்தை எழுதவோ, இப்படியொரு அழகிய மொழி நடையைக் கையாளவோ முடியாது." என்றார் ஆஸ்கார்.

"உங்கள் கடிதத்திலுள்ள—**சிவந்த ரோசா இதழ் போன்ற உன் உதடுகள் வெறிதேங்கிய முத்தத்தைப் பொழியும்**—என்ற வரியைப் படித்துப் பாருங்கள். வியப்புக்குரிய தோன்றுமே இல்லையா?" என்று கேட்டார் கர்ஸான்.

"அப்படி ஒன்றுமில்லை. அது படிக்கும் விதத்தையும், படிப்பவர் மனோபாவத்தையும் பொறுத்திருக்கிறது."

இது முதல்நாள் வழக்கின் ஒரு பகுதி. முதல் நாளைப் பொறுத்தமட்டில் வழக்கின் போக்கும் ஆஸ்கார் ஒயில்டின் மறுமொழிகளும் மெச்சத்தக்க முறையிலேயே அமைந்திருந்தன. கர்ஸான், ஆஸ்கார் ஒயில்டு எழுதியவற்றிலிருந்து ஒழுக்கக் கேடான சில பகுதிகளைப் பொறுக்கி எடுத்துக் காட்டினார். ஆஸ்கார் ஒயில்டைப் பார்த்து, "நீங்கள் எழுதியவற்றை நீங்கள் நம்புகிறீர்களல்லவா?...நம்பித்தானே எழுதியிருக்க வேண்டும்" என்று குறும்பாகக் கேட்டார் கர்ஸான்.

"நான் எழுதிய எதையுமே நான் நம்புவதில்லை" என்று 'நறுக்'கென்று விடையிறுத்தார் ஆஸ்கார்.

வழக்கின் முதற் பகுதியைப் பொறுத்தமட்டில் ஆஸ்காரின் பக்கம் வெற்றி விழலாம்போல் இருந்தது. ஆனால் வழக்கு மேலே செல்லச் செல்ல, அலை அவருக்கு எதிராகத் திரும்பிற்று.

வழக்கின் விஷயம் மிக அவலமானதாக இருந்ததால் ஆஸ்காரின் பெயர் மிகக் கீழ்த்தரமாகிற்று. அவர் அக்குற்றம் புரிந்திருத்தல்கூடும் என்றே பொதுமக்கள் ஐயுற்றனர். அவரைப்பற்றி மக்கள் இதுவரை அறிந்துகொண்ட பழைய செய்திகளும் இதை வலியுறுத்த உதவின.

ஓரளவு எழுத்துலகில் புகழ்பெற்றுவிட்ட பின்னர், ஆஸ்கார் தம் நடவடிக்கைகளைப் பற்றிச் சிறிது எண்ணியிருக்கவேண்டும். பொதுமக்கள் கவனத்துக்குரிய ஒரு மனிதராக ஆகிவிட்ட பின்னர், அதற்குத் தக்கபடி தம்மை நிர்வகித்துக்கொண்டிருக்கவேண்டும். பலரும் மதிக்கும் முறையில் தம்மை உயர்த்திக் கொள்ளாவிட்டாலும், இகழ்ச்சிக்குரிய செயல்களிலே ஈடுபடாமல் இருந்திருக்கலாம். கீழ்த்தரமானவர்களின் சூழ்நிலைகளிலே திரிந்திருக்கக் கூடாது. பொதுவாக மக்கள் தம்மைப்பற்றிப் பேசநேரும் என்று

> **குறிப்பாகத் தன் பணம் எங்கெல்லாம் போகிறதென்பதை அறியாதவன் நிச்சயமாகத் திருமணம் ஆகாதவனாகத்தான் இருப்பான்.**
>
> —டன் பென்னெட்

ஆஸ்கார் உணர்ந்து நாகரிகமாக நடந்திருக்கவேண்டும். அவர்களுடைய கருத்திலே உயர்ந்து தோன்றினால் அவர்களுடைய பரிவு உணர்ச்சி என்றுவது நம்மை மகிழ்ச்சிக்குள்ளாக்கும். அவருடைய நண்பர்களில் பலர் மிகக் கேவலமான பிழைப்புள்ளவர்கள். குதிரைக்காரர்கள், ஹோட்டல் பையன்கள் ஆகிய இவர்கள்தாம் அவரது நெருங்கிய தோழர்கள். தனி அறைகளில் சிறு பையன்களோடு நெடுநேரம் தங்குவார். விளையாடுவார். கடற்கரைக்கு வருவார். கீழ்த்தரமான முறையில் மக்கள் பலவற்றைக் கற்பனை செய்து கொண்டு பார்க்கிற அளவுக்குத் தன்னை ஆஸ்கார் அமைத்துக்கொண்டார். பொதுமக்கள் அன்று தாம் நேரில் கண்ட சிலவற்றைக்கொண்டு இந்த வழக்கிற்கும் யூகமாக ஒரு முடிவு கூறிக்கொண்டனர். ஜூரிகளும் அம் முடிவிற்கே வந்தனர். ஆஸ்காரின் பக்கம் அவர்களது அனுதாப உணர்ச்சி செல்லவில்லை. ஆஸ்கார் குற்றம் செய்திருப்பார் என்றே கருதினர்.

இன்னின்ன ஹோட்டல் பையனை இந்த இடத்தில் இன்ன அறையில் சந்தித்தார், எந்தப் பையனுக்கு எவ்வளவு பணம் கொடுத்தார் என்பன போன்ற உண்மைகள் ஒன்றன்பின் ஒன்றாக வழக்கில் வெளியாயின. அவர்களுக்கு என் சட்டை துணி மணிகளும் பணமும் கொடுக்க வேண்டும் என்ற கேள்வி எழுப்பப்பட்டது. தனி அறைகளில் சிறுவர்களது பிஞ்சுடலின் 'ஸ்பரிச' சுகத்தில் அவர் திளைத்திருக்கக்கூடும் என்று ஊகிக்கப்பட்டது.

கர்ஸான், ஒரு ஹோட்டல் பையனின் பெயரைக் குறிப்பிட்டு, "அந்தப் பையனுக்குச் சட்டையும் தொப்பியும் வாங்கிக் கொடுத்தீர்களல்லவா?" என்று கேட்டார்.

"ஆமாம்" என்றார் ஆஸ்கார்.

"அவனை நீங்கள் அடிக்கடி முத்தமிடுவதுண்டல்லவா?" என்றார் கர்ஸான்.

"சே, சே...அவனையா.....சுத்த ஆபாசம்"

"ஓகோ, ஆபாசமாக இல்லாதவனை முத்தமிடுவீர்கள்போலிருக்கிறது" என்றார் கர்ஸான். சொல்லில் பிடிகொடுத்துவிட்டார் ஆஸ்கார். அதைவிடாமல் பிடித்துக்கொண்டு வாதாடினர் கர்ஸான்.

"ஊர் பெயர் தெரியாத ஆபீஸ் பையன்களையெல்லாம் அழைத்து அவர்களோடு என் விருந்துண்ண வேண்டும்?" என்பன போன்ற கேள்விகள் எங்கும் எதிரொலித்தன; எல்லோரையும் மலைக்கவைத்தன.

* * *

வழக்கு ஆஸ்கார் ஒயில்டுக்கு எதிராக முடிந்தது. க்யூன்ஸ்பரி பெருமகனை எதிர்த்து வழக்காடப்போய்த் தன்னை அவமானத்துக்குள்ளாக்கிக் கொண்டார் ஆஸ்கார்.

இந்த நிலையில் அரசாங்கம் அந்தத் தீர்ப்பை ஒரு பிடியாக வைத்துக் கொண்டு மேல்நடவடிக்கை எடுக்கலாமா என்று தீவிரமாக யோசித்தது. பல அதிகாரிகள் கூடிக்கூடிப் பேசினர்.

ஆஸ்கார் ஒயில்டு வெளியே எங்கேயும் தலைகாட்ட முடியவில்லை— யாரையும் நிமிர்ந்து பார்க்க அவரால் இயலவில்லை. வெட்கமும் அவமானமும் அவரைப் பிடுங்கித் தின்றன. பலர் அவரைக் கண்டவுடன் அருவருப்பாகப் பார்த்தனர். சிலர் கேலியாகச் சிரித்தனர்.

ஒரு ஹோட்டலில் இவர் தங்குவதற்கு அறை வேண்டிச் சென்றார். ஹோட்டல் முதலாளி அறை கொடுத்துவிட்டான். ஆஸ்கார் அந்த அறைச்சாவியை வாங்கிக் கொண்டு அறையைத் திறந்தார். அந்த நேரத்தில் யாரோ ஒருவன் அந்த ஹோட்டல்காரனின் காதில் ஏதோ 'குசுகுசு' என்று பேசினன். அவ்வளவுதான். அந்த ஹோட்டல்காரன் விரைவாக எழுந்து ஆஸ்கா

ரின் அறையை நோக்கிச் சென்றான். "ஏய், நீ யாரென்று இப்பொழுது தான் புரிந்துகொண்டேன். உனக்கு இங்கே தங்க இடமில்லை. வெளியே போய்விடு" என்று கண்டிப்பாகச் சொன்னான் ஹோட்டல்காரன்.

பேசாமல் வெளியேறுவதைத் தவிர ஆஸ்கார் ஒயில்டால் ஒன்றும் செய்ய முடியவில்லை.

பத்திரிகைகள் இதுதான் சமய மென்று எழுதவேண்டியவற்றை யெல்லாம் எழுதித் தீர்த்தன. "அவருடைய புத்தகங்களைத் தொடுவது பாவம்; படிப்பது மிகமிகப் பாவம்" என்றுகூட ஒரு பத்திரிகை எழுதிற்றும்.

ஆஸ்கார் ஒயில்டின் மனைவியார் இந்த நிலையில் மிக மனமுடைந்து வருந்தினார். கணவனுக்கேற்பட்ட அவமானம் அவரைத்தான் மிகமிக வாட்டிற்று. அவரது உற்றார் உறவினர்கள் 'விவாகரத்து'ச் செய்துவிடும்படி அவருக்கு யோசனை கூறினர். ஆனால் அவர் அவ்வாறு செய்யவில்லை.

அரசாங்கம் திரும்பவும் இவரைக் கைதுசெய்து ஏதாவது தண்டனை அளிக்க விரும்பிற்று. கைது செய்தனர். ஆஸ்காரின் பகைவர்கள் இதுதான் சமயமென்று அவரை எழும்பவொட்டாமல் அழித்துவிட முயற்சித்தனர். வழக்கு நடந்தது. தண்டனை அளிக்கப்பட்டது. ஆஸ்கார் 'ரீடிங் ஹால்' என்ற சிறைக்கு அனுப்பப்பட்டார்.

வாழ்வில் பெரிய இகழ்ச்சிக்கு ஆளாக்கப்பட்டதால் மனம் நைந்து ஒவ்வொரு நொடியும் ஆஸ்கார் உள்ளூற இறந்துகொண்டேயிருந்தார். ஆஸ்கார் ஆரவாரம் போய் அமைதியுற்றார். உடைந்த உள்ளம் அப்புறம் உருப்பெற்று எழ முடியவில்லை. அதற்குப் பின்னர் அவரால் மிகச் சில ஆண்டுகளே உயிர் வாழ முடிந்தது.

* * *

இந்த வழக்கு சரியானபடி கவனிக்கப்பட்டிருக்குமானால் ஆஸ்கார் தோற்றிருக்கவேண்டிய நியாயமே இல்லை. ஆஸ்காரின் முயற்சிக் குறைவே தோல்விக்குக் காரணம். எவ்விதமான நேரடியான சாட்சியங்களும் இல்லை. எல்லாம் யூகித்தறிவதற்குரிய சான்றுகளேயாகும். ஒருவரும் நேரடியாகக் குற்றத்தைச் செய்யும்போது கண்டதில்லை. எப்பொழுதும் யூகங்கள் சரியாகவே இருக்கும் என்று யார் உறுதியாகக் கூறமுடியும்!

ஒரு கலைஞனை—ஒரு சிந்தனையாளனை அடித்து விரட்டவேண்டும், பழிவாங்கியே தீரவேண்டும் என்று அரசாங்கம் விரும்பினால், இப்படிப்பட்டதொரு அற்பமான விஷயத்தைக் கருவியாகப் பயன்படுத்திக்கொண்டிருக்கக் கூடாது. அது கலைஞனுக்கு அவமானமன்று; குற்றம் உண்மையாக இருக்குமானால் கூட அதை மனிதனின் பலவீனமாகக் கருதித்தான் மன்னிக்க வேண்டும்; மன்னிக்கவேண்டிய பாவங்களில் இது ஒன்றுதான்.

அரசாங்கம்தான் வரலாற்றில் நின்று அவமானத்தை அடைகிறது. ஒரு கலைஞனை வேட்டையாடச் சட்டம் எவ்வளவு பயன்பட்டிருக்கிறது!

(மேலும் கட்டுரைகள் தொடரும்)

சில பெரிய இடங்களில் காதலுக்கு இருக்கும் மதிப்பு சட்டைத் துணிக்குள்ள மதிப்புத்தான். சலவையான சமயம் சட்டை பளபளப்பாக இருக்கும்; பிறகு மடிப்புக் கலையும்; அழுக்காகும்; கிழிந்துபோகும்; அப்புறம் அதை எறிந்துவிட்டு வேறு சட்டை போட்டுக்கொள்ளலாம்!

—அகிலன்

தம்பி

தங்கமணி

மூன்றும் அத்தியாயம்

எங்கும் இருள்வெள்ளம் மண்டிக் கிடந்தது ; மழைவெள்ளம் பெருகிக் கிடந்தது !

அப்பா நடந்துகொண்டே இருந்தார். கிராமத்தின் எல்லைக்கோடியிலுள்ள மந்திரக்காரர் மாயாண்டித் தேவரின் குடிசையை நோக்கி அவர் நடந்துகொண்டிருந்தார். வீட்டை வெறுத்துக்கொண்டு எங்கோ ஓடிப் போய்விட்ட சத்தியமுத்துவை மறுபடியும் தானே வீடு திரும்பும்படியாக மந்திரக்காரரிடம் சொல்லி மந்திரம் பண்ணுவதற்காகப் போய்க்கொண்டிருந்தார்.

மந்திரக்காரரின் வீடு நெருங்கியது.

அப்பா வீட்டருகே வந்து நின்றார். மூடிக்கிடந்த கதவைத் தட்டினார். மாயாண்டித் தேவர் கதவைத் திறந்து அவரை வரவேற்றார். அப்பா, கண்ணீர் வடித்தபடியே வந்த காரணத்தைச் சொல்லிக் கெஞ்சினர்; காலைப் பிடிக்காத குறையாய் வேண்டினர்.

மந்திரக்கார மாயாண்டித் தேவர் மெல்லச் சிரித்தார்.

அப்பா விழித்தார்.

"ஏன் சிரிக்கிறீர்கள்?"

"இல்லை... திருக்குறளைப் படித்த நீங்கள்கூட என் தயவை—மந்திரத்தின் தயவை—எதிர்பார்க்கிறீர்களே என்று நினைத்ததும், சிரிக்கத் தெரியாத எனக்குக்கூடச் சிரிப்பு வந்துவிட்டது. வேறொன்றுமில்லை"

"என்ன சொல்கிறீர்? எனக்கொன்றும் புரியவில்லையே!"

"மடையர்களுக்குத்தான் என் மீது—என் மந்திரத்தின்மீது மதிப்பும் மரியாதையும் உண்டு. அறிவாளிகளுக்கு என்மீது—என் மந்திரத்தின் மீது ஆத்திரமும் அருவருப்பும்தான் உண்டு. அறிவில்லாதவர்களுக்கு நான் அமர மனிதன். அறிவாளிகளுக்கு நானொரு அயோக்கியன். இப்போது என்னிடம் கொஞ்சம் பணமிருக்கிறது. இந்தச் சமயத்தில் நான் உங்களை ஏமாற்ற விரும்பவில்லை. உங்கள் மகன் சத்தியமுத்துவை இரண்டு நாட்களுக்கு முன்னே சைரந்திரிபுரத்தில் பார்த்ததாக என் நண்பர் ஒருவர் சொன்னார். உங்களிடம் சொல்லத்தான் இருந்தேன்; ஆனால் இடியும் மழையும் என்னைத் தடுத்துவிட்டன. ஆகவே..."

மந்திரக்காரர் மேலும் சொல்வதற்குள் அப்பா விசுக்கென்று எழுந்தார். மந்திரக்கார மாயாண்டித் தேவரைக் கையெடுத்துக் கும்பிட்டார்.

"தேவரே, பாசத்தின் காரணமாகப் பகுத்தறிவை இழந்துவிட்ட எனக்கு நல்லதைச் சொல்லிய உங்களுக்கு என் வணக்கம். நான் வருகிறேன்"

அப்பா நேரே தம் வீட்டிற்கு வந்தார்; பார்த்தார்.

வீடெங்கும் இருளிலே புகுந்து குடைந்தார்; அலறினர்; கூவினர்.

கருணாமூர்த்தியைக் காணோம்!

திடீரென்று ஒரு பெரு மின்னல்!

அந்தப் பெரு மின்னலின் ஒளியிலே, தென் திசைப் பக்கமிருந்த பூந்தோட்டக் குன்றின் மீது காற்றாய்ப் பறந்தோடும் கருணாமூர்த்தி 'பளிச்'சென்று தெரிந்து மறைந்தான்.

வீடு திறந்து கிடந்தது!

அப்பாவுக்குத் தூக்கிவாரிப்போட்டது. அவர் குபீரென்று வீட்டிற்குள் பாய்ந்து பார்த்தார்.

"கருணா!...கருணா!..." என்று பரபரப்புடன் கத்திக்கொண்டே தட்டுத் தடுமாறிப் போய்க் கட்டிலில் பார்த்தார்.

கருணாமூர்த்தியைக் காணோம்!

"கருணா!...கருணா!..."—அப்பா மறு வினாடி?—

"ஐயோ, மகனே..." என்று உயிர்குலுங்கக் கதறிக்கொண்டே கருணாமூர்த்தியைத் தொடர்ந்தார் அப்பா.

அந்தச் சமயத்தில்—

வீட்டின் — திறந்திருந்த கதவு 'டபார்' என்ற பெரும் சப்தத்துடன் 'டபக்'கென்று சாத்திக்கொண்டது.

நான்காம் அத்தியாயம்

சிறுமீனைப் பெருமீன் விழுங்கினால், பெருமீனைப் பேய்மீன் விழுங்குவதைப்போல, வினாடிகளை நிமிஷங்கள் விழுங்கின; நிமிஷங்களை நாழிகைகள் விழுங்கின; நாழிகைகளை நாட்கள் விழுங்கிக்கொண்டே வந்தன.

ஐந்தாம் நாள் நடுப் பகல்.

அம்ம்...மா! இன்றுதான்—இன்று காலையிலிருந்துதான் இயற்கையின் வெறித்தனம் கொஞ்சம் தணிந்து கிடந்தது. எங்கும் நிச்சலனமான அமைதி.

இடியில்லை; மின்னலில்லை; காற்றில்லை; மழையில்லை; ஆனால், வானகம் கருமேகங்களால் மங்கிக் கிடந்தது. வையகம் மெல்லிய இருளால் வாடிக்கிடந்தது.

மறுபடியும் சூறாவளி சீறுமோ? இடியும் மின்னலும், காற்றும் மழையும் கும்மாளம் போடுமோ?......

தமிழ்க்கோட்டையூர்க் கிராமத்திற்கு இருபத்தைந்து மைல் தூரத்தில் வடமேற்கில் ஒரு கிராமம். அந்தக் கிராமத்தின் பெயர் சைரந்திரிபுரம். சைரந்திரிபுரத்தின் எல்லைக் கோடியிலே ஒரு தோட்டம். உள்ளத்தை மயக்கும் வாசங் கமழும் உன்னதமான மல்லிகைத் தோட்டம். அத் தோட்டத்தின் நடுவிலே ஒரு சிறு அல்லிக்குளம். அந்த அல்லிக் குளத்தின் கரையோரமாக ஒரு மகிழமரம். அந்த மகிழ மரத்தின் கிளையொன்று அழகாகச் சாய்ந்து வளைந்து, குளத்தின் பன்னீர்த் தண்ணீரை முத்தமிட்டுக்கொண்

டிருந்தது. அந்தக் கிளையின்மீது அசையாமல் அமர்ந்திருந்த சத்திய முத்து உள்ளங்கூம்பி நெட்டுயிர்த் தான். அவன் உள்ளம் குமுறும் கடலாக, உறுமும் எரிமலையாகக் கொந்தளித்தது.

"ஹூம்; நான் மடையனும். ஏதோ அறியாமல் செய்துவிட்ட ஒரு சிறு குற்றத்திற்காக 'அறிவு கெட்ட முட்டாள்' என்று வைதாரே; அடித்து உதைத்தாரே; என்னைப் பெற்றுவளர்த்த என் தந்தையே நான் செய்த ஒரு குற்றத்தை மன்னிக்கவில்லை என்றால் வேறு யார் தான் என்னை மன்னிக்கப்போகி றார்கள்?...சே! என்ன ஆனாலும் சரிதான், என்ன நேர்ந்தாலும் சரிதான். உண்ண உணவின்றி ஓடாய்த் தேய்ந்து உருக்குலைந்து உயிரிழந்தாலும் சரி; உடுக்க உடை யின்றி ஊர் ஊராகச் சுற்றித் திரிந்து செத்துப்போனாலும் சரி; இனி என் அப்பாவின் முகத்தில் விழிக்கப் போவதில்லை; அந்தப் பக்கத்திற்கே

ஒரு கும்பிடு"—சத்தியமுத்து, தமிழ்க் கோட்டையூர்த் திசையை நோக்கிக் கையெடுத்துக் கும்பிட்டான். அவன் நெஞ்சம் குமுறியது. அவனால் கொப்புளித்து வந்த அழுகையை அடக்கிக்கொள்ள இயலவில்லை. அவன் தன் இரு கைகளாலும் முகத்தைப் புதைத்துக்கொண்டு "ஐயோ"வென்று குலுங்கி அழு தான்; தேம்பினான்...

அந்தச் சமயத்தில்—

"ஏய், யாரடா நீ?..."—அதிகாரத் துடன் கிளம்பிய அந்தக் குரலில், செல்வச்செருக்கு கும்மாளம் போட்டது. திமிர்பிடித்த குரலைக் கேட்ட சத்தியமுத்து உடனே கண் களைத் துடைத்துக்கொண்டு திரும்பிப் பார்த்தான்.

அருகிலே ஒரு பையன் நின் றிருந்தான்.

அவனுக்குப் பதினாறு வயதுதான் இருக்கும். அவனுடைய உயர்ந்த ரக உடைகளும், தங்க, வைர நகை களும், செல்வத்திலே பிறந்து, செல் வத்திலே வளரும் சீமான் மகன் அவன் என்று காட்டித்தந்தன. அந்தச் சீமான் மகனின் பெயர் பூசுரன்.

சத்தியமுத்து, விறைப்பாக நிற்கும் பூசுரனைப் பார்த்துக்கொண்டே மரத்தைவிட்டுக் கீழே இறங்கினான். அவனை ஏறிட்டுப் பார்த்து விழித்துக் கொண்டே மெதுவாக அவனை நெருங்கினான்.

"என்ன, நான்தான்..."

"நான்தான்—நான்தான் என் றால்? கழுதையா, குதிரையா, ஆடா, மாடா?" என்று கேலி பண்ணிக் கையிலிருந்த சவுக்கைச் சுழற்றியபடி சத்தியமுத்துவை வெறித்து நோக்கிக்கொண்டே நெருங்கினான். அவனது அன்பு கெட்ட பேச்சைக் கேட்ட சத்திய முத்து நெஞ்சு கலங்கினான்; ஊமை யாய் நின்றான்; பூசுரனையே அசை யாமல் பார்த்துப் பதுமையாய் நின்றான்!

[தொடரும்]

20 Persons are awarded prizes in our puzzle No. 14.

1st prize 1. M. M. Pillai, Tiruvarur. 2. Hav/clk. Vidya Singh, N. Delhi. 3. A. M. Sultan, Guntur Dt. 4. Mata Prasad, Banaras. 5. H. L. Dr. Bachchulal. Dt. Gurdaspur. 6. K. Narayana Mudaliar, Tinnevelly Dt. 7. C. N. K. Muthu, Dindigul. and 3rd prize 10 persons, 5th prize 3 persons.

Full particulars are published in the Rainbow dated *10-8-52*.

ரிஜிஸ்டர் நெ. 277 போட்டி நெ. 16

ரூ. 25,000 பரிசு

MS Premier Bank of India Ltd-ல் சீல் செய்துவைக்கப் பட்டுள்ள சரியான விடை அவர்கள் அங்கீகாரத்தின்பேரில் பிரசுரிக்கப்படும். முற்றிலும் சரியான விடை அனுப்புபவர்களுக்கு முதல் பரிசு ரூ. 12,000. முதல் இரண்டு வரிசை சரியான விடைக்கு இரண்டாம் பரிசு ரூ. 7000. முதல் ஒரு வரிசை சரியான விடைக்கு மூன்றும் பரிசு ரூ. 3000. முதல் மூன்று நம்பர் சரியானவிடைக்கு நான்காம் பரிசு ரூ. 2000. முதல் இரண்டு நம்பர்கள் சரியான விடைக்கு *5*-ம் பரிசு ரூ. 1000 அளிக்கப்படும். எங்கள் ஸீல் வைத்த விடைகள்படி எல்லாம்சரியாக இருக்க வேண்டும். மேற்கண்ட பரிசுகள் எங்கள் கம்பெனியின் நிபந்தனைப்படி வசூலுக்குத் தகுந்தபடி பகிர்ந்து கொடுக்கப்படும்.

AMBAL'S PUZZLES

KEY S. NO. 14 *41 TO 56=194

51	48	45	50
54	41	44	55
42	53	56	43
47	52	49	46

We hereby certify that the above is the solution in original deposited with us by *Ambal's Puzzles No.* 14 on 2/7/52 in a sealed cover which was opened in our presence to-day and that a copy of the above solution has been lodged with the Bank.

For The Premier Bank of India Ltd.

V. [signature] 29 7 52 *Agent, Madras.*

முடிவு தேதி 27-8-52 விடை 12-9-52

பிரவேசக் கட்டணம் : கூபன் *1*-க்கு ரூ. *1-0-0* 6 கூபன் கொண்ட ஸெட் 1-க்கு ரூ. 5-0-0

202

விடைகள் கண்டுபிடிக்கும் விதம்:— *42* முதல் *58* வரையுள்ள எண்களைக் கொடுக்கப்பட்டிருக்கும் கட்டங்களில், மேலிருந்து கீழும், இடமிருந்து வலமும், குறுக்காகவும் எப்படிக் கூட்டினாலும் *202* வரும்படியாக அமைக்க வேண்டும். ஒரு எண்ணை ஒரே தடவைதான் உபயோகிக்க வேண்டும்.

விதிகள்:— தனி வெள்ளைக் காகிதத்தில் தேவையான கட்டணத்துடன் எத்தனை கூப்பன்கள் வேண்டுமானாலும் எழுதி அனுப்பலாம். ஒவ்வொரு கூப்பனிலும் பெயர், விலாசம், எண்கள் எல்லாம் ஆங்கிலத்தில் விளக்கமாக எழுதப்பட வேண்டும். பிரவேசக் கட்டணத்தைக் கிராஸ் செய்த போஸ்டல் ஆர்டர் மூலமாகவோ அல்லது மணியார்டர் மூலமாகவோ அனுப்பலாம். மணியார்டர் செய்த ரசீதைக் கூபன்களுடன் சேர்த்து அனுப்ப வேண்டும். வசூலுக்குத் தகுந்தபடி, பரிசு பகிர்ந்து அளிக்கப்படும். போட்டி சம்பந்தமாக மானேஜர் தீர்ப்பே முடிவானது; சட்டபூர்வமாய்க் கட்டுப்படுவதுமாகும். போட்டி முடிவு RAINBOW மாதமிருமுறைப் பத்திரிகையில் பிரசுரிக்கப்படும். அல்லது 4 அணா ஸ்டாம்பு அனுப்பினால் விடை அனுப்பப்படும்.

கூபன்கள் அனுப்பவேண்டிய விலாசம் :—

AMBAL PUZZLE NO 16

28 (14) Thandavaraya Gramani Street, Tondiarpet, MADRAS-21

துறவு

நா. ஜெகநாதன்

“நேற்றுக் காலை துறைமுகத்தை விட்டுக் கிளம்பிய கப்பல் பனிரெண்டு மணி நேரப் பயணத்திற்குப் பிறகு ஒரு பெரிய விபத்துக்குள்ளாகியது. கருங்கல் பாறை ஒன்றின்மேல் மோதியதால் விபத்து ஏற்பட்டிருக்கக்கூடும் என்று நம்பப்படுகிறது. ஏராளமான பேர் உயிர் இழந்திருக்கக்கூடும் என்று வருத்தத்தோடு தெரிவித்துக் கொள்கிறோம்... கப்பல் கோஷ்டியில் வில்லியம்ஸ் உள்படப் பலர் உயிரிழந்திருக்கக்கூடும். மேற்கொண்டு விவரங்கள் நாளையதினம் பிரசுரிக்கப்படும்...” என்ற செய்தியை ஒருநாளிதழில் படித்துக்கொண்டிருந்த அந்த நங்கை திடீரென்று மூர்ச்சித்து விழுந்தாள். அவள் கையில் இருந்த பத்திரிகை கசங்கிக் கீழே விழுந்தது.

சிறிது நேரத்திற்குப்பிறகு அங்கே அவளைப் பார்ப்பதற்காக வந்த ஒரு வாலிபன், அவள் விழுந்துகிடந்த அலங்கோல நிலையைக் கண்டு பதறிப்போய், அவள் முகத்தில் தண்ணீரைத் தெளித்து நல்லமூச்சு வரச் செய்தான். சிறிது நேரத்தில் எழுந்து உட்கார்ந்த அந்தப் பெண் தன் கண்களைக் கசக்கிக்கொண்டு தன் எதிரில் உட்கார்ந்திருப்பது யாரென்று பார்த்தாள். அந்த வாலிபன்,

“ஜூலி, ஏன் இப்படி மயக்கமடைந்து கீழே விழுந்து கிடந்தாய்? என்ன சேதி? சொல்ல மாட்டாயா?” என்று அன்பு தொனிக்க அண்ணன், தங்கையைக் கேட்பதுபோல் ஆதரவுடன் கேட்டான்.

ஜூலி என்ற ஜூலியா பெருமூச்சு விட்டுக்கொண்டே தன் எதிரில் நசுங்கிக் கிடந்த அந்தப் பத்திரிகையை எடுத்து அவனிடம் கொடுத்து மேற்படி கப்பல் விஷயத்தைப்பற்றிய செய்தி பிரசுரமாகியிருந்த இடத்தைக் காட்டினாள். அந்த வாலிபன் அதைப் படித்து முடித்ததும் “ஐயோ வில்லியம்ஸ்!” என்று அலறினான். அவன் குரல் அந்த வட்டாரம் முழுவதும் எதிரொலி செய்தது. “இனி என்ன செய்வது?” என்று ஏக்கத்தோடு கேட்டான் அந்த வாலிபன். “நீங்கள்தான் எனக்கு இனித் துணை. உங்களைத்தான் நம்பி இருக்கிறேன்” என்று கூறியபடி அவன் கைகளைக் கெட்டியாகப் பிடித்துக்கொண்டாள். நடுங்கும் கரங்களை அந்த வாலிபன் சேர்த்துப் பிடித்தபடி, “ஜூலியா, அதை நீ எனக்குச் சொல்ல வேண்டுமா? நான் உன்னை எப்படியும் காப்பாற்றுவேன். இந்தியன் என்ற பெயருக்கு இழுக்கு வராமல், எந்நிலை உன்னை நான் காப்பாற்றுவேன்” என்று கூறினான்.

★

அமெரிக்காவில் கப்பற்படைப் பயிற்சிப் பள்ளிக்கூடத்தில் உயர்ந்த பட்டம் பெறுவதற்காக ரமேஷ் சந்திரட் என்ற இந்திய வாலிபன் சேர்ந்திருந்தான். அவனது உயிர்த் தோழன்தான் காப்டன் வில்லியம்ஸ். அவன் ரமேஷைவிட ஓர் ஆண்டு மூத்தவனாதலால், அவன் படிப்பு

முடிந்து கப்பற்படையில் சேர்ந்து பணியாற்றிவந்தான். ரமேஷிற்குப் படிப்பு முடியவில்லை. ஜூலியா என்ற பெண் வேறொரு பள்ளியில் பொருளாதாரக்கலை பயின்றுவந்தாள். அழகின் உருவம் என்றால் அது ஜூலியாவைத்தான் குறிக்கும். ஜூலியாவும், வில்லியம்ஸும் என்றால் தூய காதலின் தூதர்கள் என்று பொருள். ஒருவர்மீதொருவர் உயிரையே வைத்திருந்தார்கள் என்றால் அது மிகையாகாது. தன் படிப்பு முடிந்ததும் வில்லியம்ஸை மணந்து கொண்டு இன்பத்தின் எல்லையை எட்டிப்பிடிக்கலாம் என்று அந்தப் பூங்கொடி கனவுலகில் சஞ்சரித்துக் கொண்டிருந்தாள். தன் பயிற்சிக் காலம் முடிந்ததும், அந்த வஞ்சிக் கொடியைத் தழுவிக்கொள்ளலாம் என்று வாலிப வீரன் வில்லியம்ஸ் எண்ணக் கோட்டையில் உலவிக் கொண்டிருந்தான். "ஜோடிப்புறா பறக்குது பார்!" என்று வில்லியம்ஸையும் ஜூலியாவையும் காணும் போதெல்லாம் மக்கள் கூறி மகிழ்வார்கள். அந்த நேரத்தில்தான் கப்பல் குழுவில் பயிற்சிக்காகச் சென்றிருந்த வில்லியம்ஸ் உயிரிழந்திருக்கக்கூடும் என்று செய்தி இடி போல் முழங்கியபடி வந்தது.

ரமேஷ் ஒழுக்கத்தின் உறைவிடமாக, அறிவுக்களஞ்சியமாக அனைவரும் போற்றும்படி நடந்துவந்தான். அவனுடைய குணங்களால் கவரப்பட்ட வில்லியம்ஸ் அவனைத் தன் ஆருயிர் நண்பனாக்கிக்கொண்டான். ஜூலியாவிற்கும் ரமேஷை அறிமுகம் செய்துவைத்தான். கன்னிப் பெண் ஒருத்தியிடம்—இளமை களிக் கூத்தாடும் கட்டழகி ஒருத்தியிடம்—கல்யாணமாகாத ஒரு வாலிபன் சிறிதும் களங்கமில்லாமல் சகோதர வாஞ்சையோடு பழகுவதைக் கண்டு வில்லியம்ஸும் பெருமையும் ஆனந்தமும் அடைந்தான். தனக்கு ஒரு தமையன் இல்லாத குறை ரமேஷினால் நீங்கிவிட்டதாக எண்ணி ஜூலியா மகிழ்ந்தாள்.

இந்த நிலையில்தான் கோரமான கப்பல் விபத்து நேர்ந்து, ஜூலியாவின் காதல் கோட்டையை இடித்துத் தூள் தூளாக்கிவிட்டது. ரமேஷின் அன்பு மொழிகளும், ஆறுதல் வார்த்தைகளும்மட்டும் ஜூலியாவிற்குக் கிட்டாதிருந்தால், அந்தப் பொன்மேனி இந்நேரம் மண்ணில் சாய்ந்திருக்கும் என்பது நிச்சயம். மாலையில் வருவான்; மன ஆறுதல் தரும் மொழிகளை மங்கையிடம் பேசுவான். மாந்தளிர் மேனியாள் துன்பம் மறந்து, ஆறுதல் பெறுவாள். நாள்தோறும் இதுமாதிரி நடப்பது சகஜமாகிவிட்டது. ரமேஷின் கட்டமமைந்த உடல் ஜூலியாவின் உள்ளத்தில் கிளர்ச்சியை உண்டுபண்ணத் துவங்கியதில் வியப்பேதுமில்லை அல்லவா? 'ஒழுக்கமே உருவானவன், குணக்குன்று ரமேஷ். ஏன் அவனை நான் மணந்து கொள்ளக் கூடாது? இந்தியனாக இருந்தால் என்ன?' என்று ஜூலியாவின் உள்ளம் சிந்திக்கத் தொடங்கியது. நாளடைவில் வில்லியம்ஸின் உருவம் அவள் உள்ளத்திரையிலிருந்து மறைந்துவிட்டது; அங்கே இப்போது ரமேஷின் உருவம் வர்ணம் கலையாத அழகு ஓவியமாக நின்று ஆட்சி புரியலாயிற்று. ரமேஷ் தன் நண்பன் வில்லியம்ஸுக்குத் துரோகம் செய்துவிட்டு, அவன் காதலித்த பெண்ணை மணந்துகொள்வானா என்ற சந்தேகம் அவளை அலைக்கழிக்கலாயிற்று. 'ரமேஷின் நடத்தையைப் பார்த்தால், அவன் நிச்சயம் தன் நண்பனுக்குத் துரோகம் செய்யமாட்டான் என்றுதான் தோன்றுகிறது...என்றாலும் நாம் அவனைத்தான் கேட்டுப் பார்ப்போம்; கெஞ்சிப் பார்ப்போம். வில்லியம்ஸ் காதலித்த என்னை அவனது மறுபதிப்பான நீங்கள்தான் காதலிக்கவேண்டும்; வேறொருவர் என் உடலைத் தீண்டவிடமாட்டேன்; ரமேஷ் வேறு; வில்லியம்ஸ் வேறா?

அல்லவே! நீங்கள் என்னை மணந்து கொள்வதில் தவறு ஒன்றுமில்லை' என்று கேட்கலாம்'—இவ்வாறெல்லாம் ஜூலியா தன் மனத்திற்குள் ஒரு போராட்டத்தை நடத்திக் கொண்டிருந்தாள்.

ஒருநாள் ஜூலியா ரமேஷிடம் தன் விருப்பத்தைத் தெரிவித்து விட்டாள்; அதைக் கேட்டதும் ரமேஷ் அலறித் துடித்து ஆச்சரியமடைந்தான்; 'ஜூலியா இவ்வளவு கேவலமானவளா' என்று ஆத்திரப்பட்டான்.

"என்ன ஜூலியா" நான் உன் சகோதரனாயிற்றே? உனக்குத் தெரியாதா? வில்லியம்ஸ் தொட்டு மகிழ்ந்த உன்னை நானா—உன் சகோதரனா மணந்துகொள்வது? வில்லியம்ஸைப்போன்ற வேறொருவனைத் தேடிப்பிடித்து உனக்கு நான் மணம் செய்து வைக்கிறேன்..." என்று கூறினான் ரமேஷ்.

"அன்பரே, வில்லியம்ஸைப் போன்ற வேறொருவர் இருக்கிறார் என்றால் அது ரமேஷாகத்தான் இருக்கவேண்டும். வில்லியம்ஸ் தொட்டு மகிழ்ந்த ஜூலியாவை அவரது மறுபதிப்பான ரமேஷ்தான் மணந்துகொள்ளவேண்டும்; மற்றவர் என் உடலைத் தீண்டவிடமாட்டேன். வில்லியம்ஸ் இல்லையேல் ரமேஷ்தான்! வேறு யாருமல்ல..." என்று உணர்ச்சி பொங்க ரமேஷின் உள்ளத்தைத் தொடும்படி பேசினாள் ஜூலியா.

"அது சரி, ஜூலியா! சகோதரியாகப் பாவித்து வந்த உன்னை நான் எப்படி மணந்துகொள்வது? அதைத்தான் நான் யோசிக்கிறேன். அதுவுமல்லாமல் என் நண்பன் வில்லியம்சுக்குத் துரோகம் செய்தது போலாகாதா?"

"அன்பரே, என் காதலர் வில்லியம்ஸ் இருக்கும்வரைதான் நீர் என் சகோதரராக இருந்தீர்; அவர் உயிருடன் இருந்து, அப்போது நீங்கள் என்னைக் காதலித்தால்தான் அது அவருக்குச் செய்த துரோகமாகும். அவர் இல்லாதபோது என்னைக் காதலிப்பது எனக்குப் பெருமை; அவருக்குத் துரோகமல்ல. நீங்கள் என்னை மணந்துகொள்ளாவிடில் என் வாழ்வு பாழாகும். என்னைக் கொத்திக்கொண்டுபோக எத்தனையோ கொடிய பருந்துகள் காத்துக்கொண்டிருக்கின்றன. நேற்றுக் கூட அந்தத் தடியன் விண்ட்ஸர் என்னைப் பார்த்துப் பல்லிளித்தான்; எனக்கு ஆத்திரம் பற்றிக்கொண்டு வந்தது. அவனை அறைந்துவிடலாம் என்றுகூட எண்ணினேன். ஆனால் ரமேஷ் தொட்டு மகிழவேண்டிய என் தூய கரங்களை அந்தப் பாவியின் உடலில் படச்செய்து என் கறைப்படுத்திக்கொள்ளவேண்டும் என்ற எண்ணத்தில் பேசாமல் வந்துவிட்டேன்" என்று கூறிக்கொண்டு வந்தாள்; ரமேஷின் உள்ளமும் கொஞ்சம் கொஞ்சமாக மாறிவந்தது.

"யோசனை செய்து சொல்கிறேன்" என்று கூறி விடைபெற்றுக்கொண்டு வெளியே போய்விட்டான் அவன்.

★

இரண்டு மூன்று நாட்கள் ரமேஷ் தன் வீட்டிற்கு ஏன் வருவதில்லை என்று ஜூலியா சிந்தித்துப் பார்த்தாள். ஒரு பலனுமில்லை. அவனது அன்பு முகத்தைப் பார்ப்பதுகூட நின்றுவிட்டதே என்றுபரதவித்தாள். ஏன் அவனிடம் தன் ஆசையை அவசரப்பட்டுத் தெரிவித்தோம் என்று ஆயாசப்பட்டாள். மறுநாள் காலை ரமேஷின் வீட்டிற்குப் போய் அவனைப் பார்க்க முடிவு செய்தாள்.

ரமேஷ் ஒரு பெரிய போராட்டத்தில் இறங்கித் தவித்துக்கொண்டிருந்தான். சகோதரியாகப் பாவித்து வந்த ஒரு பெண்ணை மணந்து கொள்ளலாமா? மணந்துகொள்ளாவிட்டால்—? விண்ட்ஸரின் கோரமான உருவம் அவன்முன் காட்சியளித்தது. இந்த மந்தியிடமா மலர் மாலையை அகப்பட்டுக்கொள்ளும்படி விட்டுவிடுவது? கூடாது. அப்படி

யானல், தான் . அவளை மணந்து கொள்ளவேண்டுமா? வில்லியம்ஸின் அழகான முகம் தோன்றி மறைந் தது. நண்பனுக்கு–நம்பியவனுக்குத் துரோகம் செய்வதா? 'வில்லியம்ஸ் உயிரோடு இருந்து நீங்கள் என்னைக் காதலித்தால்தான் அது துரோக மாகும்...' என்ற ஜூலியாவின் சொற்கள் அவன் காதுகளில் ரீங் காரம் செய்தன. 'ஆம், அவள் கூறி யது அத்தனையும் உண்மை. அப்படி யானல் தான் அவளை மணந்து கொள்வதைத் தவிர வேறு வழி யில்லை.'

மறுநாள் காலை ஜூலியா ரமேஷின் அறைக்கு வந்தாள். இரண்டு பேருமாக மாதாகோயி லுக்குச் சென்றார்கள். ரமேஷ்–ஜூலியா திருமணத்தைக் கேள்விப் பட்டு ஆச்சரியப்படாதவர் கிடை யாது. என்றாலும், இருவரும் பொருத்தமான ஜோடிதான் என் றும் பேசிக்கொண்டார்கள்.

காதலர் இருவரும் களிப்புக் கட லில் ஆழ்ந்து, கவலையற்ற வாழ்வில் ஈடுபட்டிருந்தார்கள். ரமேஷ் ஒரு வேலையில் அமர்ந்து நல்ல சம்பளம் பெற்றான். ஜூலியா பொருளா தாரப் படிப்பு முடிந்ததும், மேல் படிப்புப் படிக்கவும், ஆராய்ச்சியில் இறங்கவும் விரும்பினாள். ரமேஷ் அதற்கு ஒப்புக்கொண்டான். நாடகம், சினிமா, கடற்கரை என்று தம்பதிகள் இன்பமாகப் பொழுது போக்கினார்கள்.

இப்போது அழகே உருவான ஓர் ஆண் குழந்தைக்கு ஜூலியா தாய். தான் தந்தை ஆகிவிட்ட செய்திகேட்ட தும், ரமேஷ் அடைந்த மகிழ்ச்சிக்கு எல்லையே கிடையாது. ஜூலியா வும் ரமேஷும் அந்த அழகோவி யத்தைத் தங்கள் அன்புக்கடலில் திளைக்கவைத்து, அருமையாக வளர்த்துவந்தார்கள்.

ஈராண்டுகள் பறந்தோடின. ஒரு நாள் காலை ரமேஷும் ஜூலியாவும் தங்கள் அருமைக் குழந்தையை வைத்துக் கொஞ்சிக்கொண்டிருந் தார்கள்.

வாசற்கதவைத் திறந்துகொண்டு, பூட்ஸ் சத்தம் 'டக் டக்' என்று ஒலிக்க யாரோ உள்ளே வரும் சப்தம் கேட்டு இருவரும் எழுந்து பார்ப்பதற்குள் அங்கே நுழைந்தான் அவன். அவ்வுருவத்தைக் கண்டு இருவரும் வியப் பில் ஆழ்ந்தனர். தாங்கள் எங்கே இருக்கிறோம் என்ற சந்தேகம் அவர் களுக்கு வந்துவிட்டது. தான் ஜூலியாவை முத்தமிட்டுக்கொண் டிருந்தபோது அவன் பார்த்துவிட்டிருப்பானே என்ற பயம் தோன்றி யது. காரணம் ஜூலியா விற்கு உரியவன் வந்து விட்டான்! யார் இறந்து விட்டதாக முடிவு கட்டி அவளை மணந்துகொண் டானே, அந்த வில்லி யம்ஸ் வந்துவிட்

டான். ஆனால், அவனே காதலர்கள் இருவரும் இன்பக்கடலில் திளைத்துக் கிடப்பதைக் கண்டும் காணாதவன்போல், "என்ன இப்படி மிரள்கிறீர்கள்! ஆமாம்;நான் இறந்துவிட்டதாக அல்லவா பத்திரிகைகளில் செய்தி வந்தது. எப்படி நம்பமுடியும்? நான் வில்லியம்ஸ்தான். நான் இறக்கவில்லை. உயிரோடுதான் இருக்கிறேன்........" என்று கூறினான் அவன். ஏதோ செய்யத்தகாததைச் செய்துவிட்டது போல் ரமேஷின் உடல் நடுங்கிக் கொண்டிருந்தது. நண்பனுக்கு வளர்ந்த கனியை நாம் ருசித்துவிட்டோமே என்ற நடுக்கமா அது?

சூடான டீயை ருசி பார்த்துக் கொண்டே வில்லியம்ஸ் தன் கதையைக் கூறலானான்: "நாங்கள் புறப்பட்டுச் சென்ற இரண்டு மூன்று மணியில் புயல் அடிக்கக் கூடும் என்றும், அதற்கு எங்களைத் தயார் செய்துகொள்ள வேண்டும் என்றும் செய்தி வந்தது. நாங்கள் அதற்கான ஏற்பாடுகளில் இறங்கி வேலையைச் செய்யலானோம்; எங்கள் ஏற்பாடுகள் முடிவதற்குள், திடீரென்று பேரிரைச்சலுடன் பெரியதொரு புயல் அடித்தது. எங்கேயோ பறந்து செல்கிறோம் என்ற உணர்ச்சி சிறிது நேரம் இருந்தது. அதன் பிறகு ஒரு விதமான உணர்ச்சியும் இல்லை; நான் என்னை மறந்தேன். கண்ணை விழித்துப் பார்த்தபோது, கப்பலில்லை; கப்பல் தலைவனில்லை; மக்கள் கூட்டமில்லை; ஒன்றுமே இல்லை; ஆனால் புரியாத மொழி பேசும் புது மனிதர்கள் சிலர் இருந்ததைக் கண்டேன். எழுந்து உட்கார்ந்தேன். எங்கே இருக்கிறோம் என்று பார்த்தேன். கப்பலில் பிரயாணம் செய்துகொண்டிருந்ததும், புயல் அடித்ததும், பிறகு நினைவிழந்ததும் சிறிது சிறிதாக என் மனத்திரையில் நிழற்படம்போல் தெரியலாயிற்று. புயல் அடிக்க ஆரம்பித்ததும், நான் எங்கேயோபறப்பதுபோல்உணர்ச்சி தோன்றியது என்று முதலிலே கூறினேன்; ஆமாம், புயற்காற்று என்னை அடித்துச் சென்று எங்கோ ஒரு கண்காணாத தீவில் விட்டுவிட்டது...... ஆனால் நல்லகாலமாக அந்தத்தீவில் இருந்த மக்கள் அன்புள்ளவர்களாக இருந்து, எனக்கு வேண்டிய பணிவிடைகள் செய்துகொடுத்தார்கள். நான் என் பூர்வ கதையைக் கூறியதைக்கேட்டு அவர்களில் பலர் ஜூலியாவிற்காகக் கண்ணீர் விட்டு அழுதார்கள்...சில வாரங்கள் சென்ற பிறகு அந்தத் தீவின் வழியாக ஒரு கப்பல் சென்றது. சிந்துபாது என்ற மாலுமியைப்போல் நான் என் கதையைக்கூறி அந்தக் கப்பல் தலைவனிடம் என்னை ஏற்றிக்கொண்டு போகுமாறுவேண்டிக்கொண்டேன். இரக்க நெஞ்சம் படைத்த அந்தக் கப்பல் தலைவனின் உதவியினால் நான் என் தாய்நாட்டை மீண்டும் காணும் பேறுபெற்றேன்...

"நான்கப்பல் குழுவில் இருந்ததால் என்னைக் காணாமல் தவித்த அவர்கள் நான் கடலுக்கடியில் மாண்டிருக்க வேண்டும் என்று நினைத்து அப்படியே பத்திரிகைகளிலும் பிரசுரித்துவிட்டார்கள். அதனால்தான் நான் தாய்நாட்டை வந்து அடைந்ததும், என்னை யாருமே அடையாளம் கண்டுகொள்ள முடியவில்லை. ஆனால், என் நெருங்கிய நண்பர்களில் சிலர்மட்டும் அடையாளம்

கண்டு என்னை வரவேற்றார்கள். ஜூலியாவிற்கும் உமக்கும் மணம் நடந்ததாகக் கேள்விப்பட்டேன். என் மனமார்ந்த வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கிறேன். நீங்கள் இருவரும் நீடூழிகாலம் வாழ்க! உங்கள் குழந்தையா இது?" என்று கூறி அதை எடுத்து முத்தம் இட்டான். ரமேஷ் ஒரு கைதியைப் போல் கலங்கிய உள்ளத்தோடும், கவிழ்ந்த தலையோடும் நின்றுகொண்டிருந்தான்.

"நான் இப்போது போய் என் காப்டனைச் சந்தித்துச் சில விஷயங்களைச் சொல்லிவிட்டு வரவேண்டும். நாளைக் காலை மீண்டும் வருகிறேன்' என்று கூறியவாறு வில்லியம்ஸ் எழுந்தான்.

"என்ன இது! இத்தனை நாள் கழித்து வந்திருக்கிறீர்கள்! அதற்குள் போய்விடுவதா? சாப்பாடு எல்லாம் முடிந்த பிறகு போகலாம்..." என்று ஏககாலத்தில் ரமேஷ் தம்பதிகள் கூறினர்.

"இல்லை. எனக்கு இப்போது அவசரமாகப் போய் வரவேண்டிய வேலை இருக்கிறது. நாளைக்குக் கட்டாயம் வருகிறேன்...உங்கள் இருவரையும் பார்க்கவேண்டும் என்று என் கண்கள் ஏங்கின; அதனால் தான் இன்றைக்கே வந்தேன். இல்லாவிட்டால் நாளைக்குத்தான் வந்திருப்பேன்...நான் வருகிறேன்" என்று கூறி விடைபெற்றுக்கொண்டு வெளிக்கிளம்பிவிட்டான்.

ரமேஷ் அன்று இரவெல்லாம் தூங்கவேயில்லை. இனி என்ன செய்வது என்ற எதிர்காலப் பிரச்னையில் ஈடுபட்டிருந்தான். கடைசியில் ஒரு முடிவிற்கு வந்தான்.

★

மறுநாள் காலை வில்லியம்ஸ் வருவான் என்று இருவரும் காத்துக்கொண்டிருந்தார்கள். ஆனால் வில்லியம்ஸ் வரவில்லை. "அவன் எங்கிருந்தாலும் தேடிக் கண்டுபிடித்துக் கொண்டு வருகிறேன்" என்று கூறி வெளியே போனான் ரமேஷ். வில்லியம்ஸ் வரவில்லையே என்று ஏங்கிக் கொண்டிருந்த ஜூலியா, ரமேஷும் வில்லியம்ஸும் வரவில்லையே என்று ஏங்கவேண்டி வந்தது. ஆமாம்; இரண்டு பேரும் திரும்பி வரவில்லை! ஜூலியா என்ன செய்வதென்றறியாது ஏங்கித் தவித்துக்கொண்டிருந்தாள்.

மறுநாள் அவளுக்கு இரண்டு கடிதங்கள் தபாலில் வந்தன. முதல் கடிதம் ரமேஷிடமிருந்து வந்தது. அதில் பின்வருமாறு எழுதப்பட்டிருந்தது:



தகப்பனார்: பாலு, ஏன் பள்ளிக்கூடம் விட்டு வ்ரும்போது அழுதுகொண்டே வருகிறாய்?...

பாலு: அப்பா, காலையில் நீங்கள் போட்டுத்தந்த கணக்கு எல்லாம் தப்பு. அதற்காக என்னை ஆசிரியர் அடித்துப் போட்டுவிட்டார்......!

"அன்புள்ள ஜூலியாவிற்கு,

இனி நான் உன் வீட்டிற்கு வருவேன் என்று எதிர்பார்க்க வேண்டாம். என் உயிர் நண்பன் வில்லியம்ஸ் வந்துவிட்டான். அவனது முகத்தில் விழிக்கவும் எனக்கு அருகதை இல்லை. அவனது சொத்தை நான் சூறையாடி விட்டதாக என் மனச்சாட்சி என்னை உறுத்துகிறது. நான் அப்போதே சொன்னேன், என் நண்பன் காதலித்த பெண்ணை நான் எப்படி மணந்து கொள்வது என்று! ஆனால், நீ எப்படியோ பேசி என்னை மயக்கி உன்னை மணந்து கொள்ளுமாறு செய்துவிட்டாய். உன்னை நான் சகோதரியாகத்தான் பாவித்து வந்தேன் என்பது வில்லியம்ஸ் உள்பட அனைவருக்கும் தெரியும். என்றாலும், உன்னை நான் மணந்துகொண்டதன் காரணம், நீ விண்ட்ஸர் போன்ற வெறியர்களிடம் சிக்கி வீணாகிவிடக் கூடாது என்பதால்தான்......எப்படியோ நம் வாழ்வு கழிந்துவந்தது.

இப்போது வில்லியம்ஸ் வந்துவிட்டான்! நான் செய்த துரோகத்திற்கு அவன் பழிவாங்குவான்; என்னைக் கொல்லவோ, வேறுவிதமாகத் துன்புறுத்தவோ செய்வான் என்று பயந்து நான் உன்னிடமிருந்து பிரியவில்லை. அவன் அந்தமாதிரி செய்யமாட்டான் என்பதை நேற்றைய அவன் நடவடிக்கைகள் கூறிவிட்டன. ஆனாலும் நான் உன்னிடமிருந்து பிரிவதன் காரணம் என்ன?

நண்பனுக்கு உரிய பொருளை இதுகாறும் நான் காத்துவந்தேன். இனி அவன் வந்துவிட்டபோது அந்தப் பொருளை அவனிடம் ஒப்படைத்துவிட வேண்டியதுதானே!...இது அமெரிக்கா, இந்தியா அல்ல. இந்தியாவாக இருந்தால்தான் ஒருவனுக்கு மனைவி ஆகிவிட்ட பிறகு எப்படி மற்றவனுக்கு மனைவியாக முடியும் என்ற கேள்வி எழும். ஆனால் இங்கே அம்மாதிரி எழ இடமில்லை. விவாகரத்து என்ற கருவி இருக்கிறது அல்லவா?

அருமை ஜூலியா, உன்னை நான் வேண்டிக்கொள்வது என்னவென்றால், என்னோடு பழகிய நாட்களை மறந்துவிட்டு, உன் உயிர்க் காதலன்—என் அருமை நண்பன் வில்லியம்ஸோடு மீண்டும் சேர்ந்து இன்பவாழ்வு வாழவேண்டும் என்பதுதான். வில்லியம்-

"எனக்கு நாவல் எழுதத் திறமையில்லை என்பதை நான் புரிந்து கொள்ளப் பத்து ஆண்டுகள் ஆய்விட்டன"

"அப்படியானால் நீங்கள் எழுதுவதையே விட்டுவிட்டீர்களா, என்ன?".

"ஊஹூம்! எப்படி விடமுடியும்? அப்பொழுதுதான் என் பெயர் மிகவும புகழ்பெற்றுவிட்டதே!"

பரிசு ரூ. 250

'பொன்னி' நடத்தும் புதுமைப்பித்தன் சிறுகதைப் போட்டியில் சிறந்த மூன்று கதைகளுக்கு மொத்தம் ரூ. 250 பரிசு அளிக்கப்படுகிறது.

முதற் பரிசு	ரூ. 125
இரண்டாம் பரிசு	ரூ. 75
மூன்றும் பரிசு	ரூ. 50

முடிவு தேதி: 30-9-52

ஸூக்கும் இக்கருத்தை ஒட்டி ஒரு கடிதம் எழுதியுள்ளேன்.

என்னை இனி நீங்கள் தேட வேண்டாம். இக்கடிதம் உன் கைக்கு வருவதற்குள் நான் இந்தியாவிற்குச் செல்லும் கப்பலில் பிரயாணம் செய்துகொண்டிருப்பேன்.

உன் குழந்தைக்கு என் ஆசை முத்தங்கள்.

இப்படிக்கு,
உன் சகோதரன்
ரமேஷ்''

இக் கடிதத்தைப் படித்து முடித்ததும், ஜூலியாவிற்கு உலகம் சுற்றுவதுபோலிருந்தது.

அடுத்த கடிதத்தைப் பிரித்தாள். அது வில்லியம்ஸிடமிருந்து வந்திருந்தது.

"அன்புள்ள ஜூலியாவிற்கு,

இனி நான் உன் வீட்டிற்கு வருவேன் என்று எதிர்பார்க்க வேண்டாம். என் உயிர் நண்பன் ரமேஷ் உன்னை ஆதரிக்க இருக்கிறான். நான் இறந்துவிட்டதாகக் கருதி நீங்கள் இருவரும் மணந்து கொண்டீர்கள்போலும். அதனால் பாவாயில்லை. அவன் உன்னைச் சகோதரியாகத்தான் பாவித்து வந்தானென்றாலும் சந்தர்ப்பமும் சூழ்நிலையும் அவனைக் கணவனாக்கியிருக்கின்றன. அதனால் நான் ஒரு விதமான கெட்ட எண்ணமும் கொள்ளவில்லை.

நண்பன் ரமேஷ் ஆழ்ந்து யோசித்துத்தான் உன்னை மணம் செய்துகொண்டிருப்பான் என்று எனக்குத் தெரியும். உங்கள் இன்ப வாழ்வில் நான் இடையூறு செய்ய விரும்பவில்லை. அன்று காலை நீங்கள் இருவரும் இருந்த அந்நியோன்ய நிலையைக் கண்டு நான் மனம் பூரித்துப்போனேன். நான் உன்னை மணந்திருந்தாலும், இவ்வளவு உயிருக்கு உயிராக நேசிப்பேனா என்பது சந்தேகம்.

அருமை ஜூலியா, நான் உன்னை வேண்டிக்கொள்வது என்னவென்றால், என்னோடு பழகிய நாட்களை மறந்துவிட்டு உன் உயிர்க்காதலன்—என் அருமை நண்பன் ரமேஷோடு இன்ப வாழ்வு வாழவேண்டும் என்பதுதான். ரமேஷுக்கும் இக்கருத்தை ஒட்டி ஒரு கடிதம் எழுதியுள்ளேன்.

என்னை இனி நீங்கள் தேட வேண்டாம். இந்தக் கடிதம் உன் கைக்கு வருவதற்குள், நான் இங்கிலாந்திற்குச் செல்லும் கப்பலில் பிரயாணம் செய்துகொண்டிருப்பேன்.

உன் குழந்தைக்கு என் ஆசை முத்தங்கள்.

இப்படிக்கு
உன் சகோதரன்,
வில்லியம்ஸ்''

இரண்டு நண்பர்களும் ஒருவருக்காக மற்றவர் தம் வாழ்க்கையைத் துறந்ததையும், இரண்டு கடிதங்களிலும் ஒரேமாதிரியான வாசகங்கள் இருந்ததையும் கண்டு, ஜூலியா மூர்ச்சித்துக் கீழே விழுந்தாள். அவள் குழந்தை ஒன்றும் புரியாமல் தாயைப் பார்த்து விழித்தது!

[மூலம்: பிரான்ஸிஸ் சைலட்]

அந்தாதிக் கதை-1

மனச்சாட்சி

வேலை-வில்லவன்

மழை விடாமல் 'சோ' வென்று வெகுநேரம் பெய்து ஓய்ந்தது. மழை எப்பொழுது வரும் என்று ஏங்கிக் கிடந்தவர்களின் மனத்திலே பால் வார்த்தமாதிரியாகப் பெய்து தீர்த்தது அது. வரண்ட நிலங்களுக்கு விமோசனம் கிடைத்துவிட்டது குறித்த பேச்சு, மகிழ்ச்சியிலே தோய்த்தெடுத்து உழவர்களிடம் பரிமாறிக்கொள்ளப்பட்டது.

"பாழாப்போன மழை"

நகரின் ஒதுக்குப்புறத்திலே, கிராம எல்லைக்கோட்டின் அருகிலே எழும்பி நின்ற குடிசையிலிருந்து கிளம்பியது அக் குரல்.

மழை உண்டாக்கித் தந்திருந்த குளுமையான பொழுதிலே, இதமாகப் பீடிப்புகையை இழுத்து ஊதிக்கொண்டிருந்த பக்கிரி மழையை நொந்துகொண்டான்.

அந்த மழையும் அவனைப் பொறுத்தமட்டில் அந்தச் சூழ்நிலையில் எந்த நன்மையையும் அள்ளித் தந்துவிடவில்லை. அவன் குடிசை சேறும் சகதியும் ஆனதுதான் மிச்சம்.

"மச்சான், பள்ளிக்கூடத்துக்குப் போன கொழந்தையைக் காணோமே......இருட்டிப்போச்சுதே..." என்றாள் அவன் மனைவி, தன் கைக் குழந்தைக்குப் பாலூட்டிக் கொண்டே.

"எங்கேபோயிடும் உங்கொழந்தை? எங்கேயாவது மழைக்கு ஒதுங்கி இருந்துட்டு வந்துடும்." என்று பீடிப் புகையை இழுத்தவாறு பக்கிரி சொன்னான்.

"எழுந்து போய்ப் பாப்பியா?"

"எய், நீ சும்மா இருக்கமாட்டே? வீட்டுக்கு வழி தெரியாதா உன் மவளுக்கு? வருறமாதிரி வருது" என்று அவன் கூறிக்கொண்டிருக்கும்போதே தூரத்தில் தன் மகள் வருவதைப் பார்த்தான்.

"அதோ வருது உம் புள்ளே!" என்று கூறிவிட்டுத் தன் மகள் வந்து கொண்டிருந்த பக்கம் தன் பார்வையைச் செலுத்திக் கூர்ந்து பார்த்தான். அவளோடு இன்னொரு சிறுமியும் கைகோர்த்துக்கொண்டு வருவதைப் பார்த்தான். அது பணக்கார வீட்டுக் குழந்தையாயிருக்கவேண்டுமென்பதைத் தெரிந்துகொண்டான். பட்டுப்பாவாடையும், சட்டையும் அணிந்திருந்த அந்தக் குழந்தை மூக்கும் முழியுமாய் 'மொழுமொழு' வென்றிருந்தது. தங்கம் அந்தக் குழந்தையுடன் அதிகமாக உறவு கொண்டிருந்தாள்.

ஒட்டுப்போட்ட பழைய சீட்டிப் பாவாடையுடன் கண்ணாடிவளையல் இரண்டைக் கையிலே அணிந்து கொண்டிருந்த தன் மகளோடு அந்தச் 'செல்வக்குஞ்சு' கைகோர்த்துக்கொண்டு வருவது அவனுக்கு ஆச்சரியமாயிருந்தது. பெரியவர்களை ஆட்டிப்படைத்துத் தங்கள் கைப் பொம்மைகளாக்கிக்கொள்ளும் செல்வமோ, எழ்மையோ குழந்தைகளிடம் என்ன செய்துகொள்ளமுடியும்? குழந்தைகளிடம் மட்டும் அந்தத் தழுவாத இரு துருவங்கள் எவ்வளவு எளிதில் தழுவும் துருவங்களாகிவிடுகின்றன...!

"நைனா!" என்று அழைத்துக்கொண்டே குடிசை வாசலை அடைந்தாள் அவன் மகள்.

"இது யாரும்மா?" என்றான் அவன் அந்தக் குழந்தையையே இமைக்காமல் பார்த்துக்கொண்டு.

"இது எங்கூடப் படிக்குது. மாலினி...நைனா, மாலினியைக் கொண்டுபோய் அவுங்க வீட்டிலே விட்டுட்டு வந்துடறியா? உனக்குத்தான் அவுங்க வீடு தெரியுமே" என்றாள் அச் சிறுமி.

"யார் மக இது?" என்று கேட்டான்.

"அதுதான், நீ வண்டியிழுத்துக்கிட்டுப் போவியே கீழமாசி வீதி டாக்டர் பங்களாவுக்கு...அவரு மக தான் மாலினி" என்று கூறிவிட்டுத் தன் தோழி மாலினியைப் பார்த்துப் புன்னகை செய்துகொண்டாள் தங்கம்.

"டாக்டர் ஐயா மகளா இது? அப்படிச் சொல்லு...இத்தனை நாள் எப்படி அம்மா நீ வீட்டுக்குப் போறது?" என்று அன்பொழுக அக் குழந்தையிடம் கேட்டான்.

"காரிலே..." என்றது குழந்தை.

"நைனா, இன்னிக்கு மூணு மணிக்கே எங்களுக்குப் பள்ளிக்கூடம் முடிஞ்சிருச்சு. நாங்க ரெண்டு பேரும் பார்க்குக்கு விளையாடப் போனோம். அங்கே மழை வந்திடவே அங்கேயே ஒரு வீட்டு வாசல்லே ஒதுங்கிட்டோம். மழை விட்டதும் பள்ளிக்கூடத்துக்கு வந்து பார்த்தா மாலினி காரைக் காணோம். நாலு மணிக்கு வந்து பார்த்துட்டுப் போயிருச்சின்னு சொன்னாங்க..." என்ற முழு விவரத்தையும் கூறி முடித்தாள் அவன் மகள்.

"அப்படியா?...சரி நான் உன்னை உங்க வீட்டிலே விட்டுட்டு வருகிறேன்" என்றுகூறி எழுந்து வாசலிலே நிறுத்தப்பட்டிருந்தரிக்ஷாவை இழுத்துக்கொண்டு வந்து அதில் மாலினியை ஏற்றி உட்காரவைத்தான்.

"புள்ளே, அடுப்பிலே உலை வை... வந்துடறேன்" என்றுகூறி, வண்டியை இழுத்துக்கொண்டு போகலானான்.

அரைமணி நேரத்திற்கெல்லாம் மாலினியை அவள் பங்களாவிற்குக் கொண்டுபோய்விட்டான் ரிக்ஷாக்காரன்.

"இதோ வந்துடுச்சு அம்மா குழந்தை?" என்றான் அங்கிருந்த வேலைக்காரன்.

"மாலினி...கண்ணு" என்று கூவிக்கொண்டே வந்து வாரியணைத்துக்கொண்டு செல்லமாக, "எங்கேயம்மா போயிருந்தே, கண்ணே" என்று கேட்டாள் பெற்றவள். மாலினி நடந்த கதையை விவரமாகச் சொல்லச் சிரித்துக்கொண்டே கேட்டபடி அங்கு நின்றான் பக்கிரி.

"பாம்...பாம்..." என்று உறுமியவாறு அங்கு டாக்டரின் கார் வந்து நின்றது. அதனுள்ளிருந்து டாக்டர் இறங்கினார். மாலினியின் "அப்பா!" என்ற குரலைக்கேட்டதும் டாக்டரின் மனம் துள்ளிக் குதித்தது. மழையில் இரண்டு மணி நேரம் காரில் ஊர் முழுதும் சுற்றித் தன் மகளைத்தேடிய அவருக்குமகளைக் கண்டதும் ஆனந்தம் தாளவில்லை. அவர் குழந்தையை அணைத்து முத்தமிட்டார்.

படியேறி ஹாலினுள் நுழைந்த சமயம் எதையோ நினைத்துக்கொண்டு திரும்பிப் பார்த்து டிரைவரிடம், "உம்...டிரைவர்...கார் மட்கார்டை ரிப்பேர் செய்யவேண்டும்..." என்று டாக்டர் கூறி நிறுத்தினார். டிரைவர் தலையை அசைத்தான். பக்கிரி மூன்றாவது முறையாக டாக்டருக்குச்செய்த வணக்கத்தை அப்பொழுதுதான் அவர் முதல் முறையாகப் பார்க்க முடிந்தது. "என்னப்பா?" என்றார். "ஒண்ணுமில்லீங்க......கொழந்தையைக் கொண்டுகிட்டு வந்தேன்!" என்றான். அவர் மனைவி செய்தியை அவருக்கு எடுத்துரைத்தாள். சிறிது நேரத்திற்குப் பிறகு அவர் பக்கிரியிடம் ஒரு ரூபாய் நோட்டை நீட்டினார். அவன் புன்சிரிப்புடன் அதைப் பெற்றுக்கொண்டு அவரை வணங்கிவிட்டு, வண்டியை இழுத்துக்கொண்டு போய்விட்டான்.

ஏறத்தாழ ஒரு மணி நேரம் கழிந்திருக்கும். டாக்டர் பங்களாவின் முன்பு, "எந்த பாவிப்பயல் இந்த மாதிரிச் செஞ்சான்னு தெரியலையே ஐயோ......!" என்ற கூக்குரல் கேட்டது. டாக்டர் வெளியே வந்தார்.

ஏஜண்டுகள் தேவை

பொன்மலை
தர்மபுரி
மேட்டூர் அணை
மோகனூர்
பொள்ளாச்சி
மாயவரம்

முன்பணம் கட்டக்கூடியவர்கள் மட்டும். விண்ணப்பிக்கவும்

'பொன்னி'—சென்னை–21

பக்கிரி ரிக்ஷாவிலிருந்து தன் மகளைத் தூக்கியெடுத்துக்கொண்டு அவரை நெருங்கினான். குழந்தை சுயவுணர்வை இழந்து விட்டிருந்தது. இரத்தம், அதன் உடலில் உண்டாயிருந்த காயங்களிலிருந்து கசிந்து ஓடியது. டாக்டர் குழந்தையை அவனிடமிருந்து வாங்கித் தூக்கிக்கொண்டு ஆபரேஷன் ரூமுக்குள் ஓடினார். குழந்தையைக் கிடத்திக் காயங்களுக்குக் கட்டுகள் போட்டு, ஊசி குத்தி, இன்னும் என்னென்னவோ செய்தார். அவர் கைகள் நடுங்கின. வியர்வை கொட்டியது. பக்கிரி வாசலிலே ஆவல் மிகுதியுடன் அவர் வருகையை எதிர் பார்த்துத் துடித்துக் கொண்டிருந்தான்.

"என்ன அடி குழந்தைக்கு?" என்றான் வேலைக் காரன்.

"நான் இங்கே ஐயா கொழந்தையை இழுத்துக்கிட்டு வந்தபோது, எம் பொண்டாட்டி எம் மவளைக் கடைக்கு எண்ணெய் வாங்கியாறதுக்கு அனுப்பியிருக்கிறா. கடைக்குப் போறவழியிலே புள்ளே மேலே எந்தப் பாவி மவனோ காரை ஏத்தித் தொலைச்சிட்டிருக்கிறானே, ஐயோ" என்று கூறி அலறினான் அவன்.

டாக்டர் வெளியே வந்தார். "டாக்டர் ஐயா, என்னங்க? எம்மகள் பொழைச்சிடுமா?..." என்ருன் பக்கிரி பதட்டம் நிறைந்தக் குரலில்.

"பக்கிரி, குழந்தை இறந்து விட்டது. நீ வருந்தி என்ன செய்வது... பாவம்..."

"ஐயோ, மகளே!" என்று கதறிய அவனது விம்மல் ஒலி வானைச் சாடியது. டாக்டருக்கு அந்தக் காட்சியைப் பார்க்கச் சகிக்க வில்லை. உள்ளே சென்ருர். ஒரு பத்து ரூபாய் நோட்டுடன் வெளியே வந்தார். பக்கிரியிடம் அதைக் கொடுத்து மீண்டும் "அழாதேப்பா! இனி அழுது என்ன பயன்?" என்று ஆறுதல் கூறினுர்.

பக்கிரி தன் ஆசை மகளின் சடலத்தை வாங்கி ரிக்ஷாவினுள் வைத்துக்கொண்டு புறப்படத்தயாராஞன். "ஐயா, நான் வர்ரேன்!" என்ருன். "கொஞ்சம் இரு" என்ருர் டாக்டர். மீண்டும் உள்ளே சென்று ஒரு பத்து ரூபாய் நோட்டைக் கொண்டு வந்து அவனிடம் கொடுத்து "இந்தா, பிணத்தை எடுக்கச் செலவுக்கு......" என்ருர்.

"எந்தப் பாவிப் பயல் உன் உயிரைக் குடிச்சானே தெரியலையே? கண்ணே, அவன் வாழ்வாஞ? அவன் பிள்ளைக் குட்டி வாழுமா?" என்று கூறிக்கொண்டே ரிக்ஷாவை இழுத்துச் சென்ருன் பக்கிரி.

ஈட்டியின் வேலையைச் செய்யும் சக்தி வாய்ந்த அந்த வார்த்தைகள்! ஏழையின் அந்தச் சாபம்!......

டாக்டர் சிலையைப்போல நின்று கொண்டிருந்தார். அவர் எதிரே நின்றுகொண்டிருந்த டிரைவரும் அவரும் ஒருவர் முகத்தையொருவர் பார்த்துக்கொண்டார்கள். ஆம்; 'மனச்சாட்சி' மனிதனுக்கு இருக்கத்தானே செய்கிறது!

மாதா கோயில் மணி 'டணர் டணர்' என்று பன்னிரண்டுமுறை ஒலித்து முழங்கிக்கொண்டிருந்தது!

மாதவிடாய் நின்றுபோனதா?

நிகரற்ற மருந்து (தேவி பில்ஸ்)

Regd. by the Central Drugs Laboratory of Govt. of India, Under No. CDL/688

எக்காரணத்தினுலும் எத்தனை மாதமாஞலும் நின்றுபோன மாதவிடாய் அதிசுலபமாகவும் அதிசீக்கிரமாகவும் தவருமல் உடனே வெளியாகும். அநேக நற்சாக்ஷி பத்திரங்கள் பெற்ற திவ்ய ஒளஷதம் உத்திரவாதமுள்ளது. போலி மருந்துகளை வாங்கி ஏமாருதீர்கள். சாதாரண கேஸ்களுக்கு (Ordinary) விலை ரூ. 8-8-0 மாதங்களான கேஸ்களுக்கு (Special) ரூ. 10-8-0 (தபால் செலவு தனி)

கர்ப்பதடை

நிகரற்ற மருந்து (ஸ்பெக் பில்ஸ்)

Government Registered No. 266.

12 நாட்கள் சாப்பிட்டால் 6 வருஷத்திற்கு சாஸ்வதமாக கருவைத்தடுக்கும். மாதவிடாய் தவருது. அநேக நற்சாக்ஷி பத்திரங்கள் பெற்ற திவ்ய ஒளஷதம். போலி மருந்துகளை வாங்கி ஏமாருதீர்கள். (ஸ்பெக் ஜெல்லி) உபயோகித்தால் டெம்பரவரியாக கருவை தடுக்கும். பில்ஸ் விலை. ரூ. 12-0-0 ஜெல்லி விலை ரூ. 6-8-0 (தபால் செலவு தனி)

Mfgrs: SEENU & CO., Post Box, 1638, ( ) MADRAS-1.

கிளை பிராஞ்ச 134. SERANGOON ROAD. சிங்கப்பூர்.

சிலோன் ஏஜண்ட: NEW COLOMBO MEDICAL STORES. 82 MAIN ST. கொழும்பு-11.

அந்தாதிக் கதை—2

நினைவுச்சுழல்

கலைச்செல்வன்

மாதாகோயில் மணி பன்னிரண்டு முறை ஒலித்து முழங்கிக்கொண்டிருந்தது!

பெரியசாமி பகல் உணவை முடித்துக்கொண்டு கையில் வெற்றிலைப் பெட்டியுடன் எதிர்வீட்டை நோக்கிச் சென்றார்.

தென்னந்தோட்டத்தின் உள்ளே கட்டப்பட்டிருந்தது அந்த வீடு. கதிரவனின் அனல் மூச்சைத் தடுத்துத் தென்றலை வீசிக்கொண்டிருந்தன, அங்கிருந்த மரங்கள்.

பெரியசாமி அந்தத் திண்ணையில் வந்து உட்கார்ந்ததைக் கூடக் கவனியாமல் தன் பார்வையை எங்கேயோ அலையவிட்டுக் கொண்டிருந்தான் அந்த வீட்டுச் சிறுவன் மணி.

அவனுடைய கண்களிலே கண்ணீர் கசிந்து கொண்டிருந்தது. அவனது வலது கன்னம் அந்தி நேரத்து வானவிளிம்பைப்போலச்சிவந்து தடித்துப் போயிருந்தது. அந்தக் குழந்தை உள்ளம் எதையோ எண்ணித் தவித்துக் கொண்டிருந்தது.

இதுவரை அவனைக் கவனியாமல் இருந்த பெரியசாமியின் விழிகள் மணியின் பக்கம் திரும்பின.

"எண்டா தம்பி, சாப்பிட்டாயா?" என்று அன்பு கலந்த குரலில் கேட்டார், வெற்றிலையின் காம்பைக் கிள்ளிக்கொண்டே.

"......!"

மணி அவர் கேள்விக்குப் பதில் கூறவில்லை. மெல்லத் தன் தலையை அவர் பக்கம் திருப்பினான்.

தன் கேள்விக்குப் பதில் சொல்லாமல் திரும்பிய மணியின் கன்னத்தைப்பார்த்துத் திடுக்கிட்டார் பெரியசாமி.

"எண்டா தம்பி, அழுதியா?"—பரிவுடன் கேட்டார் அவர். அவன் அதற்கும் பதில் பேசவில்லை. கண்ணீர் விட்டுத் தேம்பினான் அவன்.

"மணி......மணி, உங்க அப்பா அடித்தாரா..." என்று அவன் பிஞ்சுக் கைகளைப் பிடித்துக்கொண்டு கேட்டார்.

"ஆமாம்" என்று அவன் வாய் திறந்து கூறாவிட்டாலும், அதற்கறிகுறியாக ஆடி அசைந்து நின்றது அவனுடைய தலை.

"நீ என்ன குறும்பு செய்தாய்?"—பெரியசாமி விடாமல் கேள்விகளைத் தொடுத்தார்.

அந்தச் சிறுவன் ஏதோ சொல்ல வாயெடுத்தான். அவன் நினைத்ததைக் கூற உதடுகள் துடித்தன. ஆனால், வார்த்தைகள் வெளிவர

"என்ன ஐயா இது, ரசத்தில் ஒரே தலைமயிராக இருக்கிறதே......"

"அடடே, அதன் நிறம் கருப்பா, வெள்ளையா முதலில் சொல்லுங்கள். ஏனென்றால் எங்கள் வேலைக்காரியை அரை மணி நேரமாகக் காணோம்....."

வில்லை ; தொண்டைக் குழியிலேயே புதைந்துபோயின.

"சும்மா சொல்லுடா தம்பி" என்று கூறிக்கொண்டே அவனைத் தன்னருகில் இழுத்து உட்கார வைத்தார் பெரியசாமி.

எதிர்வீட்டுப் பையன்தான் மணி. என்றாலும் அவனிடத்தில் பெரிய சாமிக்கு ஒரு தனி அன்பு உண்டு. புகையிலை, வெற்றிலையிலிருந்து 'ரோஜா மார்க்' சுருட்டு வரை வாங்கிவர அவனுடைய ஒத்துழைப்பு அவருக்குத் தேவையாக இருக்கிறதே என்பதற்காக அல்ல, அவனிடத்தில் ஏதோ ஒரு இனம் தெரியாத அன்பு அவருக்கு எப்பொழுதுமே உண்டு.

பெரியசாமியின் கேள்விகள் அவனுடைய இதயத்தில் குமுறிக்கொண்டிருந்த ஆத்திரத்தைப் பொங்கச் செய்தன.

"பரீட்சையில்..."—அவன் ஏதோ சொல்ல ஆரம்பித்தான்.

"என்ன...!" என்றார் பெரியசாமி அமைதியாக.

"தேறவில்லை...அதுக்காக...!"—கண்களைக் கசக்கிக்கொண்டே சொன்னான் மணி.

தன் தோளிலே கிடந்த துண்டை எடுத்து, வழியும் அவனுடைய கண்ணீரைத் துடைத்துவிட்டார் பெரியசாமி.

"அப்பாதானே அடித்தாங்க...! தேறாதபோனா என்ன? இன்னொரு வருஷம் படித்துப் பாசாகிவிடறது" என்று அவனுக்கு ஆறுதல் கூற ஆரம்பித்தார் அவர்.

அவர் அவனைத் தேற்றினார். ஆனால் அவர் கண்களில் தளும்பி நின்ற நீர்த்துளிகள் வழிந்து தரையில் விழுந்தன.

மணியின் உதடுகளிலிருந்து உதிர்ந்த அந்தச் சொற்கள் பெரிய சாமியின் இதயத் திரையிலே காலமெனும் மண்ணுள் புதைந்துபோயிருந்த அந்நிகழ்ச்சியைத் தோண்டிக் கண்டுபிடிக்க ஆரம்பித்தன!

* * *

அந்த அறையின் மூலை ஒன்றில் அழுதவண்ணம் நின்றுகொண்டிருந்தான் தங்கவேல். அவனுடைய தேம்பல் ஒலி அங்கிருந்த கடிகாரத்தின் ஒலியுடன் போட்டியிட்டுக்கொண்டிருந்தது.

பெரியசாமியின் கண்கள் சிவந்திருந்தன. புருவங்கள் நெறிந்தன. அவர் அப்பொழுது கோபத்தின் பிரதிநிதியாகக் காணப்பட்டார். அவர் தங்கவேலின் தந்தை!

இவர்களுக்கிடையே அன்றைய தினம் எஸ். எஸ். எல். ஸி பரீட்சை முடிவுடன் வெளியான தினசரிப் பத்திரிகை ஒன்று பிரிந்து அலங்கோலமாகத் தரையில் கிடந்தது.

“ஏண்டா மானங்கெட்டவனே, வெட்கமில்லை. இப்போ அழுது என்ன பிரயோசனம்; அப்பவே இந்தப் புத்தி இருந்திருக்கணுமே. உன்னோடு படித்த பையன்களெல்லாம் பாசாகிவிட்டானுங்க. ஊம்... ஊம், ஏண்டா நிற்கிறே? எங்கேயாவது போய்த் தொலை...இனிமேல் படிக்க வைப்பேனென்ற எண்ணத்தை மறந்துவிடு. உனக்குச் செலவுசெய்த பணத்தை நிலத்திலே போட்டிருந்தாலும் நாலு காசாவது கிடைத்திருக்கும். என்னவோ என் புத்தியிலே...போடா, போ. என் முகத்திலே இனி முழிக்காதே. எங்கேயாவது நாக்கைப் பிடுங்கிக்கொண்டு தொலைந்து போ......” என்று கோபவெறியில் வார்த்தைகளை அள்ளி வீசிவிட்டுத் தலையை வேறு பக்கம் திருப்பிக்கொண்டார் பெரியசாமி.

பெரியசாமியின் ஒரே மகன் தங்கவேல். ஆறாவது பாரம் படித்துக்கொண்டிருந்தான். அவன் கல்வித் துறையில் நடுத்தரப் பையன்களைச் சார்ந்தவன். பரீட்சை நெருங்க நெருங்க அவனிடத்தில் ஒருவித ‘கிலி’ ஏற்பட்டது. காய்ச்சலின் வேகத்தையும் பொருட்படுத்தாமல் பரீட்சை எழுதிவிட்டு வந்தான்.

ஆனால் அன்றைய தினசரிப் பத்திரிகை அவனுக்கு ‘மரண சாசனத்தை’த் தீட்டிக்கொண்டு வரும் என்று அவன் எண்ணவேயில்லை. அவன் பரீட்சையில் தவறிவிட்டான். பரீட்சை முடிவையறிந்த பெரியசாமி அப்படி வார்த்தை அம்புகளை அவன்பேரில் செலுத்திக்கொண்டிருந்தார்.

மகனுடைய பரீட்சைக்குப் பணம் கட்டவேண்டிய நேரத்தில், பணமின்றிக் கடன் கொடுப்பவர் யாருமின்றி, வீட்டிலேயிருந்த நகையை அடகுவைத்துப் பணம் கட்டிய வேதனை அவருக்கல்லவா தெரியும்?

கணவன்: தினசரி ரயிலில் டிக்கட் இல்லர்மல் பிரயாணம் செய்பவர்களில் முக்கர்ல்வாசிப்பேர் பெண்கள்தானும் என்று பத்திரிகையில் . போட்டிருக்கிறதே......

மனைவி: இதிலிருந்தாவது ஆண்களைக்காட்டிலும் பெண்கள் சிக்கனமர்னவர்கள் என்பதை ஒப்புக் கொள்கிறீர்களா, என்ன?

தன் மகன் பரீட்சையில் தேறிவிடுவான் என்ற நம்பிக்கையில் செல்லாராம். சேட்டின் பஞ்சாலையில் ஒரு ‘கிளார்க்’ உத்தியோகத்திற்குச், சொல்லிவைத்திருந்தாரே...! திடீரென்று வீசும் புயல், மணல் மேட்டின்மீது கட்டப்பட்ட மாடி வீடுகளைத்தகர்த்துத்தரைமட்டமாக்குவதைப்போலத் தேர்வு முடிவு அவர் இதயச் சுவர்மீது கட்டியிருந்த எண்ணக் கோட்டைகளைத் தகர்த்தது.

தங்கவேல் படுக்கையில் படுத்துப் புரண்டுகொண்டிருந்தான். அழுது அழுது அவன் முகம் வீங்கிக்கிடந்தது. ஒருநாள்கூடத் தன்னைச் சுடுசொல் சொல்லாத தந்தை, அன்று இப்படிக் கனல்தெறிக்கக் கோபித்துக்கொண்டவிதம் அவனைச் சஞ்சலத்திற்குள்ளாக்கியது.

"உன் மனைவிக்கு நீ பொருளாதாரம் கற்றுக்கொடுத்தாயே.........ஏதாவது பலன் கிடைத்ததா......?"

"அதன் பலன் நான் சிகரெட் பிடிப்பதையே நிறுத்த வேண்டியதாயிற்று......"

தன் வாழ்வில் தான் எதிர்பாராத நிகழ்ச்சி நடந்துவிட்டதே என்ற ஏக்கம் ஒருபுறம்; நண்பர்களிடத்தில் எப்படி விழிப்பது என்ற வெட்கம் மற்றொருபுறம்; தன் தந்தைக்குத் தன்னால் எத்தனை துயர் என்ற சஞ்சலம் பிறிதோர்புறம்; தந்தை கூறிய கடுஞ்சொற்களினால் ஏற்பட்ட மாளாத வேதனை இன்னொருபுறம்—இப்படிப்பட்ட எண்ணங்களின் புரட்சியே அவனை வாட்டி வதைத்துக்கொண்டிருந்தது. "எங்கேயாவது போய் நாக்கைப் பிடுங்கிக்கொண்டு தொலை"—பெரியசாமி ஆத்திரத்தின் விளைவாய் ஏசிய இந்தச் சொற்கள் அவனுடைய செவியில் எதிரொலித்தன.

அதிகாலையில் கொல்லைப்புறம் நோக்கி நடந்தார் பெரியசாமி. மாட்டுத்தொழுவத்தைக் கடந்துகொண்டிருந்த அவர் திடீரென்று திடுக்கிட்டு நின்றார்.

அவருடைய தலை சுழன்றது. பூமி வெடித்துத்தான் அதன்கீழ் விழுவது போலிருந்தது அவருக்கு.

அவருடைய குலக்கொடி அழிந்து கிடந்தது. தங்கவேல் மாண்டு கிடந்தான்!

ஆத்திரத்தில் தான் பேசியதைக் குறித்துப் பெரியசாமி அழுதார்.

புத்திரபாசம் அவர் உடலை எரித்துக்கொண்டிருந்தது. தன் அறையில் மாட்டியிருந்த தங்கவேலுவின் புகைப்படத்தைப் பார்த்து பார்த்துச் சிறிது ஆறுதலடைந்துகொண்டிருந்தார் பெரியசாமி.

* * *

சிந்தனைச் சூறாவளியில் அகப்பட்டுச் சிதைந்துகொண்டிருந்த அவர் தன்னுணர்வு பெற்றார்.

எதிர்வீட்டுப் பையன் மணியின் நினைவு வரவே, அவன் பக்கம் திரும்பினார்.

"அப்பா அடிக்காதே! நல்லாப் படிக்கிறேன்; அடிக்காதே அப்பா......!" என்று அவன் படுக்கையில் புரண்டவண்ணம் பிதற்றிக்கொண்டிருந்தான்.

அவர் கண்களில் நீர் ததும்பியது. தன் மகனைப்போல இவனும் தன் உயிரைப் போக்கிக்கொண்டால் என்னசெய்வது என்ற பயம் அவரை வாட்டவே, பிள்ளைப்பாசம் அவரைப் பிடரி பிடித்துத் தள்ளியது.

"மணி, எழுந்திரு"—பெரியசாமி அவனை எழுப்பினார்.

"அடிக்காதே அப்பா" என்று அலறிக்கொண்டே திடுக்கிட்டெழுந்தான் மணி.

எதிரே நிற்பவர் எதிர்வீட்டுப் பெரியசாமி என்று உணர்ந்தபிறகு தான் அவன் உடல்நடுக்கம் நின்றது.

"மணி, உன் அப்பா வர நாழியாகும். சாப்பிடலாம், வா" என்று அன்புகலந்த குரலுடன் அவனை அழைத்துச்சென்றார் தன் வீட்டிற்கு. அந்தச் சிறுவன் கண்களைக் கசக்கிக்கொண்டே அவரைப் பின்தொடர்ந்தான்.

காதல்

பெரி. சிவனடியான்

கல்லூரி மாணவன்

காதலே கடவுள்; அன்புக் காதலி மடியே சொர்க்கம்
காதலே உலகம்; இன்பக் காதலி உளமே வீடு
காதலே வாழ்வு; கொஞ்சும் கன்னியின் இதழே சோறு
ஆதலால் சொல்வேன் இன்பம் அங்குதான் கொள்ளை; கொள்ளை.

கல்லூரி மாணவி

காதலோ நீலவ்வானம் காட்டிடும் அழகின் பூச்சு
மாதுநான் தூங்கும்போது மலர்ந்திடும் கனவுக் கொஞ்சல்
வேதியர் முணுமுணுக்கும் விளங்கிடாச் சொல்லின் கோர்வை
சாதியும் மதமும் இன்னும் சரிவர உணராச் செய்கை.

மணமானவன்

காதலோ நாளும் போட்டுக் கழற்றிடும் பழைய சட்டை
போதையின் உச்சி; பின்னே பொறுப்புள்ள துன்பக் கேணி
வாதையின் மன்னன்; வாழ்வை வறட்சியாய்க் காட்டும் சிலன்
ஏதுநான் சொல்ல; சொன்னால் எம்மவர் ஏசுவார்கள்.

மணமானவள்

காதலோ கணவன் தந்த கடன்பணம் எனது வாழ்வில்
ஆதலால் கேட்கும்போது அளித்திட வேண்டும்; மேலும்
ஆதியில் இன்ப மீந்து அளித்திடும் குழந்தை குட்டி
காதினில் அன்பைப் பாய்ச்சும் மழலையே அதன்பின் காதல்

விதவை

காதலாம் காதல்; பொல்லாக் கயவர்கள் கட்டு கின்ற
வேதனைக் கோட்டை; அங்கே விதியதன் காவற் காரன்
மேதகு கவிஞ ரேற்றி மினுக்கிடும் குப்பைத் தொட்டி
நாதனை இழந்தோர் தங்கி நலிந்திடும் நரக வாசல்.

விலைமாது

பட்டினி வாழ்வை மாற்றிப் பாரினில் வாழ்வ தற்குக்
கட்டுடல் அழகை விற்றுக் காசினை அடைய இங்கே
எட்டணாக் காத லுண்டு; இழிவெனிற் சாக வேண்டும்
கட்டணம் காதல்; எந்தன் கனிவுடல் இயங்கும் பொம்மை.

மதகுரு

காதலோ மாயை; நல்லோர் கருதிடாச் செய்கை; தேவ
நாதனைக் கண்டு மோட்சம் நல்கிட முடியாக் கேடு
நீதியைப் போக்கித் துன்பம் நிலைத்திடச் செய்யும் சட்டம்
ஆதியில் விநாடி இன்பம்; அப்புறம் பிறவித் துன்பம்

முதியவர் – முதியவள்

காதலோ நினைந்து பார்த்துக் களித்திடும் பொழுது போக்கு
சோதனை முடிய உள்ளத் தொடர்பென மாறி, நெஞ்சில்
மோதுதல் குறைய அன்பை முகிழ்த்திடும் இன்பப் பூங்கா.
மேதினி சிறக்க நாங்கள் விரும்புமிக் காதல் தேவை

குடும்பம்

ரா. பாலாஜி

சம்பளக்காரர்களின் வாழ்க்கையில் வந்து செல்லும் மாதத்தின் கடைசி நாட்கள் குடும்பத்தைச் செத்துப் பிழைக்கும் நோயாளியாக்கிவிடுகின்றன. நோயாளிக்கு அதிர்ச்சி தரும் செய்திகளைப்போல் குடும்ப வைபவங்கள் வேறு இணைந்து கொள்ளுகின்றன.

நாலு பேருக்குப் பயந்து அறிவுக்கும் அன்புக்கும் இடையில் குழந்தையாய்ச் சிக்கித் தவிக்கும் மனைவியின் நச்சரிப்பு மன அமைதியைக் குறைப் பிரசவ வேதனைக்குள்ளாக்கியது.

"இதோ வந்துவிடுகிறேன்" என்று ஒவ்வொருவினுடியும் காலண்டரின் மூலமும், கடிகாரத்தின் மூலமும் மைத்துனி குழந்தையின் பெயர் வைக்கும் வைபவம், பிரசவ வேதனையுடன் கடமைத் தொல்லையையும் பிணைத்தது.

கடமைத் தொல்லை, உள்ளத்தைப் போராட்டமில்லாத போர்க்களத்தில் கொண்டுவந்து நிறுத்தி வேடிக்கைப் பார்த்தது.

"நமது செல்லத்திற்கும் செய்திருக்கிறுளே; நாமும் செய்யத்தானே வேண்டும்? நாலுபேர் கேட்டால் என்ன நினைப்பார்கள்?" என்று கூறிக்கொண்டே நெருங்கிய மனைவிமீது எனக்கு ஆத்திரம்தான் அதிகரித்தது.

'நமது செல்லத்திற்கும் செய்திருக்கிருளே, நாமும் செய்யத்தானே வேண்டும். நாலுபேர் என்ன நினைப்பார்கள்?' என்ற மனைவியின் நியாயமான முறையீட்டை எண்ண, எண்ணக் குழப்பநிலை அதிகரித்தது.

நகரும் மாதத்தில் எதிர்பாராத செலவுகள். முக்கிய பண்டிகைக்கு இரண்டு நாள் முன்னமே நெருங்கிய மனைவி வீட்டு உறவினர்கள் வந்துவிட்டார்கள். மனைவிக்கோ, வராதவர்கள் வந்துவிட்டார்கள் என்ற பெருமை. நான்கு நாட்கள் சமாளிப்பதற்குள் மனைவி சோர்ந்துவிட்டாள். உறவினர்கள் வருகையின் மூலம் ஏற்பட்ட நிர்ப்பந்தச் செலவு குடும்பத்தைக் கொந்தளிப்புக்குள்ளாக்கியது.

கொந்தளிப்பு ஓய்ந்த சில நாட்களுக்கெல்லாம் புயலே தொடங்கி விட்டது. நோட்டீஸ் வண்டியின் வாத்தியத்தை கேட்டுப் பரபரப்புடன் வாயிலுக்குச் சென்ற செல்லம் நோட்டீஸ்வாங்க வேகமாகஓடினுள். வாயிற்படிகளில், சரியானபடி கால் வைத்து இறங்காமல் தவறி விழுந்து வலக்கையை முறித்துக்கொண்டாள்.

பார்ப்பவர்கள் எல்லோரும் 'பெண்குழந்தை உடனடியாக கவனியுங்கள்' என்று பலவித யோசனைகள் கூறித் திகைக்க வைத்தனர். நான் கலங்கினேன். செல்லம் மணவறையில் மணமகளாய் உட்கார்ந்திருக்கும் பொழுது இவ் விபத்து ஏற்பட்டு விட்டதைப்போல் நளினு அழுது கொண்டு உட்கார்ந்துவிட்டாள். 'எக்ஸ்ரே' எடுத்து எலும்பு முறிவுக்கு நம்பிக்கையான வைத்தியம் செய்தும் மனைவியின் அழுகை நிற்கவில்லை.

எலும்பு முறிவின்மூலம், ஏற்பட்ட புயல் ஓய்ந்த இரண்டொரு நாளைக்கெல்லாம் மைத்துனியின் பூகம்பக் கடிதம் வந்தது.

"அன்புள்ள அக்காவுக்கு,

எனக்கு மகள் பிறந்திருக்கிருள். பெயர் வைக்கும் வைபவத்தை வருகிற வெள்ளிக்கிழமை நடத்த முடிவு செய்திருக்கிறோம். என் வீட்டு வைபவத்தை, நீதானே முன்

நின்று செய்யவேண்டும். அத்தானுக்கு எங்கள் நினைவு. செல்லத்திற்கு என் ஆசி. எல்லோருக்கும் அன்பு வணக்கங்கள்.

அன்புள்ள,
மீரா"

சம்பள நாளுக்கு மேலும் எட்டு நாட்கள் இருக்கின்றன. மைத்துனி குழந்தையின் பெயர் வைக்கும் வைபவம் ஆறுவது நாளிலேயே நகர்ந்துவிடுகிறது. போகாவிட்டாலும், அவசியம் அன்பளிப்பாவது அனுப்பிவைத்தாகவேண்டும்.

நாட்கள் நெருங்க, நெருங்க மனைவியின் நினைப்பூட்டல் வற்புறுத்தலாக உருவாகியது. குடும்பச் சூழ்நிலை என்னைவிடத் தெளிவாக நளினுவுக்குத்தான் தெரியும். தெரிந்திருந்தும் என் மனதைக் குழப்பமடையச் செய்கிறாள்!

"நாளை ஒரு நாள்தான் இருக்கிறது. எப்படியாவது பத்து ரூபாய் அனுப்பிவைத்து, வர முடியாததற்கு வருத்தம் தெரிவித்துக் கடிதம் எழுதி விடுங்கள், அத்தான்" என்று நளினு கூறினாள்.

"நளினு, உன் கணவன் மில் கூலி என்பதையே மறந்துவிடுகிறாயா? பத்தும் பதினைந்தும் நம்பிக் கொடுக்கும் நிலையிலா நாம் இருக்கிறோம்?"



என்று மேலிட்ட உணர்ச்சியுடன் நான் கூறி முடிப்பதற்குள் நளினு விசித்து விசித்து அழ ஆரம்பித்தாள்.

வேகமாக நெருங்கி, பலமுறை அவள் கன்னத்தில் அறைந்துவிட்டேன். அழுகைகலந்தகுரலில் ஏதோ கூறினாள். தெளிவாக உணரமுடியவில்லை. மனச்சுமையுடன் வெளியேறினேன். குழப்பமான நிலையில், நினைப்பும் சிந்தனையும் நடத்திய கண்ணாமூச்சி விளையாட்டு என் மனச்சுமையை அதிகரிக்கச் செய்தது.

சினிமாவிற்குச் சென்றாகிலும், மனச்சுமையைக் குறைத்துக்கொள்ளலாம் என்ற எண்ணத்துடன் சட்டைப்பையிலிருந்த நாணயங்களை எண்ணினேன். செல்லத்திற்குப் புதிதாய்த் தைத்த சட்டைக்குக் கொடுக்கவேண்டிய தையல் கூலி ஆறணா; சம்பளம் வருகிறவரையில் மில்லில் கும்பி கொதித்துக் காதடைத்துத் தொலைக்கும்பொழுதெல்லாம் டீ குடிக்கவைத்திருக்கும் ஐந்தணா; என்னைப்போல் பலவிதத்தில் மூளியாய் இருக்கும் அந்தச் செல்லாத எட்டணா— இவைகளைக் கண்டவுடன் ஏதோ ஒரு முடிவுக்கு வந்தவனைப்போலப் பத்தணாவுக்கு டிக்கட் வாங்கிப் படம் பார்க்கக் கொட்டகையினுள் நுழைந்தேன்.

கொட்டகையின் அமைதியைக் கிழித்துக்கொண்டு எழுந்த ஓர் பெண்ணின் அழுகுரல் படம் பார்த்துக்கொண்டிருந்தவர்களைத் திடுக்கிடச் செய்தது. சில விநாடிகளில் மின்சார விளக்குகள் எரிய ஆரம்பித்தன. அழுகை அதிகரிக்கத் தொடங்கியது. பெண்கள் பகுதி என்பதையும் மறந்து வேகமாய்ச் சென்று கவனித்தேன்.

செத்துக்கிடந்த குழந்தையை ஏந்திக்கொண்டிருந்த தாய் கதறி அழுதுகொண்டிருந்தாள். உடனிருந்த தோழிகள் சமாதானப் படுத்தியும் அவளால் அழாமல் இருக்க முடியவில்லை.

செத்துவிட்ட குழந்தைக்குச் சில மாதங்களாகவே அடிக்கடி வலிப்பு வருவதுண்டாம். குழந்தையின் தந்தை— அவளுடைய கணவன் நோயாளியாம். மிகவும் மோசமான நிலையில் இருக்கிறதாம் அவன் உடல் நிலை. தோழிகளின் வற்புறுத்தலின் மீது, அசட்டுத்தனமாய்க் கணவனிடம் வலிய அனுமதி பெற்றுச் சினிமாவுக்கு வந்துவிட்டாளாம்.

"ஐயோ, அத்தான் முகத்தில் எப்படி விழிப்பேன்? உலகம் என்ன நினைக்கும்!" என்று உரக்கக் கூவி, செத்துவிட்ட குழந்தையை மூரட்டுத்தனமாய் வீசி எறிந்துவிட்டுப் பைத்தியக்காரியைப்போல் ஓட முயன்றாள். பலர் தடுத்து,நிறுத்துவதற்குள் வாயிற்படிகளில் தடுக்கி விழுந்து முகத்தில் பலத்த காயத்தை ஏற்படுத்திக்கொண்டு மயங்கிக் கீழே சாய்ந்தாள் அவள்.

நோயாளிக் கணவனை வீட்டிலே விட்டுவிட்டுச் சினிமாவிற்கு வந்திருக்கிறாள் பேதை! குழந்தை செத்து விட்டது. பெற்ற மனம் எவ்வளவு பாடுபட்டிருக்கும்? 'அத்தான், உங்கள் முகத்தில் எப்படி விழிப்பேன்; உலகம் என்ன நினைக்கும்?' என்று குழந்தையின் பிரிவையும் மறந்து முரட்டுத்தனமாக வீசி விட்டுப் பைத்தியக்காரியைப்போல் ஏன் ஓடவேண்டும்?

இறந்த குழந்தையைவிட—நோயாளிக் கணவனைக்காட்டிலும் அவளுக்கு 'உலகம்' முக்கியமானதல்லவே? ஏன் பயந்து ஓடினாள்?

குழந்தையின் தாய்க்கு 'உலகம்' பயங்கரமாய்த் தோன்றியது. நளினாவுக்கு உலகின் பிரதிநிதிகளான அந்த நாலுபேர் பயங்கரமாகத் தோன்றி இருக்கவேண்டும். இல்லை என்றால், என்னைவிடக் குடும்பச் சூழ்நிலையைத் தெளிவாக உணர்ந்தவள், ஏன் அப்படி நடந்துகொண்டாள்? இதோ அலறும் இந்தப் பெண்ணைப்போல் நளினாவும் அசட்டுத்தனமாக நடந்து கொண்டிருந்தால்.....

நினைவுத் திருப்பம் பயங்கர அதிர்ச்சியை உண்டாக்கியது.

நான், குழந்தை, உறவினர்கள், எதற்கும் பயப்படவேண்டிய அந்த நாலுபேர்—இவைகளைத் தவிர வேறு எதையும் அறிந்துகொள்ளாத நிலையில் இயங்கும் இந்த எங்கள் வாழ்க்கைப்போக்கையும் என் மன நிலையையும் சிந்தித்தேன். எதற்கெடுத்தாலும், 'நாலுபேர்—நாலுபேர்' என்று கூறும் இந்த நாலுபேருக்குப் பயந்து தானா அவள் வாழ்க்கை என்னுடன் பிணைக்கப்பட்டிருக்கிறது? இதுவா வாழ்க்கை? இதுவா குடும்பம்?

அவள் என்ன தவறு செய்துவிட்டாள்? குடும்ப கௌரவத்தைக் காப்பாற்ற, சூழ்நிலையையும் என் மனப் போக்கையும் பொருட்படுத்தாது, எனக்கு நினைவூட்டிக் கடமையைத் தானே செய்தாள்? அவள் செல்வக் குழந்தைக்குப் பால் கொடுத்துக் கொண்டிருந்ததையும் மறந்து மிருகமாகிவிட்டேனே...விக்கி அழுத குரலுடன் எதையோ கூறியதை நினைத்துக்கொண்டேன். என் வாழ்க்கைப் போக்கு எப்படி அமைந்துவிடுமோ

குறள் நெறி

தமிழ்மக்கள் வள்ளுவரின் திருக்குறளைக் கற்பதிலும் அந்நெறியில் நிற்பதிலும் பெரிதும் ஆர்வம் கொண்டிருக்கிறார்கள். 3-8-52 ஞாயிறன்று சென்னை கோகலே மண்டபத்தில் நடைபெற்ற திருவள்ளுவர் இளைஞர் கழக மூன்றாவது ஆண்டுவிழா நிகழ்ச்சிகளே இம்முடிவுக்குப் போதுமான ஆதாரமாகும். தோழர்கள் நாஞ்சில் மனோகரன், டி. கே. சீனிவாசன் இருவரும் குறள் தமிழருக்கு வாய்த்த அரிய கேடயம் என்னும் செய்தியை விளக்கி, வீர உரை ஆற்றினார்கள். குறள் வகுப்புகளை நடத்திய கழகப் புலவர் திரு. சி. முருகேசனாருக்குப் பரிசு வழங்கிப் பாராட்டிப் பேசிய திரு. முருகு சுப்பிரமணியன் ஒவ்வொரு தமிழ்க் குடும்பமும் தமிழ்க்கோட்டையாக மாறவேண்டும் என்று குறிப்பிட்டார். தலைமை தாங்கிய டாக்டர். திரு. மா. இராசமாணிக்கம் அவர்கள் தமிழுக்கு வரும் தீங்கை எதிர்க்கப் புலவர்கள் தயங்கார் என்று பெருமிதத்தோடு மொழிந்தார்கள். செயலாளர் திரு. கோ. குமாரசாமி நன்றி கூற விழா இனிது முடிந்தது.

என்று வேகமாக ஓடினேன். ஓடிக்கொண்டிருந்த படத்தைக் கூடப் பார்க்கத் தோன்றாமல்.

உள்ளே நுழைந்தேன். அழுத முகமாகவே தூங்கிவிட்ட நளினா என்னைக் கண்டு திடுக்கிட்டு எழுந்தாள்.

“அத்தான், என்னவோ அசட்டுத்தனமாய் எண்ணி உங்கள் மனதைக் குழப்பிக் குடும்பத்தை அழுதமுகமாக்கிவிட்டேன். இந்தக் கடிதத்தை இரண்டு வாரங்கள் கழித்துத்தான் அனுப்பப்போகிறேன். என் திகைக்கிறீர்கள்? படித்துத்தான் பாருங்களேன்” என்றாள் மனைவி சிரித்துக் கொண்டே.

“அன்புள்ள மீரா,

செல்லத்திற்குச் சிறிய அம்மை கண்டு இரண்டு வாரமாகிறது. வருவதற்கான ஏற்பாடுகள் செய்து கொண்டிருக்கும்பொழுது செல்லத்திற்கு அம்மை கண்டுவிட்டது; வரமுடியவில்லை. அம்மை குறைந்து வருகிறவரையில், கடிதம் எழுதக்கூடாது என்ற நியதிக்குப் பயந்துதான் கடிதம் எழுதவில்லை. குழந்தைக்கு என்ன பெயர்? நன்றாக விளையாடுகிறாளா? எல்லோருக்கும் என் அன்பு வணக்கத்தைக் கூறு.

அன்புள்ள,

நளினா”

கடிதத்தை ஒருமுறை படித்தேன்; உணர்வு பெற்றேன். மறுமுறை படித்தேன்; மனிதனானேன்! ‘குடும்பம் ஒரு குழந்தை; அதை அழுத முகமாகவும், சிரித்த முகமாகவும் வைத்துக்கொள்ளத் துணைவியால்தான் முடியும்’ என்று எங்கோ படித்ததை நினைத்துக்கொண்டேன். நளினா கதவைப் படீரென்று சாத்தி என் நினைவைச் சிதறவைத்தாள்!

பொழுது போக்கு

ராதா

மூன்று பிள்ளைகள்

இந்தியாவிலேயே சிறந்த சாதனங்கள் அமையப் பெற்ற ஸ்டுடியோக்களில் ஒன்று எனப் புகழப்பட்டதும், மேல்நாடுகளுக்குச் சென்று கலை நுணுக்கங்களை அறிந்து வந்த கலைஞர்களைத் தன்னகத்தே கொண்டதுமான ஜெமினி **'மூன்று பிள்ளைகள்'** என்ற ஒரு சாதாரணப்படத்தைத்தான் இம்முறை வெளியிட முடிந்தது. இதற்குமுன் வெளிவந்த ஜெமினிப் படங்களைவிட உயர்ந்தது என்றோ, போற்றிப் புகழும்படியான கலைநுணுக்கங்கள் நிறைந்தது என்றோ, இதைக் கூறுவதற்கில்லை.

சாதாரணமாக நம் குடும்பங்களிலே நடக்கும் அன்றாட நிகழ்ச்சிகளைக்கொண்டு கதை பின்னப்பட்டிருக்கிறது. படத்தின் பெயர் 'மூன்று பிள்ளைகள்' என்றிருந்தாலும், முடிவுவரை அப் பிள்ளைகளின் தாயைப் பற்றியே சுற்றிச் சுழன்று ஓடுகிறது படம்.

'பிளாக் மார்க்கெட்' கணக்கு எழுதமாட்டேன் என்று வேலையை ராஜினமா செய்துவிட்டு வெளியேறிய சோமசேகர், திருடுவதற்கு எப்படி மனம் துணிந்தார்? சூழ்நிலைதான் அதற்குக் காரணம் என்று ஜெமினி சமாதானம் கூறக்கூடும். அங்ஙனமாயின் சோமசேகரால் கத்தை கத்தையாக நோட்டுக் களவாடப்பட்டிருந்தும், போலீஸ் இலாகாவிலோ, பறிகொடுத்தவர்களிடமோ எவ்விதமான பரபரப்பையும் காணோம்! வேலைபோனதும், சோற்றுக்கே வகையற்றிருந்த சோமசேகர், வேலைக்கே போகாமல், மீண்டும் திடீரென்று பணக்காரராகி டாம்பீக வாழ்க்கை நடத்துவதைப்பற்றி, அண்டை அயல் வீட்டார் சந்தேகப்படவேயில்லை. மூன்று பிள்ளைகளின் குணத்தைச் சித்தரிக்க முற்பட்டவர்கள், நடுப்

பிள்ளையான சேகரின் குணாதிசயங்களைச் சித்தரிக்கத் தவறிவிட்டார்கள்.

ஆனால் 'மூன்று பிள்ளைகள்' படக்கதை 'மா' என்ற ஹிந்திப்படத்தின் மூலமாம். இதைப்பற்றிய அறிவிப்பு படத்தில் காட்டப்படாதது வருந்தத்தக்கது!

நடிப்பைப் பொறுத்தவரை, எல்லோருமே நன்றாக நடித்திருக்கிறார்கள். ஆனால் அந்தச் சிறுவன் சுதாகரின் நடிப்பு நம் உள்ளத்தைத் தொடுகிறது. நல்ல வருங்காலம் காத்திருக்கிறது அவனுக்கு. சேதுவுக்குத் தன் நடிப்புத் திறமையைக் காட்டப் போதிய சந்தர்ப்பம் கொடுக்கப்படவில்லை.

எம். கே. ராதா, கணேசன், ஸ்ரீராம் ஆகியவர்கள் மூன்று பிள்ளைகளாகவும் சுந்தரிபாய், சூர்யப்பிரபா, வனஜா, ஆகியவர்கள் முறையே அவர்களின் மனைவிகளாகவும், கண்ணாம்பாவும், நாகேந்திரராவும் அவர்களின் தாய், தந்தையர்களாகவும் நடிக்கிறார்கள். கண்ணாம்பா ஆரம்ப முதல் கடைசி வரையில் ஒரேசோகமயமாகக் காணப்படுகிறார். கண்ணன் ஜெயிலுக்குப் போகையில் கதறியழும் போதும், அவன் விடுதலையடைந்தான் என்ற செய்தி கேட்டுப் பூரித்துப் புளகாங்கிதமடைந்து, அம் மகிழ்ச்சிச்செய்தியைத் தன் கணவனிடம் கூற ஓடிவந்து பார்க்கும்போது, கணவன் பிணமாய் இருப்பதைக் கண்டு கதறி யழும் கட்டத்திலும் நடிப்பின் உச்சத்தை அடைகிறார் கண்ணாம்பா. நாகேந்திரராவ் படத்தின் டைரக்ஷனையும் ஏற்றுக்கொண்டு, தகப்பனாகவும் நடித்திருக்கிறார். சோகக் கட்டங்களில் அவரின் நடிப்பு நன்றாக அமைந்துள்ளது. யாரும் எதிர்பாராத வகையில் நடித்திருக்கிறார்கள் ஸ்ரீராமனும், குமாரி வனஜாவும். படத்தில் இவர்களுக்கு அதிக சந்தர்ப்பங்கள் தரப்பட்டிருக்கின்றன. ராதா, தன் பாகம் உணர்ந்து நன்றாக நடித்திருக்கிறார். 'வெடுக்-வெடுக்'கென்று பேசும் சுந்தரிபாயின் பேச்சையும், நடிப்பையும் யாருமே மறக்கமாட்டார்கள். நாராயண ராவ் பட முதலாளியாக அனுபவித்து நடித்திருக்கிறார். சம்பூர்ண ராமாயணப் படப்பிடிப்பு இப்படத்திற்குத் தேவையில்லாவிட்டாலும், சோகத்தை மறக்க நல்ல நகைச்சுவையுடன் அமைந்திருக்கிறது.

ஒரு சில குறைகள் இருப்பினும், மொத்தத்தில் ஜெமினியின் 'மூன்று பிள்ளைகள்' அனைவரும் குடும்பசகிதம் பார்த்துக் களிக்கவேண்டியதொரு நல்ல படம் என்றே சொல்ல வேண்டும்!

நான் படித்தவை

காதலி
அன்டோன் செகாவ்
மொழிபெயர்ப்பு:
டி. என். இராமச்சந்திரன்
இமயப் பதிப்பகம், நாகப்பட்டினம்.
விலை ரூ. 2—8—0

"இக் கதை எவ்வளவோ சிறப்பான முறையில் எழுதப் பட்டிருந்தாலும், என்னல் சில பகுதிகளைப் படிக்கும்போது கண்ணீர் உகுக்காமல் இருக்க முடியவில்லை" — அன்டோன் செகாவ் எழுதிய 'காதலி'க்குத் தாம் அளித்துள்ள முன்னுரையில் டால்ஸ்டாய் இப்படி உள்ளம் உருகக் கூறுகிருர்.

'அழுகி நாறிக் குத்துயிரும் குலையுயிருமாகச் செத்து மடிந்து கொண்டிருக்கும் வாழ்வின்மீது மனித சமுதாயமே அருவருப்புக்கொள்ளும்படி புதிய எழுச்சிமிக்க விழிப்புணர்ச்சியைத் தருவதுதான் செகாவின் சிறுகதைகள்!...'—இவை மார்க்ஸிம் கார்க்கியின் சொற்கள்.

'ஒரு மனிதனுக்குத் தேவை மூன்று கஜ நிலந்தான் என்ற வழக்கச்சொல் யாவரும் அறிந்ததே. ஆனல், அந்த மூன்று கஜ நிலம் இறந்த மனிதனுக்குத் தேவை. வாழும் மனிதனுக்கு மூன்று கஜ நிலமல்ல; மாவட்டமல்ல; மாநிலமல்ல; உலகமே அவனுக்கு வேண்டும். அதிலுள்ள அத்தனை இயற்கை வளங்களும் அவனுக்கு வேண்டும். அவன் ஆக்க சக்தியுடன் பரிணமித்து இன்புற்று வாழ அத்தனை வளமும் வேண்டும்—மனித சமுதாயத்தின் மீது இவ்வளவு அக்கரை கொண்ட செகாவின் சிறுகதைகளை டால்ஸ்டாயும் கார்க்கியும் புகழ்ந்து போற்றியிருப்பதில் வியப்பென்ன?

இன்றைய மனித உலகிற்கு—நோயுற்று நொடித்துக் கிடக்கும் மனித சமுதாயத்திற்கு—தேடினும் கிடைக்காத சஞ்சீவி போன்ற செகாவின் சிறுகதைகளை உள்ளடக்கமாய்க் கொண்டதுதான் 'காதலி' என்ற இப் புத்தகம். மொழிபெயர்ப்பு சுமார்.

நல்ல முடிவு
(நாடகம்)
ஆசிரியர்:
அ. ர. முத்துக்கிருட்டிணன்
அன்புப் பதிப்பகம்,
செவ்வாய்ப்பேட்டை, சேலம்.
விலை ரூ. 0—10—0

'நல்ல முடிவு' என்ற இந்நாடகத்தைப்பற்றி என்ன சொல்வது? இந்நூலாசிரியர் இன்னும் சில நூறு புத்தகங்களையாவது படித்துக் கற்பனை பண்ணவும், எழுதவும் பழகிக்கொண்டு இத்துறைக்கு வருவதுதான் நல்லது!

இன்பக் கனவு

ஆசிரியர் :
சித்தார்த்தன்
வைகறை வெளியீடு,
திருப்பாதிரிப்புலியூர்.
விலை ரூ. 0-8-0

இது பொழுதுபோக்க உதவும் வெட்டிக் கதையல்ல; படிக்கப் படிக்கச் சிந்தனைச் சக்கரத்தைச் சுழற்றிவிடும் நல்ல முற்போக்குக் கதை!

"நீர் உம் கடனை இன்று கொஞ்சமாகிலும் தரப்போகிறீரா, இல்லையா?"

"இப்போது என்னிடம் செப்பாலடித்த காசுகூடக் கிடையாது."

"அப்படியென்றால், நீர் எனக்குத் தரவேண்டிய கடன் முழுவதையும் தந்துவிட்டதாக, உனக்குக் கடன் தந்த மற்றவர்களிடம் சொல்லி விடுகிறேன், பாரும்!"

ஊஞ்சல்

ஆசிரியர் :
நா. அறிவழகன்
புதுமை நிலையம், திருச்சிராப்பள்ளி.
விலை ரூ. 0—10—0

இச் சிறு புத்தகத்தில் அடங்கியுள்ள 'பிள்ளை பெறும் பேதை', 'ஊஞ்சல்' என்ற இரண்டு சிறுகதைகளும் சுவை மிக்கவை. —குமணன்

வரப்பெற்றோம்

The Indian Rationalist: (ஆங்கில மாத இதழ்) ஆசிரியர்: எஸ். ராமனுதன், சென்னை—1. விலை ரூ. 0–2–0.

அறிவிற்கு விருந்தளிக்கும் கட்டுரைகளுடன் முதல் இதழ் அமைந்திருக்கிறது. வரவேற்கிறோம்!

தமிழ் இளைஞன். (மாத வெளியீடு) ஆசிரியர்: யுதிஷ்டிரன், திருப்பாதிரிப்புலியூர். விலை ரூ. 0–2–0.

பாரதி முகப்புப்படம் தாங்கி வெளிவந்த முதல் இதழில் எஸ். ஆறுமுகம், சுகி, தி. நா. சுப்பிரமணியம், வ. சம்பந்தன் முதலியோரின் அழகிய கட்டுரை, கதைகள் இடம்பெற்றிருக்கின்றன.

கோமாளி (சிறுவர் வாரப் பத்திரிகை) ஆசிரியர்: திருநாவுக்கரசு, சென்னை—1. விலை ரூ. 0–2–0.

'தங்கமணி' யின் துணைகொண்டு வெளிவந்திருக்கும் முதல் இதழ் சிறந்த முறையில் வெளிவந்திருக்கிறது.

—பாலா.

Edited, Printed and Published by Murugu Subramanian for Ponni Ltd., at Ponni Achakam, 16. Seni Amman Koil Street, Tondiarpet Madras-21.

ஆவணக் காப்பக
197814

பரிசுபெற்ற தலைப்பு

25—7—52 இதழ் தலைப்புப் போட்டியில் பரிசுபெற்ற தலைப்பு :

" விரைவேன் ! குழவியைக் காணவா ? கொழுநனைப் பேணவா ?"

பரிசு பெற்றவர் : மா. சந்திர சேகரன், சின்னமனூர்.

★

பாராட்டுக்குரிய தலைப்புகள்

1. பெண்ணை சுமப்பவள்—பெற்றுக் காப்பவள் !

—நா. சீனிவாசன், அலவாக்கோட்டை.

2. உழைப்பிற்கரசி— உலர்ந்த சருகு !

—எம். எஸ். இராமசாமி, சென்னை-14.

3. கடமையை உணர்ந்தாள் ; நடையில் விரைந்தாள் !

—கே. வி. வி. சாமி, பாளையம்பட்டி.

4. கூடையைச் சுமக்கின்றுளா ? தன் குறைகளைச் சுமக்கின்ருளா ?

—பண். வெ. இராசவேல், பண்ணுருட்டி.

5. எரு ஏந்தி எழில் ஏந்துவாள்.

—ப. கிருட்டினசாமி, மேட்டுப்பாளையம்.

6. கூடைதான் குடையோ ? எளிய ஆடைதான் அணியோ ?

—மாரி. இராம. சந்திரன், சின்னமனூர்.

பொருளடக்கம்

மலர் 6	ஆகஸ்டு, 10, 1952	இதழ் 12

திருவள்ளுவர் ஆண்டு 1983
ஆடித் திங்கள் 26-ம் நாள்.

பரிசுபெற்ற தலைப்பு	...	1
பத்துரூபாய் பரிசு !	...	2
தமிழைக் காப்போம்......	...	3
வெறுங்கலாட்டா	...	7
இனிதே ! இனிதே !	...	11
காதலின் முடிவு	...	14
ஒற்றை ரோஜா (தொடர்கதை)	...	17
ஆஸ்கார் ஒயில்டு	...	28
தம்பி (சிறுவர் தொடர்கதை)	...	35
துறவு	...	39
மனச்சாட்சி	...	47
நினைவுச் சுழல்	...	51
காதல்	...	55
குடும்பம்	...	57
பொழுதுபோக்கு	...	61
வளரும் இலக்கியம்		

★

பொன்னி சந்தா விவரம் : உள்நாடு, இலங்கை ஆண்டு ஒன்றுக்கு ரூ. 6—0—0; ஆறுமாதம் ரூ. 3—0—0. வெளிநாடு ஆண்டு ஒன்றுக்கு ரூ. 6-12-0; ஆறுமாதம் ரூ. 3—6—0 இலங்கைக்கு வி.பி.பி. உண்டு



பத்து ரூபாய் பரிசு

தலைப்புப் போட்டியில் கலந்து மகிழ்ந்த ஆயிரக்கணக்கான தமிழ் மக்களுக்குப் 'பொன்னி' ஏமாற்றத்தை அளிக்க விரும்பவில்லை. தமிழில் எழுதும் ஆர்வம் பெருகியிருக்கிறது. இந்நிலையில் 'பொன்னி' தன் சிறு சிறு தொண்டுகளால் நண்பர்களின் ஆர்வத்திற்கு ஒரு உருவம் தர முனைகிறது. இம்முயற்சியில் பங்குகொள்ள வாரீர் என்று அனைவரையும் அழைக்கிறோம்.

மேலட்டையில் நண்பர் ரெஸாக் சென்னையில் யாரும் இயல்பாகக் காணும் ஒரு கடற்கரைக் காட்சியை வரைந்திருக்கிறார். படம் உங்கள் கண்முன்னே இருக்கிறது. அதைப் பற்றிச் சிறு விளக்கவுரை (*write-up*) எழுதவேண்டும். 'பொன்னி'யில் **அரைப்பக்கம்** வரலாம். படத்திலுள்ள காட்சிகளின் வர்ணனையாக அது அமையலாம் அல்லது படம் தூண்டும் கருத்து விளக்கமாக இருக்கலாம். படத்தைப் பார்க்கிறீர்கள், உங்கள் உள்ளம் சிந்திக்கத் தொடங்குகிறது! கருத்தலைகள் மோதுகின்றன! கற்பனை கரைகாட்டுகிறது! உங்கள் எழுத்தோவியம் உருவாகிறது! படித்துப் பாருங்கள். படத்திற்குப் பக்கத்தில் உங்கள் விளக்கம் இடம்பெறுவது பொருத்தமா என்று தீர்மானியுங்கள். இந்த ஆராய்ச்சியில் வெற்றிகாணும் நண்பர்கள் தங்கள் விளக்கவுரைகளை **20—8—52**-க்குள் எங்கட்கு அனுப்பவேண்டும் சிறந்த விளக்கத்துக்கு **ரூபாய் பத்து பரிசு** அளிக்கப்படும்.

1. விளக்கவுரைகளை நூலஞ்சலில் (புக்போஸ்ட்) அனுப்பினால் போதும்; அத்துடன் கடிதங்கள் இணைக்கவேண்டாம்.
2. ஒருவர் ஒரு விளக்கவுரைக்கு மேல் அனுப்பக்கூடாது.
3. கீழ்வரும் கூப்பனில் தங்கள் பெயர் விலாசங்களை எழுதி விளக்கவுரையுடன் அனுப்பவேண்டும். கூப்பனின்றி வரும் விளக்கவுரைகள் கவனிக்கப்படமாட்டா.

பொன்னி 10-8-52 இதழ் விளக்கவுரைப்போட்டி

பெயர் : ....

முகவரி ....

....

....

தேதி :..................

தமிழைக் காப்போம்
இந்தியை எதிர்ப்போம்

தமிழுக்குத் தீங்கென்றால் சீறும் உள்ளத்தார் தமிழகத்தில் பல்லாயிரவர் என்ற உண்மை கடந்த ஆகஸ்டு முதல் நாளில் புலனாயிற்று. தமிழ்நாட்டு ரயில்நிலையங்களில் இந்தியில் பெயர் பொறித்தது தாங்கவொண்ணாக் கொடுமை! பெயர் பொறித்ததோடு நிற்காமல் இந்திக்கு முதலிடம் தந்தது தமிழர் உணர்வுக்குச் 'சவால்' விடுத்ததுபோன்ற காரியமேயாகும். இந்தி பரப்பப்படுகிறது என்பதற்கு ரயில்நிலையப் பலகை ஒரு எடுத்துக்காட்டு. எனவே தமிழர் எதிர்ப்பைப் புலப்படுத்த, இந்திப்பெயர் அழிப்புக் கிளர்ச்சி நாடெங்கும் நடந்தது மகிழ்வதற்குரிய செய்தியே! தமிழ்ப் பற்றுடையார் யாரும், அவர்கள் எக்கட்சியினராயினும், இக் கிளர்ச்சிக்கு ஆதரவு நல்கக் கடமைப்பட்டிருக்கிறார்கள். தமிழகமெங்குமுள்ள பல கருத்தினரும் இக்கோரிக்கையில் ஒன்றுபட்டுப் பணியாற்றி வருவது குறிப்பிடத்தக்கதாகும்.

இந்நிலையில் தமிழ்மக்கள் இந்தி ஆபத்தைப்பற்றி நன்கு தெரிந்துகொள்ளவேண்டும். அண்மையில் நடந்த நிகழ்ச்சிகள் எல்லாம் இந்தி ஏகாதிபத்யம் ஆக்கம்பெறுவதையே நமக்குச் சுட்டிக்காட்டுகின்றன. ரயில்வே அமைச்சர் கனம் லால்பகதூர் சாஸ்திரி பார்லிமெண்டில் 'இந்தியில்தான் பேசுவேன்; விருப்பமானால் கேள்; இல்லாவிட்டால் வெளியே போ' என்று வெறியாட்டம் ஆடியதை நாம் எளிதில் மறந்துவிட முடியாது. தபால் கார்டு, மணியார்டர் பாரம் முதலியவை எல்லாம் இந்தி

மயம் ஆக்கப்படுவதைச் சாதாரண காரியமாக நாம் மதிப்பிடமுடியாது. தபால் தலைகளிலும் நாணயங்களிலும் கரன்சிநோட்டுகளிலும் இந்திக்குத் தரப்படும் முதன்மை நமக்கு அச்சத்தையே தருகிறது. தபால் தலைகளில் கவிஞர்களின் படங்களை வெளியிட முயற்சியெடுத்தவர்கள் தமிழ்க் கவிஞர்களை ஒதுக்கியிருப்பது, எப்படி நிகழ்ச்சிகள் இந்திக்கு ஆதரவாக உருவாகின்றன என்று காட்டப் போதுமான ஆதாரமாகும். மொழிவாரி மாகாணப் பிரிவினையைக் கனம் நேரு முதலிய பெரிய தலைவர்கள் வன்மையாக எதிர்ப்பது அவர்கள் சிந்தனை தாய்மொழிகளின் வளர்ச்சிக்கு ஆதரவாக இல்லை என்பதையே விளக்குகிறது.

மேற்கூறிய செய்திகளால் இந்தி ஆபத்து நாளுக்குநாள் வளர்ந்து வருவது நமக்கு நன்கு விளங்குகிறது. இந்தி, ஆங்கிலத்தின் இடத்தைப் பிடிக்கும், தாய்மொழிகளின் செல்வாக்கைக் குறைக்கும் என்பதற்குப் பெரிய விளக்கவுரைகள் தேவை இல்லை. ஆங்கிலம் தமிழுக்கு எவ்வளவு தீங்கு செய்திருக்கிறது என்று பலருக்குப் புரியாது. ஆங்கிலம் அரசாங்க மொழியாகக் கோலோச்சியதால் தமிழின் நிலை தாழ்ந்தது; தமிழரின் நிலையும் தாழ்ந்தது. இத்தாழ்வினின்றும் இன்னும் தமிழ் மீளவில்லை; அதற்குள் அரசாங்க மொழியாக இந்தி வலம்வர[illegible]து. விடு[illegible]நாட்டில் [illegible] மொழி முதலிடம் பெறுவது இயற்கை. ஆனால் இங்கே விடுதலை கிடைத்தும் தாய்மொழியின் நிலை உயரவில்லை. பழைய எஜமானுக்குப் பதில் புதிய எஜமானன் என்ற முறையில் இந்தி அரசாங்க முத்திரை பெற்று உலவுகிறது; தமிழுக்கு என்றுமுள்ள அடிமைநிலைதான்! இந்தியால் தமிழ் கெடும், தமிழ் நாகரிகம் கெடும் என்னும் போது சிலர் வேடிக்கைப் பேச்சு என்று கருதிவிடுகிறார்கள். ஒரு அயல்மொழி என்னென்ன மாறுதல்களைச் செய்ய முடியுமென்று அவர்கள் அறியமாட்டார்கள். ஆங்கிலம் கடந்த இருநூறு ஆண்டுகளில் நம் எண்ணத்திலும் வாழ்விலும் எத்தனை மாறுதல்களைச் செய்துவிட்டிருக்கிறது! அம்மாறுதல்கள் நன்மைக்கா, தீமைக்கா என்பது வேறு கேள்வி. அவ்வாறே இந்தியைப் பரப்புபவர்களும் ஒரு தனி நாகரிகத்தைப் பரப்புகிறார்கள்; அவர்கள் பரப்புவது வெறும் மொழி மட்டுமல்ல; தங்கள் போக்குக்குச் சார்பான பெரிய சூழலையே அவர்கள் ஏற்படுத்திவிடுகிறார்கள்.

ஆகஸ்டு முதல் நாள் கிளர்ச்சி இந்தி ஏகாதிபத்யம் காண விரும்புவோருக்குப் பலமான எதிர்த்தாக்குதலாகும். அரசாங்கம் கிளர்ச்சியைக் கவனித்தவாறிருந்தது; அடக்குமுறையை ஏவவில்லை. இது தமிழுக்குப் பெரிய வெற்றியே! ஆனால் அழித்த இந்திப் பெயர்களைத் திரும்பவும் எழுதுமாறு சர்க்கார்

உத்தரவிட்டிருப்பதாகக் கூறும் செய்தி, மீண்டும் வேதாளம் முருங்கைமரம் ஏறிய கதையையே நினைவுபடுத்துகிறது. இந்த உத்தரவின் மூலம் சர்க்கார் தங்கள்போக்கில் மாறுதல் இல்லை என்று காட்ட எண்ணுகிறார்கள் போலும்! ஆனால் தமிழைக் காக்கும் கிளர்ச்சி வலுவடைய வலுவடைய அரசினர் தங்கள் திட்டங்களை மாற்றிக்கொண்டுதான் தீர வேண்டும். அந்நிலை விரைவில் வருவது திண்ணமெனக் கூற விரும்புகிறோம். மேலும் இந்தியை எதிர்ப்பதில் சென்னை ராஜ்ய மக்களோடு மற்றும் பல ராஜ்ய மக்களும் கூட்டணிசேரத் தயாராயிருக்கிறார்கள்; காங்கிரஸ்காரர்களும் காங்கிரஸ் பத்திரிகைகளும்கூட இந்தி ஆதிக்க வெறியை எங்கும் வன்மையாகக் கண்டித்து வருகிறார்கள்; ஓரளவுக்குச் சென்னை ராஜ்ய சர்க்கார்கூட இந்தியைப் பரப்பும் முயற்சிக்குத் தங்கள் கண்டனத்தைத் தெரிவித்துக் கொள்ளும் நிலையிலே இருக்க வேண்டும்—பெயர் அழிப்புக் கிளர்ச்சியின்போது அவர்கள் காட்டிய 'மௌனம்' கிளர்ச்சிக்கு ஆதரவான நடவடிக்கையாக ஏன் இருக்கக்கூடாது? இந்தியை எதிர்க்கவேண்டுமென்பதில் எந்தக் கட்சியினரும் பின்தங்கியவர்களாக இல்லை; எந்தப் பெரிய நபரும் இந்தி தமிழகத்துக்குவருவதை விரும்பவில்லை. இப்படி நல்ல சூழ்நிலை 'இந்தி எதிர்ப்பு'க்கு அமைந்திருக்கிறது. மக்களின் ஆர்வமோ அணைகடந்த வெள்ளம்; அது எதையும் சாதிக்கவல்லது.

இவ்வாறு தமிழகம் உள்ள நிலையில் மேலும் சில செய்திகளையும் நாம் உணரவேண்டும். இந்தியை எதிர்க்கும் உணர்ச்சி பரவியிருப்பதற்கேற்பத் தமிழைப் பேணும் உணர்ச்சி ஆக்கம்பெறவில்லை. தமிழ் வளர்ப்பதற்குச் சரியான திட்டமோ பணியோ தருவார் யாரும் இல்லை. தமிழை முறையாக வளர்க்கவேண்டுமென்று எண்ணுவாரே இல்லையென்றும் கூறிவிடலாம். தமிழ் மொழி தமிழருக்கு வாய்த்த நல்ல அரண். இந்த அரணைப் பழுதுபடாமல் பேணி வைத்துக்கொண்டால் தமிழ் மக்கள் எந்த வெளி ஆபத்துக்கும் அஞ்சவேண்டியதில்லை. தமிழகத் தலைவர்களுக்கும் அறிஞர்களுக்கும் இந்த உண்மை தெரியாததல்ல; எனினும் அவர்கள் கருத்து இவ்வகையில் ஏனோ இன்னும் படியவில்லை! பகைவரை ஒழிக்க நடத்தும் எந்தப் போராட்டமும் தக்க பாதுகாப்பரண் இல்லாவிட்டால் தோல்வியடைவது திண்ணம்; இந்தியை எதிர்க்கத் தமிழர் நடத்தும் போராட்டத்திற்கும் இவ்விதி பொருந்தும். தமிழைக் கனவிலும் கருதி, அதன் உயர்வுக்கு நாளும் முயல்வோரே, தமிழுக்கு வரும் தீங்கைப் புறங்காணச் செய்யமுடியும். தமிழ்மக்கள் இதனை நன்கு உணரவேண்டும். தமிழைக் காக்க நடக்கும் முயற்சியோடு இணைப்பாகத் தமிழை வளர்க்கும் பெரிய ஆக்க வேலைத்

உங்கள் கருத்து

'பொன்னி' தமிழ் மக்களின் பெருமதிப்புக்கும் இடைவிடா அன்புக்கும் ஆட்பட்டு நடந்துவரும் தமிழ்க் குடும்பப் பத்திரிகை. பொன்னியில் இடம் பெறும் பகுதிகள் குறித்தும் இடம் பெறவேண்டிய பகுதிகள் குறித்தும் நண்பர்களின் கருத்துரைகளைத் தெரிந்து கொள்ள விரும்புகிறோம். 'பொன்னி'யை வளர்க்கும் முயற்சியில் அக்கருத்துரைகள் பெரிதும் பயன் படுமாதலால் அனைவரும் சுருக்கமாகத் தங்கள் தங்கள் கருத்துகளை எழுதியனுப்ப வேண்டுகிறோம்.

திட்டம் நடைமுறையில் இருந்தாகவேண்டும். அப்போது தான் இந்தியை எதிர்க்க முடியும்; தமிழைக் காக்க முடியும்!

ஏதோ கிளர்ச்சி நடந்தது என்ற நிலை இனிக் கூடாது; தமிழ்ப் பற்று தமிழர் நெஞ்சத்தில் இடம்பெற்றிருப்பது உண்மையானால் ஆபத்து நீங்கும்வரை கிளர்ச்சி நடைபெற்றேயாகவேண்டும். ஒருவர் தனி முயற்சியாகவோ, ஒரு கட்சியின் வேலைத்திட்டமாகவோ இக்கிளர்ச்சி அமைந்தால் பயன் மிகக் குறைவாகவே கிடைக்கும். தமிழ் மக்களின் பொதுக் கிளர்ச்சியாக இது உருவாகவேண்டும்; ஒதுங்கி நிற்போர் தமிழுக்கு எதிரிகள் என்று உலகம் அறியச் செய்யவேண்டும். அடிமேல் அடி, போராட்டத்திற்கு மேல் போராட்டம், இந்தி தமிழகத்தை விட்டு ஓடும்வரை ஓயோம் என்று கிளர்ந்தெழ வேண்டும். ஆர்வமுள்ள தமிழ் மக்களே! தமிழ் நெஞ்சம் கொண்ட பெரியவர்களே! அரசியல் தலைமை பூண்ட பேரறிஞர்களே! எதற்கும் குதித்தெழும் இளைஞர்களே! உங்கள் அனைவருக்கும் ஒரு விண்ணப்பம்! எப்போதோ நினைத்தபோது கிளர்ந்தெழுவது என்ற நிலை மாற வேண்டும். தொடர்பான திட்டமின்றி, நோக்கத்தில் பற்றின்றி மக்களை அலைக்கழிக்கும்போக்குவளரக் கூடாது. மக்கள் உணர்ச்சியை வைத்து விளையாட எண்ணுவோருக்கு எச்சரிக்கை தரும் முறையில் மக்கள் விழிப்பாக இருக்கவேண்டும். தமிழ், தமிழருக்குக் கிடைத்துள்ள பெருநிதியம். அதனைப் பேணுவதில் மாறாத உறுதி வேண்டும். அப்போதுதான் தமிழ் மேல் வரும் பகையைச் சாடும் வன்மை பெறமுடியும். பயனையே குறிக்கோளாகக் கொண்ட தொடர்பான பெரிய பொதுத்திட்டம் தமிழ் காக்கவும் இந்தியை எதிர்க்கவும் தேவை; தமிழ் மக்களின் ஆர்வத்தை நன்கு பயன்படுத்த நேரிய வழி அதுதான்! மற்ற சூதாட்டங்கள் எதிர்பார்க்கும் வெற்றியைத் தேடித்தர மாட்டா. எனவே இந்திப் பெயர்களை அழிப்பதில் வெற்றிகண்ட தமிழ்மக்கள் இக் கட்டத்தில் நன்கு சிந்திக்க வேண்டுமென்று குறிப்பிட விரும்புகிறோம்.

வெறும் கலாட்டா!

பெயரில் என்ன இருக்கிறது?

சிந்தனைச் சிற்பி அழகுவேலர் தம் அறையில் குறுக்கும் நெடுக்குமாக நடந்துகொண்டிருந்தார். இரவு மணி பன்னிரண்டு ஆகியும் அந்தச் சிக்கலுக்கு அவர் விடைகாண இயலவில்லை. ஊர்ப் பிரச்னை முதல் உலகப் பிரச்னைவரை அவர் சிந்தனைக் கனலில் தவிடுபொடியாகும்; தீராத புதிர் என்பதே அவர் சரித்திரத்தில் இல்லை. அப்படியிருந்தும் அன்று ஒரு சிறு பிரச்னை அவர் மூளையைக் குடைந்தெடுத்துக் கொண்டிருந்தது. தம் பேரறிவாலும் கரைகாணமுடியாத நிலையில் அவர் தவித்தார்! விஷயம் ஒன்றும் பெரிதல்ல. அழகுவேலரின் அருமை மாணாக்கர் ஒருவர் தம் பிள்ளைக்குப் பெயரிடும் பொறுப்பை அவரிடம் ஒப்படைத்திருந்தார். அந்தப் பொறுப்பை விடிந்தால் நிறைவேற்றியாக வேண்டும். ஒரு நல்ல பெயர் கிடைக்காமல் அவர் தவித்த நிலைதான் அது! எப்படியோ இரவு சென்றது; பொழுதும் விடிந்தது. அழகுவேலர் முகமலர்ச்சியுடன் துயிலெழுந்தார்! தக்க பெயர் அவரிடம் சிக்கிவிட்டது போலும்! ஒருவாறு பெயரிடு விழா மிகச் சிறப்பாக நடந்து முடிந்தது.

மாதங்கள் ஓடின. தற்செயலாக அம்மாணாக்கர் அழகுவேலரை ஒரு நாள் சந்திக்க நேர்ந்தது. அழகுவேலர், குழந்தை காவற்பெண்டு (இதுதான் அன்று அவர் சூட்டிய திருப்பெயர்) நலம்பற்றி விசாரித்தார். மாணாக்கர் பதிலளித்தார்:

"குழந்தை சிட்டுவையா கேட்கிறீர்கள்? நலம்தான்"

அழகுவேலர் திடுக்கிட்டார். தாம் அளித்த பெயர் என்னவாயிற்று என்று அவர் அறியத் துடித்தார். மாணாக்கர் அவர் விருப்பத்தை யறிந்தவர் போல் மீண்டும் பேசினார்.

"நீங்கள் காவற்பெண்டு என்று பெயர் வைத்தீர்களா? அப்பொழுது அது நன்றாகத்தான் தெரிந்தது. ஆனால் குழந்தையை அந்தப் பெயரால் கூப்பிடவேண்டிய கட்டம் வந்தபோதுதான் தொல்லை ஏற்பட்டது. என் மனைவிக்குக் 'காவற்பெண்டு' என்று உச்சரிக்கச் சொல்லிக் கொடுப்ப

தற்குள் எனக்குப் போதும் போதுமென்ருகி விட்டது. என் தாயாரோ அந்தப் பெயரைக் காதில் வாங்கிக் கொள்ளவும் விரும்பவில்லை. இந்நிலையில் நான் மட்டும் அந்தப் பெயரால் குழந்தையை எப்படி அழைப்பது? அப்புறம்தான் எங்கள் வீட்டுச் சமையற்காரன் 'சிட்டு' என்று பெயர் சூட்டினுன்; நாங்களும் வேறு வழியின்றி ஆமோதித்தோம்"

அழகுவேலர் மயக்க நிலையில் இருந்தார்! அவர் ஆராய்ச்சி அறிவுக்கு எத்தனை பெரிய சம்மட்டி அடி!

* * *

'பெயரில் என்ன இருக்கிறது?' எளிதாகப் பலர் இவ்வாறு சொல்லிவிடுகிருர்கள். ஒவ்வொரு பெயரிலும் ஒரு பெரிய வரலாறு இருக்கிறதென்றே சொல்லவேண்டும். பெயர் ஆளை அடையாளம் காட்டுகிறது. அத்துடன் அதன் பணி முடிந்துவிடவில்லை; அங்கேதான் தொடங்குகிறது என்று சொல்லவேண்டும். குழந்தைகளுக்குப் பெயர்வைப்பதில் தான் நாம் எத்தனை விதங்களைக் கையாள்கிறோம்! அரசியல் போராட்டங்கள் உச்சநிலையில் இருக்கும்போது பிறக்கும் நம் குழந்தை ஒரு அரசியல் தலைவர் பெயரைப் பெறுவதில் விந்தை என்ன! காந்தி, நேரு, அழகிரி என்ற பெயர்களை இவ்வரிசையில் தானேசேர்க்க வேண்டும்! சிலருக்குச் சரித்திரப் புத்தகத்தைப் புரட்டிப் பார்த்துப் பெயர் வைத்தால் தான் திருப்தி! ராஜேந்திரன், திருமாவளவன் முதலியவை அப்படி உதிர்ந்தவைகளே. குல தெய்வத்தின் பெயரை வைக்க வேண்டுமென்று எண்ணுவோர் ஏராளம். ஒரு ஊரிலுள்ள அனைவருக்கும் குலதெய்வம் ஒரே தெய்வமாக அமைந்துவிடும் சந்தர்ப்பமும் உண்டு. அப்பொழுதுதான் வேடிக்கை விரிவடைகிறது. அந்த ஊரில் பிறக்கும் குழந்தைகளுக்கெல்லாம் அழகப்பன் என்றும் அழகம்மை என்றும் பெயர் வைத்துவிட்டால், ஊர் முழுவதும் ஆணுயிருந்தால் அழகப்பன், பெண்ணுயிருந்தால் அழகம்மைதான்! அந்த ஊருக்கு வெளியூரிலிருந்து ஒருவர் வருகிருர்; தம் நண்பர் அழகப்பனை அவர் காணவேண்டும். அவர் எப்படித் திண்டாடுவார்? பெயர் மட்டும் அடையாளம் காட்டாது. ஆள் நிறம், வயது, உயரம், குணம் முதலியவை தெளிவான பின்னர்தான் உலகம் ஒரு நிலைக்கு வரமுடியும்; தேடிவந்த அழகப்பனை அவர் காணமுடியும்! இது ஊருக்குள் நடக்கும் கூத்து. ஒரே வீட்டுக்குள் நடக்கும் கூத்து இன்னும் வேடிக்கை. குழந்தைகளுக்குத் தாத்தா பெயர் வைக்கவேண்டுமென்பது மரியாதையான பழக்கம்! இம்மரியாதை சமயங்களில் எப்படி முடிகிறது என்று பார்ப்பது விநோதமே! ஒருவருக்கு நான்கு பிள்ளைகள்—அந் நான்கு பிள்ளைகளுக்கும் ஒவ்வொருவருக்கும் ஒரு பிள்ளை பிறக்கிறது; தாத்தா ஒருவர்தான்! பிறந்திருக்கும் குழந்தை நானகு! எத்தனை குழந்தை பிறந்தால்தான் என்ன? மரியாதையையும் பழக்

கத்தையும் விட்டுவிட முடியுமா? குப்புசாமித் தாத்தாவுக்கு நான்கு பேரன்மார்கள்! எல்லோரும் குப்புசாமிகள்! பெயர் வைத்து என்ன பயன்? பெரிய குப்புசாமி, சின்னக் குப்புசாமி, நடுக் குப்புசாமி என்று அடைமொழியிட்டு அழைக்கவேண்டியதுதான்! மரியாதை இப்படி முடிகிறது! தமிழார்வம் காரணமாக எல்லோரும் தமிழில் தங்கள் பெயர்களை மாற்றிக்கொண்டு வருகிறார்கள் அல்லவா? எங்கே பார்த்தாலும் அன்பழகன், அறிவழகன், மதியழகன் என்ற பெயர்கள் நடமாடுவதைப் பார்க்கிறோம். ஒரு கழகத்தின் உறுப்பினர்கள் பட்டியலைப் பார்த்தேன் — மொத்தம் நூறு பேரில் அன்பழகன் என்ற பெயர் மட்டும் அறுபது இருந்தது என்றால் பார்த்துக்கொள்ளுங்களேன்! காப்பியடிப்பதில் நம்மவர்கள் நிபுணர்கள்! 'ராமசாமி' என்று பெயர் வைக்கும்போதும் ஆயிரக் கணக்கில் 'ராமசாமிகள்' இருந்தார்கள். 'அன்பழகன்' என்று மாறும்போதும் ஆயிரம் 'அன்பழகர்கள்' இருக்கிறார்கள்! இப்படியொரு நிலை! மதத்தை ஒட்டிச் சாதியை ஒட்டி வரும் பெயர்களும் அப்படி அப்படித்தான்!

மனிதனுக்குப் பெயர்வைப்பதில் இத்தனை சங்கடங்கள் என்றால் தெருக்களுக்குப் பெயர்வைப்பதிலும், ஊர்களுக்குப் பெயர்வைப்பதிலும் பெரும் சங்கடங்கள் நேர்வதில் ஆச்சரியமில்லை. அண்மையில் புதிதாக ஏற்பட்ட ஒரு ரயில்வே ஸ்டேஷனுக்குப் பெயர்வைப்பதில் இப்படி ஒரு தகராறு வந்தது. அந்த ஸ்டேஷன் இரண்டு ஊர்களுக்கு மத்தியில் இருந்தது. அந்த ஸ்டேஷனுக்குத் தங்கள் தங்கள் ஊர்ப் பெயரையே வைக்கவேண்டுமென்று இரண்டு ஊர்க்காரர்களும் பெரும் போட்டாபோட்டி நடத்தினார்கள். அந்தப் போட்டியை எப்படித் தீர்ப்பது என்று ரயில்வே அதிகாரிகளுக்கே புரியவில்லை. கடைசியாக இரண்டு ஊர்ப் பெயரையும் சேர்த்துவைத்து விவகாரத்தை முடிக்கவேண்டியதாயிற்று! ஊர்ப் பெயர் இப்படியானால் ஓட்டல்களில் சாப்பிடும் பண்டங்களின் பெயர்கள் இன்னும் வேடிக்கை! ஒரே தயாரிப்பு! அதற்கு ஒவ்வொரு ஓட்டலும் ஒவ்வொரு பெயர் கொடுத்திருக்கும்! ஒரு நாள் இருந்த பெயர் மறுநாள் இராது! நமக்குப் புதுப் புதுத் தின்பண்டங்களை ஓட்டல்காரர்கள் எப்

> 'நான் மன்னிக்கலாம்; ஆனால் நான் மறக்கமுடியாது' என்பது 'நான் மன்னிக்கமுடியாது' என்பதன் மறைபொருள்தான்!
>
> —ஹென்ரிவார்ட் பீச்செர்.
>
> இன்றைய மனிதனுக்கு மழையை உண்டாக்குவதற்குரிய மேதை இருக்கிறது; ஆனால் அதைத் தடுப்பதற்கு வேண்டிய பொது அறிவு அவனிடம் இருப்பதில்லை.
>
> —எல்டன் பீடர்ஸன்

படி வழங்குகிறார்கள், பாருங்கள்! நமக்கும் புதுப் பலகாரம் சாப்பிட்ட திருப்தி ஏற்பட்டு விடுகிறது; அதுதான் ஆச்சரியம்!

* *
*

பெயர்களின் விநோதத்தை இன்னொரு சிறு நிகழ்ச்சியைச் சொல்லாமல் முடிக்கக்கூடாது. என் நண்பர் ஒருவர் தம் வீட்டுக்குத் தந்தி விலாசம் பதிவு பண்ண எண்ணினார். தன் குழந்தை பெயரில் அவருக்கு அளவுகடந்த அன்பு! எனவே 'சம்பத்' என்று தன் தந்தி விலாசத்தைப் பதிவுசெய்து கொள்ளுமாறு தபாலாபீசுக்கு மனுப்போட்டார். அவர்கள் அந்த மனுவைத் திருப்பியனுப்பி "சம்பத் என்பது சிறப்புப் பெயர். (*Proper Noun*) எனவே இப்பெயரில் தந்திவிலாசம் பதிவுசெய்ய முடியாது" என்றுகாரணம்காட்டி விட்டார்கள். நண்பர் பெரிய அதிகாரிகளுக்கு எழுதிப்பார்த்தார்; அவர்களும் இதேபதிலைத்தான் வெளியிட்டார்கள். புதுப்பெயர் ஆலோசனை நடந்தது. 'செல்வம்' என்ற புதுப் பெயர் மனுவுடன் தபாலாபீசுக்குச் சென்றது; தந்தி விலாசம் பதிவாயிற்று! எந்தவிதத் தடையும் இல்லை! 'சம்பத்' என்ற பெயரை மறுத்த அதே போஸ்ட்மாஸ்டர் எப்படிச் 'செல்வம்' என்ற பெயரை ஏற்றுக் கொள்ளலாம் என்கிறீர்களா? அதுதான் இன்று வரை என் நண்பருக்குப் புரியவில்லை! 'செல்வம்' என்பது ஒரு ஆளைக் குறிக்கும் சொல் (சிறப்புப் பெயர்) அல்ல என்று அந்த அதிகாரி எண்ணும்போது அவரை யார் தடை செய்யமுடியும்?

* *
*

ஆகஸ்டு முதல் தேதி தமிழ்நாடு முழுவதும் இந்திப் பெயர் அழிப்பு விழா நடந்திருக்கிறது. தமிழ்நாட்டில் ரயிலடியிலும் அஞ்சல் நிலையத்திலும் பெயர் இந்தியில் ஏன் இருக்கவேண்டும்? தேவையில்லாத ஆக்கிரமிப்பு! ஊருராகத் தார் பூசினார்கள்! இந்திப் பெயரை அழித்தார்கள்! மறைத்தார்கள்! ரயில்வே அதிகாரிகளும் சர்க்காரும் எப்படி அழிக்கிறார்கள் என்று கவனமாகப் பார்த்துக்கொண்டிருந்தார்கள்! இப்பொழுது அழித்த இடங்களிலெல்லாம் திரும்ப எழுத ஆரம்பித்திருக்கிறார்கள்! அழித்த இடங்களிலெல்லாம் திரும்ப எழுதுவதால் சர்க்காருக்கு என்ன செலவாகும் என்று கணக்குப் போட்டுப் பார்க்கிறார் ஒரு கம்யூனிஸ்ட் நண்பர்! இந்தியைப் பரப்பும் 'புனித' முயற்சியில் எத்தனை லட்சம் செலவானால்தான் என்ன? 'பெயரில் என்ன இருக்கிறது?' என்று தப்பித்தவறிக்கூடச் சொல்லாதீர்கள்! கேவலம் ஒரு ஸ்டேஷன் பெயர்தான்! அதை அழிப்பதில் எவ்வளவு ஆர்வம்! அழித்ததைத் திரும்ப எழுதுவதில் எவ்வளவு அக்கறை! பெயருக்குள்ள சக்தி மகத்தானது.

இனிதே இனிதே

வாணிதாசன்

பாடுவோம் வாராய்! பாடுவோம் வாராய்!
கோடுயர் மரத்தில் பாடுங் குயில்போல்
பாடுவோம் வாராய்! பாடுவோம் வாராய்!
வலக்கை இடக்கை உலக்கை மாற்றிச்
சலசலத்தோடும் அருவி தந்த
குலைசெந் நெல்லைக் குற்றுவோம் வாராய்!

மாமழை வாழ்க! மாமழை வாழ்க!
மாமழைக் குயிர்தரும் ஞாயிறு வாழ்க!
காமர் நிலவும் கடலும் மலையும்
பாடுவோம் வாராய்! பாடுவோம் வாராய்!

அன்னம் நாணும் மென்னடைப் பாவாய்!
பொன்செய் மேனி! இன்சுவை அமிழ்தே!
நன்செய் விளைவே! நகைமுக நிலவே!
இன்சொற் பாட்டோன் றியம்புக முன்னே—

கரும்புகை யொத்த பெரும்பெயல் ஓய்ந்தது;
கரும்பு விளைந்தது; விளைந்தது கழனி;
அரும்பு புதரெலாம் அரும்பி மலர்ந்தது;
விருந்தே வாழ்க பெருந்தேன் மலையே!

நகுமே கேட்போர்! நகுமே தலைவி!
முகிலிடைப் பாயும் முழுநில வேயாம்
அகில்வளர் குன்றத் தமைந்த தேனடை!
மிகுதொலை வுளதாம்! விளைவால் பயனென்?

பெயலால் நிறைந்த பெருமலைப் பொய்கை
அயலுள மரத்தின் இலைஅடர் பாறையை
வயற்கரும் பழித்து வருமத யானை
மயலால் தழுவும்; வாழிய காதல்!

காதல்! காதல்! காதல் இனிது!
காதல் எதையும் கடந்தது காதல்!
காதல் உடல்உயிர் கண்ணுக் கினிது!
காதல் இலையேல் சாதல் இனிதே!

கொன்ற விலங்கின் ஈனக் குரலைக்
குன்றெதிர் ஒலிக்கும் குறுஞ்சுனை யருகில்
நின்று பிணையுடல் நீள்கலை வருடும்;
என்றும் காதல் இனிதே தோழி!

ஈருடல் ஒருயிர் இணைந்தால் இனிதே!
வார்புனல் செடிபோல் வளர்ந்தால் இனிதே!
கூர்விழி ஒளிபோல் கூடில் இனிதே!
வேர்விடாக் காதல் வீண்பேச் சன்றோ?

செக்கர் சிந்திய செந்நிற ஒளியில்
கொக்குப் பேடை குரல்விளி காட்டும்;
அக்கம் பக்கத் தடர்கிளைப் புட்கள்
செக்கச் சிவக்கும் தீச்சுடர் மாலை!

செக்கச் சிவக்கும் தீச்சுடர் மாலை
மிக்கு காதலர் மேனியைத் தீய்க்கும்!
மிக்கு காதல் மேவா தோர்க்கே
அக்கறை யேனோ செக்கர் மீதே?

என்றுநான் வெட்டி இடைஇடைப் பாடக்
குன்றெழு மதியக் கோதை நல்லாள்
காதல் இனிதே! காதல் இனிதே
கண்ணொடு கண்கள் கவ்வும் காதல்
இனிதே! இனிதே! எவற்றினும் இனிதே!
என்றனள்; நானோ எடுத்துரை என்றனன்.

"சிற்றில் அமைத்தே சிறுசோறு படைக்க
உண்டான்; இன்பம் உண்டான்; சிற்றில்
அழித்தான்; என்னை அழுதிடச் செய்தான்;
பட்டி மகனென் பள்ளிப் பாட்டையில்
எட்டி யிருந்தே இளநகை பூத்தான்;

எட்டின நாட்கள்; ஒட்டின விழிகள்;
வந்தான்; போனன்; வந்துகொண் டிருந்தான்;
சந்திலோர் நாளென் சிந்தையைப் பறித்தான்;
காலையும் மாலையும் கடன்கொடுத் தான்போல்
மாலையில் வருவான்; காலையில் வருவான்;
குரலால் விழியால் குறிப்பை அனுப்புவான்;
திரையிட்ட சன்னல் மறைவால் பார்ப்பான்;
கதவின் இடுக்கில் கண்ணொளி பாய்ச்சி
இதயத் துள்ளே ஏற்றினன் அன்பை!

பொய்கை ஆடப் புறப்பட்டேன் ஒருநாள்;
கையை வீசிக் கருத்தில் லான்போல்
மைதவழ் மாமலைச் சாரலின் ஓரம்
நடந்தான்; அவன்விழி நடந்ததென் னருகில்!

குடத்தை இறக்கிக் குனிந்தேன்; அங்கே
மடமட வென்று வந்தான்; நின்றன்;
'அடடா கொண்டையில் அமைந்த பூவில்
எத்தனை வண்டுகள்! எத்தனை வண்டுகள்'
எனச் சொலிச் சிரித்தான்; என் விழி பறித்தான்;
கைத்தலம் வைத்தென் கரிய கூந்தலைத்
தொடுவான் போலத் தொட்டான் மெய்யை!

நெருப்பால் அவனை எரிப்பாள் போலச்
சொன்னேன் சுடுசொல்; சொன்னசொல் அறியேன்;
சிரித்தான்; என்னை இறுக அணைத்தான்;
"விடு! விடு!" என்றேன் வெறுப்பாய்; ஆனல்
"தொடு! தொடு!" என்றதென் துணிவிலா நெஞ்சம்!

என்னென் றுரைப்பேன்! என்னென் றுரைப்பேன்!
பொன்னெழில் சிந்தும் புதுஞா யிறுபோல்
முன்னர் தோன்றும் அவன்முகப் பொலிவு!
குறிஞ்சி நாட்டுக் குன்றம் அவன்தோள்!
குளிர்தீ அவன்விழி! கொம்புத்தேன் சொற்கள்!
அளிசெய் உள்ளம்! அடங்கார்க் கோ புலி!
தொட்டான் என்னை; தொட்டான் உளத்தை!
கட்டுக் கடங்கா முரட்டுக் காளையின்
இருகை அணைப்போ இனிதே! இனிதே!"

என்றனள்; அவன்வாழ் இடத்தை நோக்கினள்.
ஒன்றிய உளத்துக் காதல்
இனிதே! இனிதே! எவற்றினும் இனிதே!!

காதலின் முடிவு

டர்பன் ச. மு. பிள்ளை

“கோடை. அவர் சிறையிலிருந்தார். நான் வீட்டிலேயே ஆறு மாதகாலமாய், என் நல்ல காலத்தை எதிர்நோக்கிக் காத்துக்கொண்டிருந்தேன். ‘அவன் விடுதலையடைந்து மீண்டும் உன்னிடம் வந்து சேருவான்’ என்று அவர்கள் சொல்வார்கள். அதற்கு நான், “அந்த நாள் எப்பொழுது விடியப்போகிறது? அந்த இன்பச் சூரியன் என்று உதயமாகப்போகிறான்? நடுவே நிற்கும் பாழான பயங்கர இரவு எப்போது மடியும்? அந்த நல்ல மணியின் ஓசை எப்பொழுது கேட்கும்?” என்பேன். இராசதானி நகரைப் பார்ப்பதற்கு எனக்குச் சமயம் வாய்த்தது. அவரை அங்கே சிறை வைத்திருந்தார்கள். அங்கேதான் விசாரணையும் நடந்துவந்தது. ஆகையால் நான் அங்கே போய்ச் சேர்ந்தேன். சிறையிலே அறைகள் பயங்கரமாயிருந்தன. இரவு பகலாய் அந்தப் பயங்கரமான குறுகிய அறைகளிலேதான் அவர் வைக்கப்பட்டிருந்தார். எனது காதலரைக் கண்டேன்.

“அவர்கள் உங்களுக்குக் கட்டில் கொடுத்திருக்கிறார்களா?” என்று என் கணவரைக் கேட்டேன்,

“என்ன, நீ பேதையாய் இருக்கிறாயே? இங்கே கட்டில் எதற்கு?” என்றார்.

“அப்படியென்றால் நீங்கள் எவ்வாறு படுத்து உறங்குகிறீர்கள்?” என்று நான் மிகவும் வியப்புடன் கேட்டேன்.

“தரையிலே ஒரு கம்பளியைப் போட்டு அதன்மேல் படுத்து உறங்குகிறேன்” என்றார்.

பின்னர், நான் வீட்டுக்குத் திரும்பி வந்தேன். மாடியில் மற்றவர்கள் கட்டில்களில் படுத்துத் தூங்குகிறார்கள். வீட்டின் அடித் தாழ்வாரத்தின் அருகே இருக்கும் அறைக்குச் சென்று, ஒரு கம்பளியைத் தரையில் விரித்துப் படுத்துக்கொண்டேன்.

திரும்பத் திரும்ப நான் சந்திரனைப் பார்த்தேன். ஆனால் மறுமொழியொன்றும் எனக்குக் கிடைக்கவில்லை. மீண்டும் நான் படுத்துக்கொண்டேன். கொசுக்கள் என்னைக் கடுமையாகக் கடித்தன. மறுநாள் இரவிலும் அதே அறையில், அதே படுக்கையில் படுத்துக்கொண்டேன். மூன்றாம் நாள் இரவிலும் கொசுக்களின் தொல்லை ஒழிந்தபாடில்லை. அச்சமயம் எனது நாத்தி—கணவனுடைய சகோதரி திடீரென்று என் முன்னே நின்றாள்.

“உன்னை நீயே கொன்று கொள்வது நலம் என்று நீ தீர்மானம் கொண்டிருக்கிறாயா?” என்று என்னைக் கேட்டாள்.

எல்லா விதமான அச்சு வேலைகளுக்கும் எங்களைக் கலந்து ஆலோசியுங்கள். குறித்த தவணையில் கலைப்பண்பு, புதுமை, உயர்வு திகழ அவற்றைத் திட்டமிட்டு முடிக்கும் பொறுப்பை ஏற்றுக்கொள்ள நாங்கள் காத்திருக்கிறோம். எங்கள் அச்சகம் எல்லா வசதிகளும் பொருந்தி முதல்தரமான முறையில்
— அமைக்கப்பட்டு இயங்குகிறது —

...

...

...

...

...

...

...

...

...

...

விவரங்கட்கு:

பொன்னி அச்சகம்

16, சேனியம்மன் கோவில் தெரு.

தண்டையார்ப்பேட்டை — சென்னை — 21

விருந்து வரிசையில்

12 உலக இலக்கியங்கள் 12

1. இந்துலேகா	...	மலையாள நாவல்
2. மாமனார் வீடு	...	ஆங்கில நாடகம்
3. துன்பக்கேணி	...	ஜப்பானியக் கதை
4. நூர்ஜஹான்	...	வங்காளி நாடகம்
5. கைக்கடிகாரம்	...	ரஷ்யக் கதைகள்
6. முத்துமாலை	...	சீனக்கதைகளும் நாடகமும்
7. தாயகத்தின் அழைப்பு	...	ஆங்கில நாவல்
8. அறக்கோட்டம்	...	இந்தி நாவல்
9. மாலதி – மாதவன்	...	சமஸ்கிருத நாடகம்
10. கடல்மறவர்	...	பிரஞ்சு நாவல்
11. கல்மனிதன்	...	ஸ்வீடிஷ் கதைகள்
12. ஆண்டிமடம்	...	ஆங்கில இசை நாடகம்

மேற்குறித்த 12 புத்தகங்களும் ரூ 6/— அனுப்பினால் தபாற் செலவின்றி அனுப்பப்படும். தனித்தனியே பெறுவதற்கு பிரதி 8 அணா.—தபாற் செலவு 1 அணா.

பொன்னி லிமிடெட்

த. பெ. எண். 1165 :: சென்னை — 21